THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

Thursday, the 23rd February 1961.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS

Inspector-General of Prisons

* 2 *S.N.Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the basis on which promotion was made to the post of the Inspector-General of Prisons, recently; and

(*b*) the reasons for selecting an officer from the Police for this post?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) The recent appointment for the post of the Inspector-General of Prisons was not made by promotion. The seniormost Deputy Inspector-General of Police was appointed on transfer as he was considered suitable in all respects for filling the post of Inspector-General of Prisons.

SRI M. KALYANASUNDARAM : இதற்கு முன்பு ஜெயில் இலாகாவிலே அதிக சர்வீஸ் உள்ள அதிகாரிகளை இந்தப் பதவிக்கு உயர்த்துவது வழக்கம். அதற்குப் பிறகு ஐ.ஏ.எஸ் அதிகாரிகளாக இருக்கவேண்டுமென்று சொல்லி, ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் நியமிக்கப்பட்டார்கள். இந்த இரண்டு முறைகளையும் கைவிட்டு விட்டு, இப்பொழுது ஒரு போலீஸ் அதிகாரியை உயர்த்தி இருப்பதன் காரணம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : முன்பு ஐ.எம்.எஸ். சூப்பிரண்டெண்டுகளாக இருந்தபொழுது, அவர்களில் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டு இன்ஸ்பெக்டர்-ஜெனரலாக நியமிக்கப்பட்டு வந்தார். ஐ.எம்.எஸ். முடிந்த பிறகு சென்ற சில ஆண்டுகளிலே ஐ.சி.எஸ்-லிருந்து நியமிக்கப்பட்டார்கள். அதற்குப் பிறகு ஐ.ஏ.எஸ்.-லிருந்து நியமிக்கப்பட்டு வந்தார்கள். சம்பந்தப்பட்ட ஜெயில் சர்வீஸ் விதிகளிலே சூப்பிரண்டெண்டுகளிலிருந்து பிரமோஷன் மூலம் செய்யலாமென்று இருக்கிறது. அல்லது ஏதாவது சர்விசிலிருந்து டிரான்ஸ்பர் பண்ணலாம். பிரமோஷன் பண்ணுவதற்குத் தகுதியானவர்கள் இருப்பதாகத் தெரியவில்லை. ஆதலால் டிரான்ஸ்பர் மூலம் ஒரு டி. ஐ. ஜி.-ஐப் போடுவது தகுதியாக இருக்குமென்று அரசாங்கம் கருதி செய்யப்பட்டிருக்கிறது.

[23rd February 1961

SRI M. KALYANASUNDARAM : இப்பொழுது சிறை இலாகா சூப்பிரண்டெண்ட் பதவிகளுக்கு நேரடியாக படித்தவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அப்படியிருக்கும்பொழுது அதிலேயிருந்து பிரமோட் பண்ணுவதற்கு அதிகாரிகள் இல்லையா ? யாராவது அதிகாரிகள் பரிசீலிக்கப்பட்டார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : வேறு ஒன்றும் பரிசீலிக்கப்படவில்லை. நான் முன்பு கூறியதுபோல், பிரமோஷன் மூலம் செய்யலாம், டிரான்ஸ்பர் மூலம் செய்யலாமென்று விதி இருக்கிறது. டிரான்ஸ்பர் மூலம் செய்யலாமென்ற விதி கையாளப் பட்டது.

SRI A. A. RASHEED : Sir, is it not a fact that the Inspector-General of Prisons is appointed for a specific period and if so what is the specific period for which the present incumbent was appointed?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There is no such thing as specific period for which the Inspector-General of Prisons is appointed.

SRI M. KALYANASUNDARAM : இப்பொழுது ஜில்லாக்களில் பல தொழில்கள் நடைபெறுகின்றன. ஜில்லா அதிகாரிகளை கண்காணிப்பது மட்டுமல்லாமல், நிர்வாக அனுபவமும் இருக்க வேண்டும். போலீஸ் அதிகாரிக்கு அப்பேர்ப்பட்ட நிர்வாக அனுபவம் உண்டா ? அப்படியில்லை என்றால் ஏன் அவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சென்ற சில ஆண்டுகளிலே ஐ.சி.எஸ்., ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் நியமிக்கப்பட்டு வந்தார்கள். அவர்களுக்கு என்ன தகுதியிருக்கிறதோ, அந்தத் தகுதி இந்தப் போலீஸ் அதிகாரிக்கும் இருக்குமென்று கருதி நியமித்திருக்கிறது.

Family income

*384 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் அளிப்பாரா—

(அ) நம் மாநிலத்தில் குடும்பங்களின் வருவாயை கணக்கெடுக்கும் உத்தேசம் உண்டா ?

(இ) அப்படியானால், எந்தெந்த இடங்களில் முதலில் ஆரம்பிக்கப்படும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

23rd February 1961]

SRI S. M. ANNAMALAI : இப்பொழுது நம் மாகாணத்தில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் முடியக்கூடிய நிலையில் இருக்கிறது. முதல் ஐந்தாண்டுத் திட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னால் ஒரு குடும்பத்தின் வருவாய் எவ்வளவு இருந்தது? இந்த இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலம் வருவாய் அதிகரித்திருக்கிறதா என்று கணக்குப் பார்க்க சர்க்கார் ஏன் முன் வரவில்லை?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்பொழுது அவ்வாறு செய்வதற்கு அவசியமில்லை என்று அரசாங்கம் கருதுகிறது.

Bulls

*388 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of breeding bulls purchased through the Hindustan Livestock Agency, Kilpauk, in 1960;

(*b*) the number purchased at the open market;

(*c*) the procedure adopted in fixing the prices for the open market purchase; and

(*d*) the average cost per animal for the purchases made through the Agency and open market respectively?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Two hundred and fifty-nine (Murrah buffalœ bulls).

(*b*) Five hundred and sixteen bulls (all white cattle).

(*c*) Bulls purchased from private breeders are collected in a place, inspected by the officers of the department and prices fixed on the spot taking into consideration the age, quality, conditions of the bulls and market rates, etc. Murrah buffalœ bulls are purchased from the breeding tracts in the Punjab after calling for competitive quotations and subject to certain conditions stipulatel by the Department about quality, age, etc.

(*d*) Rs. 785 and Rs. 714 respectively.

முரு பொலிகாளைகளை இந்துஸ்தான் லைவ்ஸ்டாக் அல்லது பின்னர் பாரத் லைவ்ஸ்டாக் எஜென்சி என்று வழங்கப்பட்ட ஸ்தாபனத்திடமிருந்து ரூ. 785 விதம் வாங்கப்பட்டது. மார்க்கெட்டில் வாங்கின விலை ரூ. 714. அதற்குமேல் ஒன்றோடொன்று ஒப்பிட முடியாது. ஏனென்றால் ரூ. 785 விதம் வாங்கினது முரு பொலி காளைகள். மார்க்கெட்டில் வாங்கினது "ஒயிட் கேட்டில்" (white cattle). இதுதான் வித்தியாசம்.

[23rd February 1961

Tea and coffee

* 389 Q.—SRI V. K. KOTHANDARAMAN : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதில் அளிப்பாரா—

1960-ல் நமது ராஜ்யத்தில் பாக்கு, தேயிலை, காப்பி, ரப்பர் முதலியவை எத்தனை ஏக்கரா உள்ளன—ஜில்லாவாரியாக ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The particulars for the year 1959–60 are not available. A statement [a] showing the districtwise figures of the area under these crops in the Madras State during the year 1958–59, is placed on the table of the House.

SRI V. K. KOTHANDARAMAN : பெரிய அளவுக்கு லாபமும், அந்நிய நாட்டுச் செலாவணியைப் பெற்றுத் தரக்கூடியதுமான ஒரு தொழிலாக இருக்கக்கூடிய இந்தப் பாக்குத் தொழிலையும், ரப்பர் வளர்க்கக்கூடிய தொழிலையும் சர்க்கார் எடுத்து நடத்த உத்தேசம் உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சர்க்காரே எடுத்து நடத்த உத்தேசமில்லை. ரப்பர் பயிரிடுவதைப் பொறுத்தவரையில், சர்க்கார் ஓரளவுக்கு இதை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

SRI V. K. KOTHANDARAMAN : இந்த நான்கு திட்டங்களையும் மேலும் அதிகப்படியாக விஸ்தரிப்பதற்கான திட்டம் ஏதாவது உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மேலும் இதை விஸ்தரிக்கப்படுவதைப்பற்றி அப்போதைக்கப்போது பரிசீலனை செய்யப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன.

SRI T. T. DANIEL : May I know, Sir, whether the Government have got any scheme for rejuvenating the vast acres of abandoned tea and coffee estates in the transferred territory?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I may tell the hon. Member that there is no such specific scheme now as is referred to by the hon. Member.

Gallantry awards

* 410 Q.—SRI S. M. ANNAMALAI : கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வீரச்செயல் செய்கிறவர்களைப் பாராட்டி அரசாங்கம் பரிசு வழங்குகிறதா ?

---

a Printed as Appendix I on page 387 infra.

23rd February 1961]

(இ) அப்படியானல் இவ்வாண்டு எவ்வளவு பணம் வீரச் செயலுக்காகத் தரப்பட்டது?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) The Government of India, Ministry of Defence have from the 15th August 1947 instituted three gallantry awards know as " Param Vir Chakra ", " Maha Vir Chakra " and " Cir Chakra " for gallantry in combat. This Government have agreed to make cash awards at the rates of Rs. 4,000, Rs. 2,000 and Rs. 1,000 to military personnel belonging to this State who are awarded respectively the " Param Vir Chakra ", the " Maha Vir Chakra " and the " Vir Chakra ".

(b) No gallantry awards were made by the Government of India during this year and hence no cash award was also made by this Government during this year.

SRI S. M. ANNAMALAI : அந்தப் பணமானது யார் யாருக்குக் கொடுக்கப்பட்டது என்று சொல்ல முடியுமா? எந்தெந்த வீரச் செயலுக்குத் தரப்பட்டது என்று சொல்ல முடியுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : அங்கத்தினருடைய கேள்வி இந்த வருஷத்திலே எவ்வளவு பேருக்குக் கொடுக்கப் பட்டது என்று. இந்த வருஷத்திலே ஒன்றுமில்லை என்று சொன் னேன். மற்ற வருஷங்களுக்குத் தனிக்கேள்வி போடவேண்டும்.

SRI N. R. THIAGARAJAN : முந்தா நாள் திருச்சியில் நடந்த ஒரு பொதுக் கூட்டத்தில் மேடை மீது ஏறி ஒரு வாலிபர் கடமையையும், கண்ணியத்தையும், கட்டுப்பாட்டையும் காற்றில் பறக்கவிட்டு விட்டு காலிலுள்ள ஒரு வஸ்துவால் ஒரு கவிஞரையும் ஒரு பார்லிமெண்ட் மெம்பரையும் கன்னம் சிவக்க நையப்புடைத் தாரே அந்த கலகக் காளைக்கு பரிசு கொடுப்பீர்களா?

MR. SPEAKER : இந்தக் கேள்வி மூலகேள்விக்கு உபகேள்வி யாக வராது.

(மறுபடியும் ஸ்ரீ என். ஆர். தியாகராஜன் கேள்வி கேட்க ஆரம்பித்தார்.)

MR. SPEAKER : நான் சொன்னால் தயவுசெய்து நீங்கள் உட் கார வேண்டும். இப்படிப்பட்ட கேள்விகளை எழாத போது கேட்கக்கூடாது.

SRI M. P. SARATHI : வேறு என்னென்ன செயல்களுக்கு பரிசு கள் வழங்கப்படும் என்று ஏதாவது வரையறுக்கப்பட்டிருக்கிறதா?

MR. SPEAKER : தனிக் கேள்விதான் போடவேண்டும் என்று ஏற்கனவே கனம் அமைச்சர் அவர்கள்தான் சொல்லி இருக் கிறாரே.

[23rd February 1961

SRI K. VINAYAKAM: Sir, are these awards given for gallentry deeds of military personnel only or are they given for deeds like saving the life of a person who gets drowned or saving a person from a dangerous situation and things like that?

THE HON. SRI C. SUBRAMANIAM: They are only military awards for military personnel.

SRI N. R. THIAGARAJAN: ஸார், எதையும் தாங்கும் இதயம் படைத்து உதையும் தாங்கி மிதியும் தாங்கிய கவி ஒருவருக்கும், பார்லிமெண்ட் மெம்பருக்கும் பரிசு கொடுக்கப் போகிறீர்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM: இப்பொழுது அதைத் தான் நான் ஆங்கிலத்தில் சொன்னேன். ராணுவத்தில் சேர்ந்து வீரச் செயல் புரிந்தால் அவர்களுக்குத்தான் வீரப் பரிசுகள் வழங் கப்படும். ஆகவே ராணுவத்தில் சேர்ந்து வீரச் செயல்களைப் புரிந்தால் அவர்களுக்கு வீரப்பரிசுகள் கொடுக்கப்படும். ராணு வத்தில் சேர்ந்து உதையும், அடியும், மிதியும் பட்டு அதை சமா ளித்தால் அவர்களுக்குக் கொடுக்கப்படும்.

Colachel Port

* 411 Q.—SRI T. T. DANIEL: Will the Hon. the Minister for Works be pleased to state whether there is any scheme to improve the Colachel Port?

THE HON. SRI P. KAKKAN: Yes, Sir.

SRI T. T. DANIEL: May I know what is the nature of the scheme to develop the Colachel Port into a modern port?

THE HON. SRI P. KAKKAN: The scheme relates to construction of a pier with platforms, etc., at a cost of Rs. 5,50,000, construction of a cargo shed at Rs. 50,000 and the construction of a Post office and quarters at Rs. 50,000.

SRI V. SUBBIAH: மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தில் குளச்சல் போன்ற மைனர் போர்ட்கள் எவ்வளவு சேர்க்கப்பட் டிருக்கின்றன, அபிவிருத்தி செய்வதற்கு என்று?

MR. SPEAKER: பொதுவாக கேட்பதற்கு தனிக் கேள்வி போடவேண்டும். இப்பொழுது கேட்கப்பட்டிருக்கிற கேள்வி குளச்சல் போர்ட்டைப் பற்றியது.

Clerks (Training)

* 412 Q.—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any proposal to introduce a scheme for giving training to the newly recruited Lower Division Clerks in the various departments of the Government?

THE HON. SRI C. SUBRAMANIAM: A scheme for imparting a practical course of preliminary training to the clerks allotted to the Revenue Department was tried in the districts of Salem and

23rd February 1961]

Tiruchirappalli. As the working of the scheme in the two districts was found satisfactory, the Government have ordered last year introduction of the scheme on a permanent basis in all districts except the districts of Kanyakumari, the Nilgiris and Madras. The Madras Pay Commission has recommended that the scheme of training as in the Revenue Department, with such modification as may be necessary, may be extended also to the clerks allotted to other departments in due course. It is proposed to watch the result of the working of the scheme in the Revenue Department for some more time before specific proposals are formulated for extending the scheme to all the other departments.

SRI M. KALYANASUNDARAM: May I know the details of the scheme for giving training and also the duration of the training?

THE HON. SRI C. SUBRAMANIAM: I am sorry, I do not have those details with regard to the actual scheme and also duration. If the hon. Member is interested, I can furnish that information.

SRI M. KALYANASUNDARAM: Is the training compulsory?

THE HON. SRI C. SUBRAMANIAM: Yes, it is so in the Revenue Department.

Harijans (House-sites)

* 113 *Q.*—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Revenue be pleased to state the reasons for the delay in assigning house-sites to Harijans in Mathegoundenpalayam, Elayanpalayam, Olappalayam and Avarangathuvalasu in Perundurai firka of Erode taluk?

THE HON. SRI M. A. MANICKAVELU: It is presumed that the hon. Member refers to the provision of house-sites to Harijan-families in the villages affected by seepage water from the Lower Bhavani Project Canal. The reasons for the delay in providing house-sites are that the preliminary proposals for the rehabilitation of seepage affected families including those relating to acquisition of lands for the purpose, have to pass through a number of stages such as enquiry of the parties, inspection and selection of alternative sites, securing of the consent of the affected families to the occupation of the new sites, obtaining of the technical advice of the officers of the Public Works and Public Health Departments, etc. It is only after *all* these processes are completed, rehabilitation and land acquisition proposals in a final form are sent to the Government for approval.

SRI N. K. PALANISAMI: Since the matter is pending for the last seven years, will the Hon. Minister try to expedite the matter?

THE HON. SRI M. A. MANICKAVELU: It is being expedited. The hon. Member presented the petition only on 21st September 1960 and immediately after that action is being taken. In certain

[23rd February 1961

cases sites have been assigned also. For instance, in the Perundurai taluk in seven cases sites have been assigned and only 16 cases are pending. The difficulty is that sometimes we have to consult parties who pitch upon a particular place and do not want to go out of that place to any other place and they have to be persuaded.

SRI P. G. MANICKAM : நீர் கசிவினால் பாதிக்கப்பட்ட ஹரிஜன சேரிகளின் புள்ளி விவரங்களைக் கண்டுபிடிக்க ஒரு ஸ்பெஷல் தாசில்தாரை நியமிக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது. அவருடைய காலம் பூர்த்தியாகி மறுபடியும் அவருக்கு சில காலம் அதிகப்படியாக கொடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிய வருகிறது. அப்படிக் கொடுக்கப்பட்ட காலத்தில் இப்படிப்பட்ட சேரிகளைக் கண்டு பிடித்து தகவல் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. அதனால் அவருடைய வேலையை கவனிப்பதற்கு அதிகப்படியான தொகையை கொடுப்பதற்கு வேண்டிய வசதிகளை சர்க்கார் கொடுப்பதற்கு கவனிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : அதையெல்லாம் பார்த்து முடிவு செய்வதற்குத்தான் அவருடைய காலம் நீடித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

Bridge (Thazhakudi)

MR. SPEAKER : As the Member, who gave notice of question No. 414 is not in his seat, the question and answer will be printed in the proceedings.

* 414 *Q.*—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether the Government have received any representation from the Thazhakudi village of the Kanayakumari district regarding the dangerous condition of the bridge on the route to Thazhakudi; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI P. KAKKAN : (*a*) & (*b*) No representation has been received by Government about the dangerous condition of the bridge. The Collector of Kanyakumari has however, received a petition to the effect that it is dangerous to route the transport bus from Nagercoil to Thazhakudi through this bridge. The Collector will take action to divert the route, if necessary, in consultation with the State Transport Department and the Regional Transport Officer.

Accidents.

* 415 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) (i) the number of lorries involved in accidents in the year 1959-60;

23rd February 1961]

(iii) the number of lorry drivers convicted for (i) for over-speed and (ii) overloading; and

(*b*) the steps taken to enforce the speed limit?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) (i) 3,286.

(ii) (i) 3,519.
(ii) 3,628.

(*b*) Speed traps are regularly held by the Police Department to check overspeeding. Offences of overspeeding are also detected by applying the new rule 274-A of the Madras Motor Vehicles Rules which require drivers of good vehicles to sign in the G.V.M.R. in the Police station after every 70 miles of the journey. Pamphlets containing instructions to drivers are distributed by the Police Department. Further, the police inculcate road sense in the drivers of moving vehicles on the road through propaganda.

The Regional Transport Officers, Motor Vehicles Inspectors and Gazetted Officers of all departments of this State are required to follow vehicles which overspeed and make a report for action against the defaulters.

MR. SPEAKER : Since the next question, question No. 416 also relates to the same subject, that question also may be taken up.

* **416 *Q*.**—SRI V. K. KOTHANDARAMAN : *கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) 1958, 1959 ஆண்டுகளில் சென்னை-பெங்களூர் ரோட்டில் போக்கு வரத்து வாகனாதிகள் மூலமாக ஏற்பட்ட விபத்துக்கள் எத்தனை ?

(இ) இதில், 1. இரவில், 2. பகலில் எத்தனை ஏற்பட்டன ?

THE HON. SRI V. RAMAIAH :

	1958.	1959.
(அ) Number of accidents	210	233
(இ) (1) Night time	55	60
(2) Day time	155	173

SRI A. A. RASHEED : Is the Hon. Minister aware that still lorry drivers do not abide by the rules relating to speed and if so, what steps have been taken to enforce those rules strictly?

THE HON. SRI V. RAMAIAH : I have just now narrated what steps we have taken. Still there are reports of overspeed. If any suggestion comes farward from the hon. Member and also from the general public, I am prepared to place it before the State Transport Advisory Committee for consideration.

[23rd February 1961

SRI A. A. RASHEED: Will the Government consider fixing a governor to the carburettors to control the speed of the lorries?

THE HON. SRI V. RAMAIAH: Controlling of speed without any variation will slacken speed and there will be lot of bottlenacks.

SRI V. K. KOTHANDARAMAN: இரவு காலங்களில் லாரி ட்ரான்ஸ்போர்ட் போக்குவரத்து இருக்கிற காரணத்தால்தான் அதிகப்படியான பல விபத்துகள் ஏற்படுகின்றன என்கிற காரணத்தால் மூன்று மாத காலம் ஒத்திப் போட வேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள். ஸ்மக்குள்ட் (smuggled) சாமான்களை இரவு காலங்களில் கொண்டு போவதற்கு வசதியாக இருக்கிறது என்று இரவு காலங்களில் அவர்கள் கேட்கிறார்கள் என்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அதை கவனித்து இரவு காலங்களில் 12 மணிக்கு மேல் லாரி ட்ரான்ஸ்போர்ட் இருக்கக் கூடாது என்பதை அனுசரித்து அதைத் தடுக்க மீண்டும் சட்டம் கொண்டு வரப்படுமா?

THE HON. SRI V. RAMAIAH: கனம் அங்கத்தினருடைய கேள்விக்கு நான் பதில் சொல்லும்போது பகல் நேரத்தில்தான் அதிகப்படியான விபத்துக்கள் ஏற்படுகின்றன என்ற புள்ளி விவரங்களைக் கொடுத்திருக்கிறேன். இரவு காலங்களில் அவ்வளவு இல்லை.

SRI V. K. KOTHANDARAMAN: லாங் ரூட்டுகளை எடுத்துக் கொண்டு பஸ்களை விட்டால் அதனால் அதிகபடியான லாபம் வருகிறது என்று சர்க்கார் கருதி அப்படிப்பட்ட லாங் ரூட்டுகளை எடுத்துக்கொண்டிருக்கிறார்களே, அதே போன்று லாங் ரூட்டில் இருக்கக்கூடிய லாரி ட்ரான்ஸ்போர்ட்டையும் சர்க்கார் எடுத்து நடத்துவதற்கு முன் வருவார்களா?

THE HON. SRI V. RAMAIAH: அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

SRI P. G. MANICKAM: மேற்கண்ட விபத்துக்களால் ஏற்பட்ட உயிர்ச் சேதங்கள் எத்தனை? பொருள் சேதத்தின் மதிப்பு எவ்வளவு?

THE HON. SRI V. RAMAIAH: அதற்குத் தனியாகக் கேள்வி போடவேண்டும்.

SRI T. SAMPATH: Sir, may I know whether Government have investigated the causes for such accidents?

THE HON. SRI V. RAMAIAH: All accidents are being reported and are carefully looked into. We do not have a special investigation team as such.

SRI M. KALYANASUNDARAM: இந்த விபத்துக்களினால் பெரும்பாலும் கிராமத்திலுள்ள விவசாயிகள் அவர்களுடைய வண்டி மாடுகளை இழப்பதன்மூலம் நஷ்டம் அடைகின்றார்கள்.

23rd February 1961]

அதற்கு நஷ்ட ஈடு கொடுப்பதற்கு இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகள் முன்வருவது இல்லை. இதுபற்றி பல சம்பவங்களை அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுபோயிருக்கிறேன். இம்மாதிரி விபத்துக்கள் ஏற்பட்டதற்கு நஷ்ட ஈடு வழங்குவதற்காக நஷ்ட ஈடு வழங்கும் கமிஷன் ஏற்படுத்தும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா ?

THE HON. SRI V. RAMAIAH : இந்தக் கருத்தை கனம் அங்கத்தினர் அவர்கள் ஸ்டேட் ட்ரான்ஸ்போர்ட் அட்வைஸரி கமிட்டியின் முன் கொண்டுவந்தால் அதைப் பரிசிலனை செய்வதற்குத் தயாராயிருக்கிறேன்.

SRI S. LAZAR : Are the Government aware that lorry drivers get their licences renewed once in three years, but during such renewal, they are not examined, their eyes are not tested aid none of these things is done?

THE HON. SRI V. RAMAIAH : The rule insisting that they should get their licences renewed once in three years is itself intended to check the existence of various deformities found in the drivers and look into their condition and I feel that the present practice is giving us some sort of a guarantee in checking deformities, etc.

SRI K. VINAYAKAM : Sir, is there any provision in the rules to check overspeeding by lorry drivers especially during nights in highways, like the Bangalore Road, the Southern Trunk Road, etc., and has the Minister experience of driving back to Madras facing the dazzling lights of lorries which cause numerous accidents during nights?

THE HON. SRI V. RAMAIAH : I just narrated what the checks are to control overspeeding and I stated that in the nights accidents were not so heavy as in the day-time.

Public Works Department (Reorganization)

* 417 *Q.*—SRI S. M. ANNAMALAI (on behalf of SRI M. P. SARATHI) : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ராஜ்ய மராமத்து இலாகாவை திருத்தி அமைக்குமாறு மத்திய அரசாங்கத்திடமிருந்து யோசனை ஏதேனும் வந்துள்ளதா ? அதன் விவரமென்ன ?

(இ) அதுபற்றிய இந்த அரசாங்கத்தின் பதில் என்ன ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

[23rd February 1961

Bus routes

* 418 Q.—SRI N. R. THIAGARAJAN : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

எத்தனை புது பஸ் பெர்மிட்டுகள் 1958 ஏப்ரல் முதல் இன்று வரை கொடுக்கப்பட்டன ?

THE HON. SRI V. RAMAIAH : Three hundred and seventy-eight bus permits were granted by the Regional Transport Authorities in this State during the period from April 1958 to November 1960.

SRI N. R. THIAGARAJAN : தயவுசெய்து அதை ஜில்லா வாரியாகக் கூற முடியுமா ?

THE HON. SRI V. RAMAIAH : The figures are—

Chingleput	27
Coimbatore	58
Kanyakumari	9
Madurai	23
The Nilgiris	13
North Arcot	34
Ramanathapuram	25
Salem	28
South Arcot	41
Thanjavur	57
Tiruchirappalli	34
Tirunelveli	29

SRI M. C. MUTHUKUMARASWAMY : இவைகளில் ஹரிஜனங்களுக்குக் கொடுக்கப்பட்ட லைசென்சுகள் எத்தனை ?

THE HON. SRI V. RAMAIAH : தனிக் கேள்வி போட வேண்டும்.

SRI M. KALYANASUNDARAM : போக்குவரத்துத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக வேண்டியும், வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைப்பதற்காக வேண்டியும், குறைந்தபட்சம் 25 சத விகிதம் பஸ் ரூட்களை அதிகப்படுத்துவதற்கு திட்டக் கமிஷனிலிருந்து யோசனை வந்தது உண்டா ? அந்த யோசனைப்படி ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை ?

THE HON. SRI V. RAMAIAH : நமது அரசாங்கமே போக்குவரத்து அதிகாரிகளுக்கு ஒரு விருப்பத்தைத் தெரிவித்தது, எல்லா ஜில்லாக்களிலும் 25 சத விகிதமாவது பஸ் ரூட்களை அதிகப்படுத்த வேண்டுமென்று. தகுந்த முறையில் போக்குவரத்து அதிகாரிகளும் ஒவ்வொரு ஜில்லாவில் அதன்படி செய்துகொண்டிருக்கிறார்கள்.

23rd February 1961]

* 419 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : *கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) தனியார் நடத்தும் பஸ் ரூட்டுகளையெல்லாம் பஞ்சாயத்து யூனியன்களுக்கு ஒப்படைக்க உத்தேசமுண்டா ?

(இ) (அல்லது) சர்க்காரே நடத்த உத்தேசமுண்டா ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) No, Sir.

(*b*) Yes Sir, by stages consistent with the Government's policy of progressive nationalisation.

SRI V. K. KOTHANDARAMAN : *மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் வெற்றிகரமாக நிறைவேறவேண்டுமானால் அதிகப்படியாக வரிகளை மக்கள்மீது திணிக்கவேண்டுமென்று சொல்லப்படுவதால், 1962-ம் வருட தேர்தலுக்குப் பிறகாவது பஞ்சாயத்து யூனியன்களுக்கு இந்தப் பொறுப்புகளெல்லாம் ஒப்படைக்கப்படுமா ?*

THE HON. SRI V. RAMAIAH : *பஞ்சாயத்து யூனியனுக்குக் கொடுப்பதைக் காட்டிலும், கனம் அங்கத்தினர் நிதி வசதியைக் கூறக்கூடிய காரணத்தால், இப்பொழுது புதுக் கொள்கைப்படி—ப்ரொக்ரெஸிவ் நாஷனலைஸேஷன்படி—அரசாங்கமே பஸ் ரூட்களை எடுத்துக்கொண்டு வருகிறது.*

SRI P. M. MUNUSAMI GOUNDER : *தனியார் நடத்தும் பஸ் ஸர்வீசுக்கும் சர்க்கார் நடத்தும் பஸ் ஸர்வீசுக்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது என்பதை கனம் அமைச்சர் அவர்கள் சொல்வார்களா ?*

THE HON. SRI V. RAMAIAH : *தனியார் அரசாங்கத்திடமிருந்து பஸ் பர்மிட் பெற்று நடத்துகிறார்கள். அதிலிருந்து அரசாங்கத்திற்கு வரி வருகிறது. சர்க்கார் நடத்தக்கூடிய பஸ் ஸர்விஸ் என்றால் அரசாங்கமே நேரடியாக நடத்துகிறது ; வரியும், அதிலே வரக்கூடிய லாபமும் அரசாங்கத்திற்குக் கிடைக்கிறது.*

SRI M. C. MUTHUKUMARASWAMY : *ஹரிஜனங்களுக்கு விசேஷ சலுகை கொடுத்து பஸ் பர்மிட் வழங்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறதா ?*

MR. SPEAKER : *மூலக் கேள்வி பஞ்சாயத்து யூனியனைப் பற்றியது ; ஹரிஜனங்களைப் பற்றியது அல்ல.*

SRI T. SAMPATH : Is there any proposal to nationalise shorter routes?

THE HON. SRI V. RAMAIAH : The present policy has just been announced. We intend to nationalise all the long routes.

[23rd February 1961

SRI A. A. RASHEED: May I know whether there is a proposal to allow municipalities to run buses?

THE HON. SRI V. RAMAIAH: No, Sir.

* 420 Q.—SRI S. M. ANNAMALAI (on behalf of SRI M. P. SARATHI): கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) புதிய பஸ் ரூட்டுகள் வழங்குவதில் மாஜி ராணுவத்தினர் கூட்டுறவு பஸ் போக்குவரத்து ஸ்தாபனங்களுக்கு எத்தகைய சலுகை காட்டப்படுகிறது?

(இ) இந்தச் சலுகைகளை இன்னும் அதிகரிக்க உத்தேசம் உண்டா?

THE HON. SRI V. RAMAIAH: (a) The Motor Vehicles Act provides that, other conditions being equal, an application for a stage carriage permit from a co-operative society shall, as far as may be, given preference over applications from individual owners. Permits for stage carriages are granted on the basis of marks awarded to the applicants. Out of a total of 3 marks, one mark is set apart for the applicant being a registered co-operative society or a registered public limited company or a registered private company. Preference is shown to the Motor Transport Co-operative Societies for Ex-Servicemen with reference to the provisions referred to above.

(b) No, Sir.

SRI S. M. ANNAMALAI: ராணுவத்தில் இருந்தவர்களுக்கு தனிச்சலுகை ஏதாவது தரப்படுகிறதா? கூட்டுறவு சங்கங்களுக்குத் தரப்படுகிற சலுகைதான் அவர்களுக்கும் தரப்படுகிறதே தவிர, ராணுவத்தில் சேவை புரிந்ததற்காக தனிச்சலுகை தரப்படவில்லை. அதற்குக் காரணம் என்ன?

THE HON. SRI V. RAMAIAH: ராணுவத்தில் இருந்தவர்களுக்குக் கூட்டுறவு சொஸைட்டிகள் அமைத்துக் கொடுக்கிறார்கள். அந்தக் கூட்டுறவு சொஸைட்டிகளுக்குப் பஸ் பர்மிட் வழங்குவதில் ஒரு சலுகை காட்டப்படுகிறது.

SRI T. R. RAMAMIRTHA THONDAMAN: தேச விடுதலைக்காக சுதந்திரப் போராட்டங்களில் ஈடுபட்ட தியாகிகளையும் அவர்கள் வரவுகளையும் கூட்டுறவு இயக்கத்தில் இணைத்து அவர்களுக்கு முதல் சலுகை அளித்து பஸ் பர்மிட் கொடுக்கவும், கொடுத்தாலுங்கூட, அதை அனுபவிக்க முடியாதபடி கோர்ட்டுகளில் தகராறு செய்கிறார்கள் பஸ் முதலாளிகள். அத்தகைய இன்னலைத் துடைத்து, தியாகிகளுக்குப் பாதுகாப்பு அளிக்க சர்க்கார் முன் வருவார்களா?

THE HON. SRI V. RAMAIAH: கனம் அங்கத்தினர் அவர்கள் தியாகிகளுக்கு நன்மை செய்யவேண்டுமென்று கருதினால், தியாகிகளெல்லோரையும் ஒன்றாக ஒரு கூட்டுறவு சொஸைட்டி அடிப்படையில்கொண்டுவந்து, கூட்டுறவு சொஸைட்டிகளுக்குக் கிடைக்கும் சலுகைகளைப் பெறுவதற்கு முயற்சி செய்யலாம்.

23rd February 1961]

SRI A. VEDARATHNAM : ஸிலோன் ரிபாட்ரியேட்ஸ் இத்தகைய பஸ் பர்மிட்டுகளுக்கு கூட்டுறவு சொஸைட்டி மூலமாக விண்ணப்பம் செய்திருந்தார்களே, அது அங்கிகரிக்கப்பட்டதா? அத்தகையவர்களுக்கு ஏதாவது உதவி செய்ய அரசாங்கம் முன் வருமா?

THE HON. SRI V. RAMAIAH : அவர்களும் கூட்டுறவு சொஸைட்டி அமைத்து முயற்சி எடுத்தால் சம்பந்தப்பட்ட ரீஜினல் ட்ரான்ஸ்போர்ட் அதாரிடி அதைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்வார்கள். எங்கே, எப்பொழுது விண்ணப்பம் கொடுத்தார்கள் என்பது எனக்குத் தெரியாது.

SRI P. M. MUNUSAMI GOUNDER : நம் ராஜ்யத்தில் எத்தனை மாஜி ராணுவத்தினர் கூட்டுறவு சொஸைட்டிகள் பஸ் போக்கு வரத்து நடத்துகின்றன? அவை எந்த நிலைமையில் நடக்கின்றன என்று தெரிவிக்க முடியுமா?

THE HON. SRI V. RAMAIAH : எத்தனை சொஸைட்டிகள் என்பதற்கு உடனடியாக தகவல் இல்லை. நான் தெரிந்துகொண்ட வரையில் எல்லா சொஸைட்டிகளும் நன்றாகத்தான் நடந்து கொண்டிருக்கின்றன.

T.B. Hospitals

* 421 *Q*.—**SRI A. VEDARATHNAM** : கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா— 9-00 a.m.

(அ) இம்மாநிலத்தில் க்ஷயரோக ஆஸ்பத்திரிகள் எங்கெங்கு இருக்கின்றன? எத்தனை இருக்கின்றன?

(இ) ஒவ்வொன்றிலுள்ள படுக்கைகள் எத்தனை?

(உ) ஜில்லாதோறும் இந்த ஆஸ்பத்திரியை ஏற்படுத்த உத்தேசம் உண்டா?

(எ) அப்படியானால், அதன் விவரம் என்ன?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) & (*b*) There are eleven Tuberculosis Hospitals in the State. The places where they are situated and the number of beds in each hospitals are furnished in the statement placed [a] on the table of the House.

(*c*) No, Sir.

(*d*) Does not arise.

SRI A. VEDARATHNAM : இப்போது இருக்கின்ற ஆஸ்பத்திரிகள் ஒவ்வொன்றிலும் படுக்கைகள் போதுமானதாக இல்லாததனால் வெயிட்டிங் லிஸ்டில் அதிகமான பேர்கள் இருக்கிறார்கள்.

---

[a] Printed as Appendix II on page 388 infra.

[23rd February 1961

ஆகவே ஒவ்வொரு ஆஸ்பத்திரியிலும் இருக்கும் படுக்கைகளை விஸ்தரிக்க ஏதாவது திட்டம் உண்டா? அப்படியானால் அது எப்போது அமுலுக்கு வரும்?

THE HON. SRI M. A. MANICKAVELU : எனக்குத் தெரிந்த வரையில் க்ஷயரோகம் சம்பந்தப்பட்டவரையில் அதிகமான பேர்கள் வெயிட்டிங் லிஸ்டில், தாம்பரம் நிலையம் தவிர, இருப்பதாகத் தெரியவில்லை. இந்த நோய் சிகிச்சைக்கு படுக்கை இல்லாமல் இதர வழிகளில் டாமிஸிலரி ட்ரீட்மெண்டு முறையில் கூடச் செய்யலாம் என்ற பிரச்சனை இருக்கிறது.

SRI T. T. DANIEL : In view of the fact that better facilities are provided for the past four years in the Tuberculosis Hospital, Nagercoil, and also due to the fact that the number of patients there is steadily increasing, will the Government increase the number of doctors and nurses in that hospital?

THE HON. SRI M. A. MANICKAVELU : Yes. We are trying progressively to afford better facilities.

SRI K. VINAYAKAM : Is the Hon. Minister aware of the fact that the demand for admission to the Tuberculosis Sanatorium at Tambaram is increasing, that patients are registered according to the time in which they apply and that some of the patients receive admission cards long after they are dead and entered the grave-yard? Will the Government make provision for more beds so as to give admission to all those who deserve it?

THE HON. SRI M. A. MANICKAVELU : No doubt in some cases what the hon. Member says happens. There is the waiting list. But the difficulty is provision of beds in this hospital is a costly one and the number of patients are very large. That is why we are now adopting other improved methods viz., affording domicillary treatment and trying also to increase beds. As far as possible we are doing that.

SRI M. P. SARATHI : வேலூர் பகுதியில் உள்ள பெண்ணாத்தூரில் க்ஷயரோக ஆஸ்பத்திரிக்கு கட்டிடம் கட்டுவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டதே, அது எந்த நிலையில் இருக்கிறது? கட்டிடம் எப்போது கட்டி முடிக்கப்படும்? ஆஸ்பத்திரி எப்போது ஆரம்பிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொல்வார்களா?

THE HON. SRI M. A. MANICKAVELU : கனம் அங்கத்தினர் அந்த ஊருக்குப் பக்கத்தில் இருந்து வருகிறார், இருந்தாலும் சொல்கிறேன். அந்தக் கட்டிடத்திற்கு அஸ்திவாரம் போட்டாகி சீக்கிரத்தில் அது முடிக்கப்படும்.

SRI J. MATHA GOWDER : அந்த அறிக்கையில் நீலகிரி ஜில்லாவில் உள்ள ஆஸ்பத்திரியில் ஒரு படுக்கையும் ஒதுக்கப்படவில்லையே? நீலகிரி ஜில்லாவில் க்ஷயரோகமே இல்லையா? இது

23rd February 1961]

பற்றி ஆராய்ந்திருக்கிறார்களா? அங்கு இருக்கிறதென்றால் அங்குள்ள ஆஸ்பத்திரிகளிலும் இந்த நோயக்கு எவ்வளவு தனியாகப் படுக்கை வசதி செய்யப்படுமா?

THE HON. SRI M. A. MANICKAVELU: சமீபகாலத்தில் தான் நீலகிரி ஜில்லாவிலும் படுக்கை வசதி செய்யப்பட்டிருக்கிறது. இந்த லிஸ்டில் அது விட்டுப்போயிருக்கிறது.

SRI V. K. KOTHANDARAMAN: நமது ராஜ்யத்தில் க்ஷயரோகத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறவர்கள் தொகை அதிகரித்துக் கொண்டே போகிறது. இது தொத்து வியாதியைப் போலவும், அவர்களுக்கு பிறக்கக்கூடிய குழந்தைகளுக்கும்கூட இது வருவதனால் அவர்கள் சம்பந்தப்பட்டவரை அறுவை சிகிச்சை கட்டாயமாக அளிக்கப்படுமா?

THE HON. SRI M. A. MANICKAVELU: இந்த நோய் வராமல் தடுப்பதற்காகத்தான் பி.ஸி.ஜி. வாக்ஸினேஷன், டாமிசிலரி ட்ரீட்மெண்டு எல்லாம் கொடுக்கப்படுகிறது. அறுவை சிகிச்சை எல்லோருக்கும் கொடுக்கப்படுகிறது. யார் யார் வேண்டுமோ அவர்கள் அறுவை செய்துகொள்ளலாம்.

SRI A. VEDARATHNAM: கனம் விநாயகம் கூறிய பிரகாரம் செங்கிப்பட்டியில் நிறைய பேஷண்டுகள் வெயிட்டிங் லிஸ்டில் இருக்கிறார்கள். இடமில்லாமல் இப்படி அதிகமான பேர்கள் காத்துக்கொண்டிருப்பதனால் அதை விஸ்தரிக்க ஏதாவது உதவி செய்வார்களா?

THE HON. SRI M. A. MANICKAVELU: அவர்கள் பண உதவி கேட்டார்கள். அதை நாங்கள் மத்திய சர்க்காருக்குச் சிபார்சு செய்தோம். ஆனால் அவர்கள் கேட்ட அளவுக்குக் கொடுக்கவில்லை. அவர்கள் கேட்ட அளவுக்குக் கொடுக்கவேண்டுமென்று சிபார்சு செய்திருக்கிறோம்.

SRI B. DORAISAMI REDDIAR: ஆரணியில் எல்லா எஸ்டிமேட்டும் போட்டு ஆஸ்பத்திரி கட்டும்படி ஏற்பாடு செய்திருக்கிறது. அதை துரிதமாகக் கட்டி முடிக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா?

THE HON. SRI M. A. MANICKAVELU: ஆரணியில் க்ஷயரோக ஆஸ்பத்திரி இல்லை. அது பொது ஆஸ்பத்திரி.

SRI M. KALYANASUNDARAM: தனிப்பட்டவர்களால் நடத்தப்படும் இந்த ஆஸ்பத்திரிகளுக்கு பண உதவி எந்த அளவில் செய்யப்படுகிறது?

THE HON. SRI M. A. MANICKAVELU: It is granted on the basis of the bed strength, the number of patients, etc.

[23rd February 1961

Steel plant

* 422 Q.—SRI T. T. DANIEL:
SRI A. A. RASHEED:
SRI V. K. KOTHANDARAMAN:
SRI N. K. PALANISAMI:
SRI S.M. ANNAMALAI:
SRI M. KALYANASUNDARAM: } Will the Hon.

Minister for Industries be pleased to state whether there is any proposal to start an iron and steel plant in the public sector in view of the report submitted by the German Democratic Republic Technical Team?

THE HON. SRI R. VENKATARAMAN : Yes, Sir.

* 423 Q.—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Industries be pleased to state the total capital to be invested on the steel plant in Salem?

THE HON. SRI R. VENKATARAMAN : The capital requirement of the proposed integrated iron and steel project based on Salem iron ore and Neyveli Lignite will depend chiefly on the installed capacity of the plant. As the capacity can be fixed only after the commercial tests recommended by the Technical Comittee set up by Government of India are carried out, an indication of the capital requirements is not possible at this stage.

SRI T. T. DANIEL : May I know the various recommendations in that report which are favourable for starting an iron and steel plant in our State and also what steps Government have taken to implement the proposal, taking into consideration that it is necessary to solve unemployment and under-employment and also for eradicating poverty and to bring about rapid industrialisation of our State?

THE HON. SRI R. VENKATARAMAN : The hon. Member has delivered a speech. The report of the Committee is confidential.

SRI A. A. RASHEED : Has the attention of Government been drawn to the accusation that measures for starting an iron and steel plant in Madras are being taken in a leisurely manner by the Union Government?

THE HON. SRI R. VENKATARAMAN : That criticism may be offered to the Union Government by Members of Parliament.

SRI M. KALYANASUNDARAM : தேவையான அளவு லிக்னைட் எடுத்து பரிட்சைக்கு அனுப்ப வேண்டிய இடத்திற்கு—அதாவது ஜெர்மனிக்கு அனுப்பப்பட்டதா? அனுப்பவில்லை என்றால் எப்போது அனுப்பப்படும்?

THE HON. SRI R. VENKATARAMAN : இன்னும் லிக்னைட் எடுக்கப்படவில்லை. லிக்னைட் சற்றேறக்குறைய செப்டம்பர் மாதத்தில்தான் எடுக்கலாம் என்று நாம் எதிர்பார்க்கிறோம். உடனே அனுப்பவேண்டிய ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன.

23rd February 1961]

SRI S. M. ANNAMALAI : இந்த இரும்புத் தொழிற்சாலை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படுமா ? செப்டம்பர் மாதத்தில் இந்த நிலக்கரியை எடுத்து அனுப்ப முடியும் என்று சொல்லப்படுமா ? அதிகமாகவும் தோண்டி எடுக்க முடியாது என்று சொல்லப்படுகிறது. சீக்கிரத்தில் தோண்டி எடுக்கக்கூடிய வகையில் நிதி ஒதுக்கி வேலையைத் துரிதப்படுத்த முடியுமா ? எப்போது எடுக்கப்படும் ?

THE HON. SRI R. VENKATARAMAN : மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இது சேர்க்கப்பட்டிருக்கிறது என்பதை திட்ட வரைவில் பார்த்தால் தெரியும். அடுத்தபடியாக 25 கோடி ரூபாய் இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. மத்திய சர்க்காரில் இருந்தும் அறிவித்து விட்டார்கள். எப்போது நிலக்கரி எடுக்கப்படும் என்பது பல பிரச்சனைகளைப் பொறுத்திருக்கிறது. தண்ணீர் அடியில் இருப்பதனால் அதைக் கண்ட்ரோல் செய்யாது தோண்டினால் மைன்ஸ் உடைந்துவிடும். ஆகவே அதுபற்றி நிபுணர்கள் ஒழுங்காக ஆலோசித்துச் சரியான முறையில் செய்துகொண்டிருக்கிறார்கள்.

SRI N. K. PALANISAMI : கிழக்கு ஜெர்மனி நிபுணர்களும், மேற்கு ஜெர்மனி நிபுணர்களும் சர்க்காருக்கு அறிக்கைகள் சமர்ப்பித்திருக்கிறார்கள். இந்த அறிக்கைகளில் ஏதாவது வித்தியாசம் இருக்கிறதா ? அப்படியானால் எலெக்ட்ரிஸிட்டியை உபயோகப்படுத்தி இந்த உருக்குத் தொழிற்சாலை ஏற்படுத்தப்படவேண்டுமென்று கனம் நிதியமைச்சர் அவர்களும், முதல் அமைச்சர் அவர்களும் பத்திரிகைகளில் அறிக்கை கொடுத்ததற்கு காரணமென்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : கிழக்கு ஜெர்மனி நிபுணர்கள் ஒரு அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். மேற்கு ஜெர்மனியிலுள்ள ஒரு கம்பெனி ஒரு அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். மத்திய அரசாங்கமும் ஒரு கமிட்டி, நம் நாட்டிலுள்ள நிபுணர்களைக் கொண்ட ஒரு கமிட்டி நியமித்திருக்கிறது. அவர்களும் இதை பரிசீலனை செய்கிறார்கள். இதில் பலவகைகளில் உற்பத்தி செய்ய முடியும். இப்பொழுது சில நாட்களுக்கு முன்னால் "ஹைட்ரஜெனேட்டட் ப்ராஸஸ்" என்று புதிதாக கண்டுபிடித்திருக்கிறார்கள். எப்படி சிறந்த முறையில் செய்யமுடியுமோ அப்படி செய்ய யோசனை செய்துகொண்டிருக்கிறார்கள்.

SRI T. SAMPATH : The Hon. Minister stated that the report was confidential. May I know, Sir, whether the report is favourable and encouraging?

THE HON. SRI R. VENKATARAMAN : Otherwise we will not be taking the steps that we are taking now.

SRI P. M. MUNUSAMI GOUNDER : இந்த இரும்பு உருக்கு தொழிற்சாலை எந்த இடத்தில் ஆரம்பிப்பது என்று ஏதாவது தீர்மானம் உண்டா ? அப்படி வேறு இடத்தில் இருந்தாலும் சேலத்தில் ஆரம்பிக்க முடியும் என்று சொல்ல முடியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இதை, இப்பொழுது சொல்ல முடியாது.

[23rd February 1961

SRI M. KALYANASUNDARAM : லிக்னைட்டை எடுத்து கிழக்கு ஜெர்மனிக்கு பரீட்சைக்காக அனுப்ப வேண்டிய காரணம் என்ன? இது சாத்தியம் என்று முடிவு எடுத்திருந்தால் இந்த பரீட்சைக்கு அவசியம் என்ன? பரீட்சை நடந்தபிறகுதான் இது சாத்தியமா இல்லையா என்று முடிவு எடுக்கப்படுமா?

THE HON. SRI R. VENKATARAMAN : ஒரு ப்ளான்ட் வைப்பதற்கு முன்னால் மூன்றுவித பரிசீலனை செய்யவேண்டும். ஒன்று லாபரட்டரி டெஸ்ட், இரண்டாவது, பைலட் ப்ராஜெக்ட் டெஸ்ட், மூன்றாவது டிஸைன் செய்து அதற்கு ஒரு டெஸ்ட். இந்த மூன்றும் செய்தால்தான் தீர்மானம் செய்யமுடியும். இதில் லாபரட்டரி டெஸ்ட் முடிந்து சாதகமாகயிருக்கிறது. பைலட் ப்ராஜெக்ட் டெஸ்ட்டுக்கு ஆயிரம் டன் லிக்னைட் அனுப்ப வேண்டும். நூறு டன் கனிப்பொருள் அனுப்பவேண்டும். பின் டிஸைன் செய்து அதற்கு ஓரளவு கொடுப்பார்கள். அதை அனுப்பினால் அதில் என்னென்ன மாறுதல்கள் செய்யவேண்டுமோ அவைகளைச் செய்து கடைசியாக இந்த மெஷினரி, இந்த ப்ளான்ட் எந்த முறையில் அமைக்கப்படவேண்டுமென்று நிபுணர்கள் ஆலோசனை கூறுவார்கள்.

SRI A. A. RASHEED : Sir, what is the percentage of foreign investment that is expected on this steel and iron plant?

THE HON. SRI R. VENKATARAMAN : At present that is not the problem. There are other problems.

Protein-rich food

* 424 Q.—SRI N. K. PALANISAMI : } Will the Hon. the
SRI T. T. DANIEL :

Minister for Industries be pleased to state—

(a) whether there is any proposal to set up a plant with the aid of UNICEF for reproduction of protein-rich food ; and

(b) if so, when and where?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) & (b) The Government of India are contemplating the establishment of a plant in Madras State for the production of high protein food (groundnut flour) with the assistance of the United Nations Children's Fund. Location and other details of the plant are under the consideration of the Government of India.

SRI N. K. PALANISAMI : May I know, Sir, the amount of aid expected from the fund?

THE HON. SRI R. VENKATARAMAN : We are likely to get 25,000 dollars from the United Nations Children's Fund.

23rd February 1961]

SRI T. T. DANIEL: May I know, Sir, more or less the approximate date when such a plant would be started?

THE HON. SRI R. VENKATARAMAN: This is now under negotiation. After the terms are settled, the plant may be started.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: What are the raw materials that are required for this plant?

THE HON. SRI R. VENKATARAMAN: Groundnut.

SRI S. LAZAR: What is the nature of protein food that is going to be produced here? Is it going to be in the form of tablets, or something like ovaltine?

THE HON. SRI R. VENKATARAMAN: Sir, the groundnut kernel will be lightly roasted and then it will be bleached. Then oil will be extracted; the deoiled cake will be disintegrated into a meal. Then it will be used along with other food. That is one type of plant. There is another plant which is working in Coimbatore to manufacture multi-purpose food. It has been designed by the Central Technological Institute.

SRI K. S. G. HAJA SHERIFF: What is the anticipated output from this plant?

THE HON. SRI R. VENKATARAMAN: Ten tons per day, Sir.

SRI N. K. PALANISAMI: Sir, is there any proposal to locate this factory at Coimbatore?

THE HON. SRI R. VENKATARAMAN: There are two projects. One unit will be aided by UNICEF and it will be located in Madras. The other is a multi-purpose project, which will be located at Coimbatore. This plant will use in addition to groundnut, bengalgram, calcium phosphate, vitamins, etc.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: Sir, may I know whether we have enough raw materials for this project?

THE HON. SRI R. VENKATARAMAN: We have plenty of groundnut. There is no difficulty.

SRI P. S. CHINNADURAI: கோவையில் தற்சமயம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற பலவகை சத்து உணவு தயாரிப்புத் தொழிற்சாலையை சர்க்கார் போதிய அளவில் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்களா? அப்படியானால் எந்தளவு பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்?

THE HON. SRI R. VENKATARAMAN: ஒரு டன் ப்ளான்ட் அது. அதில் கிடைக்கிற உணவை குழந்தைகளுக்கு "ப்ரீ மிட்டே மீல்ஸ்"-வுடன் சேர்த்துக் கொடுக்க ஏற்பாடு.

[23rd February 1961

SRI M. KALYANASUNDARAM : இந்தத் திட்டத்தைப் பற்றி பரிசிலனை செய்யும்போது சர்க்காருக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய நஷ்டத்தை ஈடு செய்ய முயற்சி எடுக்கப்படுமா? விழுப்புரத்தி லுள்ள வனஸ்பதி இயந்திரங்களுக்காக பத்து லட்சம் ரூபாய் சர்க்காருக்கு வர வேண்டியிருக்கிறது. அந்த இயந்திரங்களை இந்தத் திட்டத்திற்கு பயன்படுத்த ஆலோசனை செய்யப்படுமா?

THE HON. SRI R. VENKATARAMAN : இது இந்த கேள்விக்கு சம்பந்தமில்லாவிட்டாலும் கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்வது தவறு என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சர்க்காருக்கு நஷ்டம் ஏற்படவில்லை விழுப்புரம் வனஸ்பதியில். அதை வேறு ஒருவர் எடுத்து நடத்த ஏற்பாடு செய்யப்பட்டு அவர்கள் அதற்குள்ள பணத்தை இன்ஸ்டால்மென்ட் மூலம் செலுத்த, முதல் இன்ஸ்டால்மென்ட்டும் கட்டிவிட்டார்கள்.

SRI A. VEDARATHNAM : நிலகிரியில் குழந்தைகள் உணவு உற்பத்தி தொழிற்சாலை ஒன்று ஆரம்பிப்பதாகயிருந்த திட்டம் என்னவாயிற்று? எந்த நிலையில் இருக்கிறது? எப்பொழுது துவக்கப்படும்?

THE HON. SRI R. VENKATARAMAN : நான் இரண்டு நாட்களுக்கு முன்னால்தான் அது குறித்து பதில் சொன்னேன். "பேபி புட்" வேறு, "மல்டி பர்பஸ் புட்" அல்லது "ஹை ப்ரொட்டீன் புட்" என்பது வேறு.

Fisheries

* 425 *Q.*—SRI M. JAGANNATHAN (on behalf of SRI T. S. RAMASWAMI) : Will the Hon. the Minister for Local Administration be pleased to state the amount spent during the last three years in the development of inland fisheries and the results thereof?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : The amount spent during the last three years in the development of inland fisheries in the State is as follows :—

Year.		*Amount.*
		RS.
1957–58	... ...	4,95,950
1958–59	... ...	6,17,720
1959–60	... ...	8,02,782

The total production of Inland Fisheries in the State during these three years is as follows :—

Year.		*Estimated production.*
		TONS.
1957–58	... ...	40,300
1958–59	... ...	40,850
1959–60	... ...	42,468

23rd February 1961]

It will be seen from the total production that there has been a progressive increase in the Inland Fish Production during the last three years.

MR. SPEAKER: As the question Nos. 426 to 429 relate to the same subject, they may be taken up together.

G.C.I.M.

*426 *Q.*—SRI A. A. RASHEED: Will the Hon. the Minister for Revenue be pleased to state--

(*a*) whether the Syndicate of the Madras University have asked the Government to admit all the students who completed the Pre-professional course leading to G.C.I.M. in the M.B.B.S. class; and

(*b*) if so, the reason for not admitting four students who have completed the course?

THE HON. SRI M. A. MANICKAVELU: (*a*) Yes, Sir, provided that they were continuing in the College of Integrated Medicine.

(*b*) Three (not four) students were not admitted to the Integrated M.B.B.S. Course, as they were not studying in the College at the time the change-over took place.

*427 *Q.*—SRI T. S. RAMASWAMI: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the University was consulted before the abolition of the G.C.I.M. course;

(*b*) whether the Government have considered the question of assisting the 3rd, 4th and 5th year students of the G.C.I.M. course to qualify themselves for the M.B.B.S. course; and

(*c*) if so, the details of their decision?

THE HON. SRI M. A. MANICKAVELU: (*a*) No, Sir.

(*b*) & (*c*) The matter is under consideration.

*428 *Q.*—SRI K. VINAYAKAM: }
SRI A. A. RASHEED: } Will the Hon. the Minister for Revenue be pleased to state---

(*a*) whether the G.C.I.M. qualified doctors are allowed to qualify for M.B.B.S. degree through a condensed course;

(*b*) the details thereof; and

(*c*) when the course will be instituted?

THE HON. SRI M. A. MANICKAVELU: (*a*) No, Sir.

[23rd February 1961

(*b*) & (*c*) The question whether a condensed M.B.B.S. course for the G.C.I.M. diploma holders may be instituted is under consideration.

* 429 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether all the students of ex-G.C.I.M. course have been allowed seats in Stanley Medical College, Madras; and

(*b*) if so, the reason therefor?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) No.

(b) The University of Madras permitted only those ex-G.C.I.M. students who were admitted to the first year G.C.I.M. course in July 1958 or subsequently and were continuing to study in the College of Integrated Medicine to be admitted to the M.B.B.S. course.

SRI A. A. RASHEED : Sir, is it not a fact that these four students had completed the course leading to the G.C.I.M. and why were they not admitted to the M.B.B.S. course?

THE HON. SRI M. A. MANICKAVELU : The students who were actually studying in the College were taken over and students who had studied before that and who were not actually in the College were not taken.

SRI A. A. RASHEED : Since examinations leading to pre-professional G.C.I.M. have been abolished, will the Government consider taking in these students who have gone through the course leading to G.C.I.M. and allow them to join the pre-professional course for the M.B.B.S.?

THE HON. SRI M. A. MANICKAVELU : It is not possible, because when the College was abolished some procedure was adopted. If we make an exception in the case of students who had finished the course partly and were not in the College, there will be difficulty.

SRI S. LAZAR : எம்.பி.பி.எஸ். டிகிரியைவிட ஜி.சி.ஐ.எம். டிகிரியில் என்ன குறைகள் இருக்கின்றன? அப்படி குறைகள் ஏதாவது இருக்குமென்றால் அவைகளை நிவர்த்தி செய்ய அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்? ஜி.சி.ஐ.எம். டிகிரியையும் எம்.பி.பி.எஸ். டிகிரிக்கு சமமாகவே கருதவேண்டும் என்று ஏதாவது அரசாங்கத்திற்கு விண்ணப்பங்கள் வந்திருக்கின்றனவா?

THE HON. SRI M. A. MANICKAVELU : இதிலுள்ள குறை என்னவென்றால் எம்.பி.பி.எஸ். படிப்பில் முழுவதுமாக அலோபதிக் மெடிஸன்களைப்பற்றி படிக்கிறார்கள். ஜி.சி.ஐ.எம். படிப்பில் நாட்டு முறைகளை 100-க்கு 28 அல்லது 30 அளவுக்கு படிக்கி

23rd February 1961]

றார்கள். இந்த அளவு வித்தியாசம் இருப்பதினால்தான் யூனிவர்சிட்டி இதை ரெகுலர் எம்.பி.பி.எஸ். கோர்ஸ் படிப்புக்கு சமமாக கருதவில்லை.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: Sir, the Hon. Minister said that the whole matter was still under consideration. May I know when a final decision will be taken on this in view of the fact that some students are put to great hardship and they have been repeatedly representing to Government?

THE HON. SRI M. A. MANICKAVELU: இதில் என்ன உத்தேசம் என்றால் இந்த ஜி.சி.ஐ.எம். கோர்ஸ் முடித்தவர்களுக்கு ஒரு கன்டென்ஸ்ட் கோர்ஸ் ஏற்படுத்தி அதில் ஒரு வருடம் அல்லது இரண்டு வருடங்கள் படித்து அதில் பாஸ் பண்ணினால் அவர்களை எம்.பி.பி.எஸ் கோர்ஸுக்கு சமமாக கருதுவது என்று உத்தேசித்திருக்கிறது. முன்னால் எல்.எம்.பி. கோர்ஸ் படித்தவர்களுக்கும் இம்மாதிரி ஒரு கோர்ஸ் ஏற்படுத்தியிருந்தது. இதைப் பற்றி யூனிவர்சிட்டியோடு கலந்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது. இந்த பிரின்ஸிபிலை அவர்களும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். சீக்கிரமாகவே இதன் பேரில் முடிவு எடுக்கப்படும்.

SRI A. A. RASHEED: May I know the colleges where the condensed course will be conducted?

MR. SPEAKER: 'Under consideration' he says; how can he say that now?

THE HON. SRI M. A. MANICKAVELU: The hon. Member is counting the chickens before they are hatched. (Laughter.)

MR. SPEAKER: Next question.

SRI K. VINAYAKAM: Sir, I have given notice of one of these questions; I have been raising my hand in order to attract . . .

MR. SPEAKER: You have not caught the eye of the Speaker; I looked towards you, but you were looking the other side.

SRI K. VINAYAKAM: I was one of the principal persons. I am the author of one of the questions . . .

MR. SPEAKER: May be; very often authors of questions do not ask supplementaries; whenever I turned towards the hon. Member, he was looking the other side. If he was keen, he must have been alert; I have allowed three hon. Members to put supplementaries and they were raising their hands; well, the hon. Member (Sri Vinayakam) was not quite active or was thinking of some other subject. (Laughter.) All right, the hon. Member may put his supplementary.

SRI K. VINAYAKAM: Sir, may I know whether in this condensed course which would be introduced for the benefit of such of those students who had finished the G.C.I.M. course, will

[23rd February 1961

all of them be allowed to take the course together at a time or will they be allowed to take training in batches. If all of them wished to qualify themselves for the M.B.B.S. course, will opportunity be given together or in batches only ?

THE HON. SRI M. A. MANICKAVELU : All that will depend on the details that will have to be worked out. Well, supposing quite a large number wanted that all at once, I do not think enough facilities would be available. Anyway the idea is to give them facilities, either at once or by a phased programme, to enable them to undergo the condensed course.

SRI K. VINAYAKAM : Sir, have the Government assessed what the grievances of the students are who have not completed the G.C.I.M. course who were in the middle of their course, for instance having finished 2 years or 3 years that they are not taken in, in the same year of the M.B.B.S. course and has any consultation taken place between the representatives of the students and the Government to finalise these proposals ?

THE HON. SRI M. A. MANICKAVELU : As regards the first and second-year students, they have been admitted to the regular M.B.B.S. course. The trouble was with regard to the third, fourth and fifth year students, who had undergone a certain curriculum which includes Indian Medicine also. Even for taking the students in the first and second year it is exteremely difficult to provide facilities and if the other students also are to be taken there will be further difficulty.

Vellore market

* 430 *Q.*—SRI M. P. SARATHI : கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

வேலூர் நகராட்சிக்கு மார்க்கெட் அபிவிருத்திக்காக வழங்கப்பட்டுள்ள கடன், மானிய உதவிகள் எவ்வளவு ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : A loan of Rs. 2 lakhs was sanctioned to the Vellore Municipality during 1959–60, for remodelling the main market.

SRI M. P. SARATHI : ஸார், இதற்காக பணம் கொடுத்து இரண்டு வருடங்கள் ஆகியும் இதுவரையிலும் வேலை தொடங்காத தற்கு காரணம் என்ன ? இனிமேலாவது சீக்கிரமாக இந்த வேலையை தொடங்குவதற்கு நகரசபைக்கு சர்க்கார் கட்டளையிடுமா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : இதில் கால தாமதம் ஏற்படுவதற்கு காரணம் சீப் என்ஜினியரிடத்திலிருந்து இதுவரையிலும் சாங்ஷன் கிடைக்கவில்லை. அதற்காக

[23rd February 1961

இன்ஸ்பெக்டர் ஆப் லோகல் போர்ட்ஸ் அவர்கள் சீப் இன்ஜினியரிடத்தில் ரிப்போர்ட் கேட்டிருக்கிறார்கள். அது வந்தவுடன் வேலை ஆரம்பிக்கப்படும்.

Housing Scheme.

* 431 *Q*.—Sri A. VEDARATHNAM : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1959-60-ல் கிராமங்களில் கூட்டுறவு முறையில் வீடு கட்டும் திட்டத்திற்காக ஒதுக்கிய தொகை எவ்வளவு ?

(ஆ) அதில் செலவானது எவ்வளவு ?

THE HON. SRI R. VENKATARAMAN : (அ) Rupees three lakhs and fifty thousand (Rs. 3.50,000).

(இ) Rupees three lakhs, forty-nine thousands, eight hundred and thirty (Rs. 3,49, 830).

SRI A. VEDARATHNAM : கிராம கூட்டுறவு சங்கங்கள் மூலம் வீடு கட்டுவதற்கு நிரம்ப தேவையிருப்பதால் இந்தத் தொகையை அதிகரிக்க அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இதைப்பற்றிய விவரமான தகவல் இப்போது என்னிடமில்லை. கொடுத்த தொகை பூராவும் செலவு செய்யப்பட்டிருக்கிறது என்கிற விவரம் என்னிடத்தில் இருக்கிறது.

MR. SPEAKER : இன்னும் மூன்று நிமிடங்கள் இருக்கின்றன. அதற்குள் பாக்கியிருக்கின்ற கேள்விகளை எடுத்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன். மூலக் கேள்வி கேட்டிருக்கும் அங்கத்தினர்கள் மட்டும் ஒவ்வொரு கேள்வியை கேட்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

SRI M. KALYANASUNDARAM : I suggest that some more time, say five minutes more, may be taken.

MR. SPEAKER : Even then I cannot allow many supplementaries to every question.

Professional Colleges

* 432 *Q*.—SRI T. T. DANIEL : Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any proposal to lower the age-limit for the students of Scheduled Castes, Scheduled Tribes and Backward Communities for admission to the Engineering and Medical Colleges ?

THE HON. SRI C. SUBRAMANIAM : No, Sir.

[23rd February 1961

SRI T. T. DANIEL : May I know, Sir, the present age limit that is fixed and also whether it is a fact that students belonging to these communities are not coming in sufficient numbers to fill the respective seats in Colleges and the reasons therefor?

THE HON. SRI C. SUBRAMANIAM : With regard to Schedule Castes, no doubt sufficient number of students are not coming forward for admission to Engineering College, Medical College and other professional colleges. That problem cannot be solved by lowering the age of admission.

Collector (Tirunelveli)

* 433 *Q.*—SRI M. KALYANASUNDARAM (on behalf of SRI T. S. RAMASWAMI) : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government have received any complaint recently against the Collector of Tirunelveli from the M.L.As. or from the District Congress Committee recently;

(*b*) if so, the nature of the complaint; and

(*c*) whether there has been any request for the transfer of the Collector; if so, the reason therefor?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

(*c*) No, Sir.

SRI M. KALYANASUNDARAM : ஸார், அமைச்சர் அவர்கள் சொல்லுவது தான் காரணமாக இருந்தால் இந்தக் கலெக்டர் அவர்களை திடீரென்று மாற்ற வேண்டிய காரணம் என்ன?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்தக் கலெக்டர் திடீரென்று மாற்றப்பட்டார் என்று சொல்லுவது தவறு. நிர்வாக முறையில் பல இடங்களிலுள்ள அதிகாரிகளை அடிக்கடி மாற்ற வேண்டியிருக்கும். இவ்விதம் மாற்றுவது அங்கத்தினர் அவர்களுக்குத் தெரியும்போது, திடீரென்று மாற்றம் செய்திருக்கிறார்கள் என்று நினைப்பது சரியல்ல.

Interference in administration

* 434 *Q.*—Sri V. K. RAMASWAMY MUDALIAR (on behalf of SRI T. S. RAMASWAMI) : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government have received any resolution from an all Party meeting held in Tirunelveli in the month of October regarding the interference of Political Parties in the day-to-day administration of the district;

23rd February 1961]

(b) whether the Government have acquired into the matter and if so, the results thereof?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) Yes, Sir.

(b) No action was considered necessary.

Artificial teeth

* 435 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether the Government have made any recommendation to the Union Government for the increase in the import of artificial teeth; and

(b) if so, the reply received from the Centre ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) No, Sir.

(b) Does not arise.

SRI M. KALYANASUNDARAM : Sir, question No. 434 has not been answered.

MR. SPEAKER : No; it has been answered. It was put by Sri V. K. Ramaswamy Mudaliar and it was answered. If the hon. Member has not heard that, I cannot help.

SRI M. KALYANASUNDARAM : For question No. 433 it was said 'No complaint was received'; with regard to question No. 434 which is with regard to the resolution of the All Party Meeting, the Hon. Minister has not replied.

MR. SPEAKER : No, it also has been answered.

SRI A. A. RASHEED : Is the Hon. Member aware that import of artificial teeth has been reduced recently and if so, will the Government consider the question of recommending to the Union Government, in the interests of toothless persons, to import more artificial teeth?

THE HON. SRI M. A. MANICKAVELU : It has been already recommended by the Dental Council of India that the quota should be increased from 10 to 25 per cent.

SRI M. KALYANASUNDARAM : Sir, I want to make my point clear. The Hon. Minister has replied only to the second part of the question and not to the first part of the question, viz., whether the Government have received any resolution from an all party meeting held in Tirunelveli. 9.30 a.m.

MR. SPEAKER : May I remind the hon. Member, Sri Kalyanasundaram that the hon. Member, Sri V. K. Ramaswamy Mudaliyar put the question and the Hon. Minister for Finance answered it ?

[23rd February 1961

Manimuthar project

* 436 *Q.*—**Sri M. P. SARATHI:** கனம் பொதுமராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம் திருச்செந்தூர் தாலுகாவில் எத்தனை கிராமங்கள் மணிமுத்தாறு திட்டத்தினால் பயன் பெற்றுள்ளன ?

(ஆ) அந்தத் தாலுகா 57-ம் நெ. கிராமத்தில் எத்தனை குளங்களுக்குத் தண்ணீர் வசதி செய்யப்பட்டுள்ளது ?

(இ) கல்லாகுளம் பாசனத்திற்கு தண்ணீர் விடப்படுகிறதா ?

The Hon. Sri P. KAKKAN : (*a*) 16 (sixteen).

(*b*) Pudukulam is the Revenue Village No. 57 in Tiruchendur taluk and it is not included under the project.

(*c*) No, Sir.

Small-scale Industries

* 437 *Q.*—**Sri A. VEDARATHNAM:** கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960-ம் வருடம் செப்டம்பர் மீ 5உ-ல் 424-வது எண் கேள்விக்கு அளித்த பதிலை யொட்டி, அமெரிக்க சிறு தொழில் அபிவிருத்திக் கார்ப்பரேஷனிலிருந்து இதுவரை பெற்றிருக்கும் நிதியில் தனியார் துறைக்குப் பெற்றது எவ்வளவு? எந்தெந்த இனத்திற்கு ?

(ஆ) அரசாங்கம், எந்தெந்த இனத்திற்கு எவ்வளவு தொகையைப் பெற்றிருக்கிறது ?

(இ) மேலும், எந்தெந்தத் துறைக்கு எவ்வளவு தொகைக்காக விண்ணப்பித்திருக்கிறது ?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) No private party in Madras State has so far received any financial aid from the United Nations Development Loan Fund.

(*b*) & (*c*) No assistance has so far been sought for or received by the Government Units.

Training School (Urdu)

* 438 *Q.*—Sri A. A. RASHEED : Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any proposal to locate the Training School for both Secondary and Higher Grades (for Urdu-speaking girls students) in the Madras City?

The Hon. Sri C. SUBRAMANIAM : No, Sir.

23rd February 1961]

SRI A. A. RASHEED : Since the Training School is in Tiruchirappalli, many of the Urdu-speaking girl students find it difficult to study there. So, will the Government consider the question of locating it in the Madras City in the interest of those girls?

THE HON. SRI C. SUBRAMANIAM : This training programme is held for two years at Tiruchirappalli and then for two years in the Madras City alternately. Considering the number of teachers required, this training programme is more than sufficient.

Engineering Colleges

* 439 *Q.*—SRI A. **VEDARATHNAM:** கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இம்மாநிலத்திலுள்ள இன்ஜினிரிங் கல்லூரிகளில் போஸ்ட் கிராஜுவேட் பட்டப்படிப்புகள் ஆரம்பிக்க உள்ள வாய்ப்புகளை ஆராய மத்திய சர்க்கார் பேராசிரியர் ஸ்ரீ எம். எஸ். தாக்கர் தலைமையில் நியமித்த கமிட்டி இங்குள்ள எந்தெந்த கல்லூரிகளைப் பார்வையிட்டது?

(இ) அதன் பேரில், அக்கமிட்டி என்ன சிபாரிசுகள் செய்துள்ளது?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) (1) College of Engineering, Guindy.

(2) Alagappa Chettiar College of Technology, Guindy.

(3) Alagappa College of Engineering and Technology, Karaikudi.

(4) Annamalai University.

(*b*) The Report of the Post Graduate Committee has not yet been received.

MR. SPEAKER : Questions are over.

[*Note.*—**As asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]**

II.—ADJOURNMENT MOTION *RE* THE ACTION OF THE POLICE IN RAMANATHAPURAM DISTRICT.

SRI M. KALYANASUNDARAM : Sir, I have received some alarming reports from the Ramanathapuram district from my Party office. In the village of Kilapasali the Police have entered . . .

MR. SPEAKER : Let the hon. Member please read the matter.

SRI M. KALYANASUNDARAM : It is as follows :—

' That the business of the House be adjourned to discuss the following matter of urgent public importance, viz., the action of the Police in beating the villagers in the village of Kilapasalai,

Ramanathapuram district, and molesting womenfolk including removal of thalis and giving protection to the rowdies who attacked the peasants.'

MR. SPEAKER : When did this happen?

SRI M. KALYANASUNDARAM : Between 10th and 14th of this month. Even now the Police are camping there and the trouble is not yet over.

MR. SPEAKER : I must bring to the notice of the hon. Member that the matter must be a matter of urgent public importance. It may be, that this matter may be a matter of public importance but it is not urgent because it took place between the 10th and 14th instant. How can the hon. Member move an adjournment motion on the 23rd instant, that is to-day? I would very strongly advise him to give notice of a short notice question.

SRI M. KALYANASUNDARAM : Still there is harassment by the Police.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, we have no information about the allegations made by the hon. Member. Simply because the hon. Member has raised the matter on the basis of some information he received from his party office, and made certain allegations, it should not be thought that because they are not contradicted they are true. If the hon. Memeber is interested, he can give notice of a short notice question.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கனம் சபாநாயகர் அவர்களே, நான் ஒரு மாதத்திற்கு முன்பு மானாமதுரைக்குப் போயிருந்தபோது, இந்த கிராமத்தில் சில பலாத்கார நடவடிக்கைகள் நடத்தப்படுகின்றன, போலீஸும் கேட்பதில்லை என்று புகார் செய்தார்கள். இன்றைய தினம் பத்திரிகைகளில் சில தகவல்கள் வந்திருப்பதை கனம் அங்கத்தினர்கள் பார்த்திருப்பார்கள். அதைப்பற்றி என்னிடம் இப்போது தகவல் இல்லை. கனம் அங்கத்தினர் பழனிசாமி அவர்கள் குறுகிய காலக் கேள்வியொன்று கொடுத்திருக்கிறார். அதற்கு சீக்கிரத்தில் தகவல் சேகரிக்கப்பட்டு பதில் அளிக்கப்படும். ஆகையால் இந்த அவசரப் பிரேரணைக்கு அவசியமில்லை என்று நினைக்கிறேன்.

MR. SPEAKER : I think the hon. Member can accept the suggestion of the Hon. Minister. I rule his adjournment motion out of order.

III.—GOVERNMENT BILLS.

(1) THE MADRAS WAKF (SUPPLEMENTARY) BILL, 1961.

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I beg leave to introduce the Madras Wakf (Supplementary) Bill, 1961.

23rd February 1961]

MR. SPEAKER : The question is—

'That leave be granted for the introduction of the Madras Wakf (Supplementary) Bill, 1961.'

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

(2) THE LAND ACQUISITION (MADRAS AMENDMENT) BILL, 1961.

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I beg leave to introduce the Land Acquisition (Madras Amendment) Bill, 1961.

MR. SPEAKER : The question is—

'That leave be granted for the introduction of the Land Acquisition (Madras Amendment) Bill, 1961.'

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

(3) THE MADRAS STATE HOUSING BOARD BILL, 1961
(L.A. BILL NO. 31 OF 1960)—*cont.*

Clause 7.

* THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, yesterday a number of amendments were accepted in this House. We have examined those amendments and a few consequential amendments have become necessary by reason of the acceptance of those amendments. Therefore, I now move—

'That clause 7 be reopened.'

The motion was put and carried and clause 7 was reopened.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move the following amendment to clause 7 :—

"In sub-clause (1), item (*a*) *omit* the word 'either'."

Yesterday the House accepted the amendment of the hon. Member, Sri Kalyanasundaram, deleting the words "or in respect of the offence committed he has been pardoned". Consequently, the word 'either' occurring in the clause is superfluous and in fact it would be wrong to retain it. Therefore, the word 'either' may be omitted.

MR. SPEAKER : The question is—

"In sub-clause (1), item (*a*) *omit* the word 'either'."

The amendment was put and carried.

Clause 7 as amended was put and carried.

Clause 30.

THE HON. SRI R. VENKATARAMAN : I move—

' That Clause 30 be reopened '.

The motion was put and carried and Clause 30 was reopened.

THE HON. SRI R. VENKATARAMAN : I move the following amendment :—

" In clause (*b*) of the proviso, for the words ' such directions as it may deem fit ', *substitute* the words ' such directions as it or they may deem fit '."

It is only a verbal alteration.

SRI S. LAZAR : On a point of order, Sir. In clause 30 I do not find the words " such directions as it may deem fit."

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, the hon. Member is looking at the original clause.

MR. SPEAKER : Yesterday the House accepted the amendment of the hon. Member, Sri Srinivasa Ayyar, and in that amendment those words are included.

The question is—

" In clause (*b*) of the proviso, *for* the words ' such directions as it may deem fit ', *substitute* the words ' such directions as it or they may deem fit '."

The amendment was put and carried.

Clause 30 as amended was put and carried.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move—

' That the Madras State Housing Board Bill, 1961 (L.A. Bill No. 31 of 1960) as amended be passed.'

MR. SPEAKER : Motion moved—

' That the Madras State Housing Board Bill, 1961 (L.A. Bill No. 31 of 1960) as amended be passed.'

* SRI R. SRINIVASA IYER : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவானது 162 ஷரத்துக்களுடன் ஒரே நாளில் அதுவும் கூட 1½ மணிவரைகூட விவாதிக்கப்படாமல் வெகு சீக்கிரத்திலே முடிவடைந்துவிட்டது. தவிர, இவ்வளவு பெரிய மசோதா செலக்ட் கமிட்டியில்கூட ரொம்பவும் குறுகிய காலத்திலே

23rd February 1961] [Sri R. Srinivasa Iyer]

முடிந்திருக்கிறது. அதே நேரத்திலே, இந்த மசோதா ஒரு பெரிய மகத்தான சேவை செய்யக்கூடிய ஒரு சட்டம். ஏராளமான சக்தி, பொருளாதார உதவி, பணத்தை இஷ்டப்படி விநியோகம் செய்யக்கூடிய ஒரு பவர் ஆகிய இவைகளைக் கொண்டுள்ள அதிகாரங்களுடன் கூடிய ஒரு போர்டு நியமிக்கப்பட்டு, சென்னை மாகாணம் பூராவும் சேவை செய்யப்போவதாக செய்யப்பட்ட ஒரு சட்டம். இதிலே பல விதிகளிலே போர்டு சர்க்காருடன் சேர்ந்து செய்யவேண்டிய கடமைகள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. சென்னை ராஜ்யத்திலே வீட்டு நெருக்கடி தீரவேண்டுமானல், எவ்வித காலதாமதமும் இல்லாமல் இந்தச் சட்டத்தில் கண்டுள்ளபடி வெகு சீக்கிரத்திலே இது நிறைவேற்றப்பட வேண்டும். நேற்று இதைப்பற்றி விவாதம் நடந்தபோது, நில ஆர்ஜித சட்டம் 1 ஆப் 1894படி செய்தால், காலதாமதமாகும் என்று விவாதித்தோம். கனம் மந்திரி அவர்கள், அதற்குச் சட்டத்தைத் திருத்துவதற்கு சீக்கிரத்திலே நில ஆர்ஜித மசோதா கொண்டு வரப்படும் என்று அறிவித்தார்கள். இன்றைக்கு அஜண்டாவிலே, நில ஆர்ஜித சட்டத்திருத்த மசோதாவை கனம் ரெவின்யூ மந்திரி அவர்கள் பிரரேபிக்கப்பட இருக்கிறதைப் பார்க்க, இது வெகு சீக்கிரத்திலே ஏற்பட்டு, அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்று நம்ப வேண்டியிருக்கிறது.

(Sri V. Subbiah in the Chair).

ஆனல் ஒரு விஷயம் மட்டும் கேட்டுக்கொள்கிறேன். இந்தத் திருத்தமானது வெகு காலமாகவே வரப்படுமென்று எதிர் பார்க்கப்பட்டிருக்கும். இதை இப்போது இந்த பட்ஜெட் கூட்டத்தில் விவாதிப்பதென்றல், காலதாமதம் ஏற்படலாம். ஆகவே பட்ஜெட் செஷன் முடிவடைவதற்குள், உடனடியாகவே அதை விவாதத்திற்கு எடுத்துக்கொண்டு, ஒரு பொறுக்குக் கமிட்டிக்கு விட்டு, அவுசிங் போர்டு மசோதா எவ்வளவு சீக்கிரத்தில் முடிவெடுக்கப்பட்டதோ அதைப்போல், இந்த பட்ஜெட் செஷன் முடிவதற்குள் இந்த மசோதாவை நிறைவேற்றி விட வேண்டுமென்று நான் சம்பந்தப்பட்ட சர்க்கார் அமைச்சர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அப்படி இல்லாவிட்டால், இந்த அவுசிங் போர்டு சட்டம் இவ்வளவு அவசரமாக விவாதித்து முடிவெடுக்கப் பட்டபோதிலும், அதன் பலன் நமக்கு கிடைக்காது.

இன்னும் இந்தச் சட்டம் வீடுகள் கிடைப்பதில் இருக்கக்கூடிய நெருக்கடியைத் தீர்ப்பதற்காக என்ற அபிப்பிராயத்தோடு நிறைவேற்றப்பட்டிருப்பதால், சென்னை நகரத்தைப் பற்றி மட்டும் அக்கறை எடுத்துக்கொள்ளாமல், வழக்கம்போல் நகரங்களையே செப்பனிட்டுக்கொண்டு கிராமாந்திரங்களை புறக்கணித்து வருவதுபோல் இல்லாமல், மற்றும் முக்கியமான முதல்தர பஞ்சாயத்துக்களுக்கும் அதாவது டவுன் பஞ்சாயத்துக்களுக்கும், முனிசிபாலிடியாககூடிய அளவில் 25,000 ஜனத்தொகையும், 1,50,000 ரூபாய் ரெவின்யூ வரக்கூடிய பஞ்சாயத்தாக இருந்தாலும் முனிசிபாலிடி ஆக்கப்படாமல் இருந்தாலும்கூட, அப்படிப்பட்ட இடங்களில் உள்ள வீட்டு நெருக்கடிகளைத் தீர்ப்பதற்காக இந்த

அவுசிங் போர்டு உடனடியாக கூட்டம் கூடி, அந்தந்தப் பஞ்சாயத்து எல்லைக்கும், அருகாமையிலே இருக்கக்கூடிய இடங்களுக்கும் திட்டங்கள் ஏற்படுத்தி, ஒவ்வொரு ஜில்லாவுக்கும் ஒரு அவுசிங் யூனிட்டு ஏற்படுத்தி, ஒவ்வொரு ஜில்லாவிலும் இந்த அவுசிங் யூனிட்டுகள் உடனடியாகக் கூடி விவாதிக்க இந்த போர்டின் அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும். அதோடு நான்-அபிஷியல் மெம்பர்களின் கூட்டத்தையும் கூட்டி, அந்தந்தப் பிராந்தியங்களில் இத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக தீவிரமான நடவடிக்கை எடுத்துக் கொண்டால், இந்த விட்டு வாடகை ஏறிக்கொண்டே போவதும், விலை ஏறிக்கொண்டே போவதையும் தடுப்பதற்கான ஒரு நிவாரணம் ஏற்படும். ஸ்தலம் அபிவிருத்தி ஸ்கீமுக்கு மட்டும் இதை அமுலுக்கு கொண்டு வருவது கூடாது.

(Mr. Speaker in the Chair.)

அது ஒருபுறமிருக்க, கிராமங்களிலேகூட பஞ்சாயத்திற்கு உட்பட்ட எல்லைக்குள் இருக்கக்கூடிய இடங்களிலே இந்த விடுகள் கட்டுவதில் சில கஷ்டங்கள் இருப்பதால், அதற்கும் தகுந்த நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த போர்டிலே உத்தியோகஸ்தர்கள் நியமிப்பதற்கு சேர்மனுக்கும், போர்டுக்கும் அதிகாரம் உண்டென்றும், ஆயிரத்திற்கு மேற்பட்ட வருமானமுள்ள உத்தியோகஸ்தர்களை நியமிக்க போர்டு சர்க்காருக்கு அனுப்ப வேண்டுமென்றும் அதிகாரம் கொடுக்கப்பட்டு இருக்கிறது. தவிர, உத்தியோகஸ்தர்கள் நியமிப்பதில், பப்ளிக் சர்விஸ் கமிஷன் மூலம் இந்த உத்தியோகஸ்தர்களை நியமித்தால், ரொம்பவும் காலதாமதமாகும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இது உண்மை தான். ஆனாலும்கூட, இந்த அதிகாரிகளை நியமிப்பதில் நல்ல கண்காணிப்போடு, எல்லா வகுப்பினருக்கும் ரெப்ரசென்டேஷன் இருக்கும் வகையிலே, பாக்வேர்ட் கம்யூனிடிகளால் எந்தவித ஆட்சேபணையும் இல்லாத முறையில், அந்தந்த நியமனங்களைச் செய்யும்படி சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த டெபர்ட் தெரு ஸ்கீம் இருக்கிறதே, அது ஒரு பெரிய வேலை. இவைகளை நிறைவேற்றப்படுவதில் பல கஷ்டங்கள் இருக்கின்றன. நேற்றுகூட பேசும்போது, சாந்தோமில் இருக்கக் கூடிய நெருக்கடியைப் பற்றி கூறப்பட்டது. இந்நிலைமை முனிசிபாலிடிகளிலும், டவுன் போன்ற இடங்களிலும்கூட இருக்கிறது. ஆனால் இந்தக் கஷ்டங்கள் இருக்கிறதே என்று சொல்லிக்கொண்டு வந்தால், இன்னும் காலதாமதமாகிக் கொண்டுதான் வரும். அதனால் இந்த டெபர்ட் தெரு ஸ்கீமை நிறைவேற்றப்படாமல் போய்விடும். ஆங்கிலத்திலே, "It is good to have giant's strength. But to use it like a giant is tyrannous என்று சொல்வார்கள். இந்த டெபர்ட் தெரு ஸ்கீமை நிறைவேற்றுவதில் பல கஷ்டங்கள் இருந்தாலுங்கூட, உடனடியாக இப்பிரச்னையைத் தீர்க்க ஓரளவு அதிக காம்பன்சேஷன் கொடுக்க

23rd February 1961] [Sri R. Srinivasa Iyer]

வேண்டி வந்தாலும் கொடுத்து, இத்திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். இருபது வருஷம் என்று தள்ளிப் போட்டு விடாமல், சீக்கிரத்திலே இத்திட்டத்தை நிறைவேற்ற ஜனங்களுக்கும், வீடுகளுக்கும் அதிக பாதகம் ஏற்படாத முறையிலே சில பகுதிகளை இடித்துத் தள்ள வேண்டுமென்றும், இடித்துத் தள்ளி சீக்கிரத்திலே இந்த ஸ்கிமை நிறைவேற்றும்படி கேட்டுக்கொள்கிறேன்.

எப்போதும் சட்டங்களுக்கு ரூல்கள் கொண்டு வருவதிலே காலதாமதம் ஏற்படுகிறது. 1939-ம் வருஷத்திலே செய்யப்பட்ட சட்டத்திற்கு 1960-ம் வருஷத்தில் விதிகள் வருகின்றன. இந்த விதிகளை மாற்றும்படி சொல்லியிருக்கிறோம். இந்த விதிகள் எப்போதும் ஒரு சட்டம் அமுல் செய்யும்போது, அதோடு உடனடியாகச் செய்யவேண்டும். ஆகையிலே இந்தச் சட்டமும் அதற்கான விதிகளும் சீக்கிரம் நிறைவேற்றப்படவேண்டும். அதாவது இச் சட்டம் கவர்னருக்கும், பிரசிடெண்டுக்கும் போய் வருவதற்குள், அதற்கான விதிகளைத் தயாராகச் செய்து, சட்டம் என்று அமுல் செய்யப்படுகிறதோ, அன்றே விதிகளையும் அமுலாக்க வேண்டும். அப்படிப் பண்ணினால்தான் நல்லது. இது ரொம்ப முக்கியமான விஷயம், உரிமையை பாதிக்கக்கூடிய விஷயம். இல்லாவிட்டால், ஹைகோர்டுக்கு, சுப்ரீம் கோர்டுக்கு என்று ரிட் போட்டுக் கொண்டிருக்கக் கூடிய நிலைமை ஏற்படும். அதனால், வீட்டு வசதியை நாம் எவ்வளவு சீக்கிரத்தில் அடைய வேண்டுமென்று நினைக்கிறோமோ, அதன் பலன் கிடைக்காமல் போய்விடும். இதற்கு விதிகளை உடனடியாகத் தயாரிக்காக வேண்டும். இந்த விதிகளைப் பற்றி அடிக்கடி சப்பார்டினேட் லெஜிஸ்லேஷன் கமிட்டிக் கூட்டத்தில் பேசி இருக்கிறோம். ஆகவே இது சீக்கிரம் அமுலாக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பெட்டர்மெண்ட் பீ லெவியைப் பற்றி இந்த போர்டுக்கு அதிகாரம் இருக்கிறது. அதைப்பற்றி டிரிபியூனலிலுள்ள சபார்டினேட் ஜட்ஜுக்கு மேலதிகாரம் கொடுக்கப்பட்டிருப்பது வாஸ்தவம்தான். இந்த பெட்டர்மெண்ட் பீலெவி செய்வதில்கூட இந்த ஸ்கிமை தாமதம் செய்தால், பின்னால் விலை அதிகமாய்விடும். இப்போது விலை ஜாஸ்தியாக நிர்ணயித்து, அதில் 1/3 பெட்டர்மெண்ட் பீயாக கொடுக்கப்பட்டு வருகிறது. அதனாலே இந்த பெடர்மெண்ட் லெவியை சீக்கிரமாக நிறைவேற்றி, உடனடியாக விலை நிர்ணயம் செய்தால், இப்போது கட்டுவதைப்போல் அதிகப்படியான தொகை கட்ட வேண்டிய நிலைமை ஏற்படாது. ஆகவே, இதை எவ்வளவு சீக்கிரமாகச் செய்யவேண்டுமோ, அவ்வளவு சீக்கிரமாகச் செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

கோடிக்கணக்கான தொகையை சர்க்காரிடத்தில் இருந்தும் அல்லது பிறரிடத்தில் இருந்தும் டிபென்சராக எடுக்கப்பட்டு, பெரிய வேலையைச் செய்யக்கூடிய முக்கிய பொறுப்பும், அதிகாரமும் இந்த போர்டுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த போர்டுக்கு கொடுக்கப்பட்டுள்ள அதிகாரம், எலக்டிரிசிடி போர்டுக்கு கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தைவிட அதிகமானது

[Sri R. Srinivasa Iyer] [23rd February 1961

என்று நான் நினைக்கிறேன். எலக்ட்டிரிசிடி போர்டிலே அவர்கள் சம்பந்தப்பட்ட வேலைக்கு சர்க்காரிடத்திலே கடன்கள் வாங்கி; அதற்கு வேண்டிய கணக்குகளை நமக்கு பட்ஜெட் விவாதத்திற்கு வைக்கிறார்கள். நேற்று கனம் அமைச்சர் அவர்கள் பேசும்போது கூட, பட்ஜெட்டிலே இதற்கும் விவாதம் வைத்துக் கொள்ளலாம் என்று சொன்னார்கள். அப்படி இதைப்பற்றி பட்ஜெட்டிலே பேசுவது என்று சொன்னால், நமக்குக் கிடைக்கக்கூடிய 5 அல்லது 10 நிமிஷ நேரத்திலே இந்த விஷயத்தை எடுத்துக்கொண்டால், பாக்கி விஷயங்களைப் பற்றி பேசுவதற்கு முடியாமல் போய்விடுமே என்று அஞ்ச வேண்டியிருக்கிறது. எலக்ட்டிரிசிடி பட்ஜெட்டுக்கு மட்டும் தனியாக ஒருநாள் வைத்து, விவாதிப்பதுபோல் இந்த அவுசிங் போர்டு பட்ஜெட் எஸ்டிமேட், ரிவைஸ்ட் பட்ஜெட் எஸ்டிமேட் போன்றவைகளை இந்த சட்டசபை முன்னாலே விவாதத்திற்கு வைத்தால், எங்கெந்த இடங்களில் குறை இருக்கிறது என்பதை மக்களின் பிரதிநிதிகளாகிய சட்டசபை மெம்பர்கள் கவனித்து, அவைகளை எடுத்துச் சொல்வதற்கு ஒரு சந்தர்ப்பம் அளித்ததாக இருக்கும். இந்த போர்டிற்கு கடன் கொடுப்பதை மட்டும்தான் சர்க்கார் பட்ஜெட்டில் சொல்லு வார்கள். சர்க்கார் பட்ஜெட்டில் முழு விவரங்கள் வராது. எத்தனை கோடி ரூபாய் கடன் கொடுத்திருக்கிறார்கள் என்பதை மட்டும்தான் சொல்லுவார்கள். எங்கே ஸ்கீம் போட்டிருக்கிறார் கள் போன்ற 'டீடைல்ஸ்' வராது. ஆகவே, நான் சர்க்காரை கேட்டுக்கொள்ளுகிறேன். பட்ஜெட் விவாதத்திற்கு பிறகு, ஒரு மாதம், இரண்டு மாதம் சென்று வந்தால்கூட பரவாயில்லை, இந்த ஹவுசிங் போர்டு பட்ஜெட்டை சட்ட சபைக்கு முன்னால் விவாதத் திற்கு மட்டும் வைக்கவேண்டும்—வோட்டு எடுக்கத் தேவையில்லை —என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

SRI S. LAZAR: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதா சட்டமாக நிறைவேறக்கூடிய இந்த சந்தர்ப்பத்திலே ஒன்றிரண்டு முக்கியமான கருத்துக்களை நான் சொல்ல விரும்பு கிறேன். இந்த மசோதாவை அரசாங்கம் இங்கே கொண்டுவந்த பொழுது, எனக்குத் தெரிந்த வரையில் இதே போன்று ஒரு முறை மேல் நாடுகளில், அமெரிக்கா போன்ற நாடுகளில் கையாளப் படுகிறது என்று தெரிந்துதான் நமது மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் அதே மாதிரி ஒரு திட்டத்தை இங்கு கொண்டு வந்திருக் கிறார்கள். ஆனால் அங்கு எந்த அளவிற்கு அந்த முறையானது அதிகப்படியான வீடுகளை கட்டுவதற்கு உதவியாக இருக்கிறதோ அந்த அளவிற்கு நாமும் இங்கே முயற்சி எடுக்கவேண்டும் என்பதுதான் என்னுடைய முதலான கருத்து. ஹவுசிங் போர்டு பெயர் அளவிலே நின்று விடக்கூடாது. ஏராளமான வீடுகளைக் கட்டும் நல்ல ஒரு சூழ்நிலையை அமைத்துக் கொடுக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். அந்த வேலையை எப்படி செய்யப் போகிறார்கள் என்பது எனக்கு உள்ளபடியே சந்தேகம் கொடுக்கிறது. காரணம், இந்த போர்டினுடைய ஒரு உருவமாக இருந்த நகர அபிவிருத்தி டிரஸ்டு சென்னை நகரத்தில் மட்டும்

23rd February 1961] [Sri S. Lazar]

தான் இயங்கிக்கொண்டு வந்தது. சென்னை நகரத்தில் மட்டும் இயங்கி வரக்கூடிய இந்த ஸ்தாபனம் ஒரு கணிசமான அளவிற்கு வீடுகளை கட்டியிருக்கிறது என்று சொன்னபோதிலும்கூட, அது தேவையான அளவிற்கு வீடுகளை கட்ட முடியவில்லை என்பதை யாரும் மறுக்க முடியாது. வீடுகளுக்கான தேவைக்கும், இவர்கள் கட்டியிருக்கக்கூடிய வீடுகளின் எண்ணிக்கையும் பார்க்கும் பொழுது எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்று நான் சொல்ல முடியும். ஆகவே, மேலும் அதிகப்படியான வீடுகளை கட்ட வேண்டும் என்று சொன்னால், என்னென்ன வசதிகளை இந்த போர்டு செய்துகொடுக்கப்போகிறது என்பதைக் குறித்துத்தான் இது அமையப்போகிறது. அதோடுகூட இது எந்த அளவிற்கு அதிகப்படியான பல உதவியைட் அரசாங்கம் இந்த போர்டிற்கு செய்யக்கூடும் என்பதைப் பொறுத்தும் அமையக்கூடியதாக இருக்கிறது. இப்பொழுது இருக்கக்கூடிய முறையில் அவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மட்டும் பணம் கிடைக்கும் வாய்ப்பு இருக்கிறது. அந்த அளவிற்கு மட்டும் பண உதவி கொடுத்து விட்டால் நாம் எண்ணைக்கூடிய எண்ணம் நிறைவேறாது. அதிகப் படியான அளவிற்கு அவர்களுக்கு பணம் கிடைக்கவேண்டும். அதோடு பொது மக்களும்கூட இதில் நல்ல நம்பிக்கை வைத்து அவர்களுடைய பணத்தையும் ஏராளமாக வாங்கக்கூடிய அளவிற்கு நாம் வகை செய்யவேண்டியது அவசியம். அந்த அளவிற்கு பண உதவி அதிகம் கிடைக்க ஏற்பாடு செய்யப் பட்டால்தான் இந்த போர்டு நல்ல முறையில் இயங்குவதற்கு வாய்ப்பு இருக்கும். இன்னும் அந்த அளவிற்கு அதிகப்படியான வீடுகளை கட்ட முற்படக்கூடிய நேரத்திலே மற்றொரு முக்கியமான கருத்தையும் மனதில் கொள்ளவேண்டியிருக்கிறது. இவர்கள் ஏராளமான வீடுகளை குறிப்பிட்ட காலத்தில் கட்டுவதற்கு முற்படுகின்ற நேரத்தில் விலைவாசிகள் ஓரளவிற்கு அதிகப்படியாக உயர்வதற்கு இவர்கள் ஏதுவாக இருக்கிறார்கள். இவர்கள் வாங்கக்கூடிய பொருள்களோ அல்லது அவர்கள் அமைத்திருக்கக் கூடிய தொழிலாளர்களோ நல்ல முறையிலே இருக்கவேண்டும் என்று சொன்னால் அவர்களுடைய ஊதியத்தை கவனிப்பதோடு கூட, அந்த வட்டாரத்திலே இருக்கக்கூடிய நிலைமையையும் சற்று அனுசரிக்கவேண்டும். ஒரு சில இடங்களில் இந்தத் திட்டம் நிறை வேறுகிற காரணத்தினால் திடீரென்று சாதாரணமாக அங்கே மக்கள் கட்டக்கூடிய வீடுகள்கூட கட்ட முடியாமல் தடைபட்டுப் போய்விடுகிறது. அதையும்கூட அரசாங்கமும், இந்த போர்டும் கவனிக்கவேண்டும். அந்த அளவிற்கு இவர்கள் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். எந்தப் பொருள்கள், எந்த சாமான்கள் வாங்கினால் விலை குறைவாக இருக்குமோ அந்த சாமான்களை வாங்கி சேகரித்து வைக்கக்கூடிய அளவிற்கு நாம் இப்பொழுது வகை செய்திருக்கிறோம். அந்த முறையை நடைமுறையில் கொண்டுவரவேண்டும். அதேபோன்று இரும்பு போன்ற பொருள் களை இந்த போர்டு ஓபன் மார்க்கெட்டில் மற்றவர்களோடு போட்டி போட்டுக்கொண்டு வாங்கக்கூடிய அளவிற்கு நாம் வகை செய்யக் கூடாது. அவர்களுக்கு நேரடியாக பெரிய தொழிற்சாலை களிலிருந்து கிடைக்கக்கூடிய முறையிலே ஏற்பாடு செய்து

[Sri S. Lazar] [23rd February 1961

கொடுத்தால் அவர்களுக்கும் விலை குறைவாக கிடைக்கும். அதோடுகூட மற்றவர்களுக்கும் இந்த போர்டார் பெரும் அளவிற்கு ஓபன் மார்கெட்டில் வாங்குவதினால் பாதகம் ஏற்படாமல் இருக்கும். ஆகவே, இந்த சில கருத்துக்களைக்கூட மனதில் கொண்டு இந்த போர்டு இயங்கவேண்டும்.

அதோடுகூட, முக்கியமாக கனம் சீனுவாசய்யர் அவர்கள் சொன்னதுபோல வீடு நெருக்கடி எல்லா நகரங்களிலும்தான் இருக்கிறது. குறிப்பாக திருச்சி போன்ற நகரங்களில் வீடு நெருக்கடி மிகவும் அதிகமாக இருக்கிறது. ஆனால் அந்த நெருக் கடிக்குத் தக்க அளவிற்கு வீடுகளுடைய எண்ணிக்கை அதிகரித் திருக்கிறதா என்று பார்த்தால் நிச்சயமாக இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். ஓரளவிற்கு வீடுகள் கட்டிக்கொண்டு வந்தாலும், தேவைக்கு ஏற்ற அளவிற்கு அங்கே வீடுகள் கட்டு வதற்கு வசதி இல்லை. அதோடுகூட புதிய வீடுகள் கட்டுவதற்கு திட்டம் அமைக்கிறபொழுது இடம் தேர்ந்தெடுக்கப்படும்பொழுது எந்த இடத்தையும் வாங்கி ஏற்றுக்கொள்ளலாம் என்ற நிலைமை மாறவேண்டும். நகர மத்தியிலே இருக்க வேண்டுமென்ற எண்ணத்திலே விவசாயப் பகுதிகள் போன்ற நல்ல இடங்களை பாழ்படுத்தக்கூடிய அளவிற்கு இந்தத் திட்டத்தைக் கொண்டு வருவது மிகவும் வரவேற்கத்தக்கது ஆகாது என்பதை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஓரளவிற்கு நகரத்திற்கு சற்று அப்பாலும் இருக்கவேண்டும். நல்ல மேடான பிரதேசமாக இருக்கக்கூடிய இடத்தை வாங்கவேண்டும். நகர மத்தியிலே இருக்கவேண்டுமென்ற காரணத்தினால் நல்ல நஞ்சை பகுதியை அழித்து மாற்றக்கூடிய அளவிற்கு நாம் இந்தத் திட்டத்தை அமைக்கக்கூடாது. ஆகவே, இந்த விஷயத்திலும்கூட சற்று கவனம் செலுத்துவது மிகவும் அவசியமாகிறது.

அதோடுகூட இந்த சட்டத்தை அமுலுக்குக்கொண்டு வரும் பொழுது எனக்கு முன்பு பேசிய கனம் அங்கத்தினர் சொன்னது போல விதிகளையும் உடனடியாகக் கொண்டுவரவேண்டியது மிகவும் அவசியம்.

கடைசியாக இந்த மசோதா குறுகிய காலத்தில் நிறைவேற்றப் பட்ட போதிலும், நல்ல திருத்தங்களை அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. இந்தத் திருத்தங்களை ஒரு குறிப்பிட்ட அங்கத்தினர் கொடுத்தார் என்ற முறையிலே அவர்களையும் இந்தச் சபையின் மூலம் பாராட்டி, என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

*** SRIMATHI RAJATHI KUNCHITHAPATHAM :** கனம் தலைவர் அவர்களே, இந்த மசோதாவை முழு மனதுடன் ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். வெகு நாட்களாக மக்கள் எதிர்ப்பார்த்திருந்த ஒரு மசோதா இது. அதிலும் சென்னை நகரத்தில் இருப்பவர்களுக்கு இம்மாதிரி சலுகைகள் நகர அபிவிருத்தி டிரஸ்டு மூலம் கிடைத்துக்கொண்டு வந்தது. அதே போன்று மற்ற மாவட்டங்களிலும் இருப்பவர்களுக்கு கிடைப்ப தற்கு ஒரு சந்தர்ப்பம் இல்லையே என்று ஏங்கிக்கொண்டிருந்தவர்

23rd February 1961] [Srimathi Rajathi Kunchithapatham]

களுக்கு வரவேற்கக்கூடிய ஒரு நல்ல அம்சத்துடன் கூடிய ஒரு மசோதா என்று கூற விரும்புகிறேன். முக்கியமாக, கனம் சீனுவாசய்யர் அவர்கள் சொன்னதுபோல், தாமதம் ஏற்படாமல் குறுகிய கால அளவிலே வீடுகள் கட்டுவதற்கு எத்தனை அளவு உதவி செய்ய முடியுமோ அத்தனையும் செய்வதற்கு இந்த போர்டு முதலில் ஏற்பாடுகள் செய்யவேண்டும். வீடுகள் கட்டுவதிலே, கூட்டுறவு முறையிலே வீடுகள் கட்டிவருகிறோம். மாவட்ட ரீதியாக இது தவிர ஹரிஜனங்களுக்கும் வீடுகள் கட்டிக் கொடுக்கிறோம். ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதிலே ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 31-ம் தேதிக்குள் அதற்காக ஒதுக்கப்பட்ட ரூபாயை செலவழித்தாகவேண்டும் என்பதால், அதற்குள் வீடுகளை எப்படியாவது கட்டி முடித்துவிட வேண்டும் என்று நெருக்கடியான நிலைமை இருக்கிறது. அதனால் அதிகாரிகளும், அதனால் பயன் அடையக்கூடியவர்களும் அந்த வருட முடிவிற்குள் எப்படியோ ஒரு விதத்தில் வீடுகளை கட்டி முடித்துவிட முடிகிறது. ஆகையால் தாலுகா வாரியாக ஒன்று, இரண்டு இடங்களில் ஹரிஜனங்களுக்கு வீடு கட்டுவதில், அதை எப்படியாவது கட்டி முடித்துவிடக்கூடிய நிலைமை இருக்கிறது. இதைப்போன்று மற்றவர்களுக்கும் சந்தர்ப்பம் இல்லையே என்ற ஏக்கம் இந்த மசோதாவின் மூலம் நிவர்த்திக்கப்படுகிறது என்பதைக் கூற விரும்புகிறேன். சென்னையிலே இருக்கிற இந்த நகர அபிவிருத்தி டிரஸ்டு இங்கே நல்ல வேலை செய்திருக்கிறது. வீடு கட்டவேண்டும் என்று மனதிலேகூட சிந்திக்க முடியாத நிலையில் இருந்தவர்கள் எத்தனையோ பேர்களுக்கு வீடுகள் கட்டிக் கொள்வதற்கு இம்மாதிரி உதவி கிடைக்கக்கூடிய சந்தர்ப்பம் சென்னை நகரில் கிடைத்திருக்கிறது. நகர அபிவிருத்தி டிரஸ்டு போர்டு ஏற்பட்ட பிறகு, அதிகாரத்தில் இருப்பவர்களாக இருந்தாலும் சரி, அதிகாரத்தில் இல்லாதவர்களாக இருந்தாலும் சரி, அவரவர்கள் வேலையைச் செய்வதற்கு காலையில் போய் மாலையில் திரும்பிவரும்பொழுது அவர்களுக்கு நேரமே இல்லை. வீடு கட்டுவதற்கு செங்கல், சுண்ணாம்பு, சிமெண்டு போன்ற பொருள்களை பார்க்கக்கூட நேரம் இல்லை. அவர்களுக்கு இம்மாதிரி வீடுகள் கட்டுவதற்கு உதவி கிடைத்திருப்பது ஒரு பெரிய வரப்பிரசாதம். இதே நிலை மாவட்டங்களில் ஜில்லா ரீதியாக ஏற்படும் ஒரு அம்சத்தை நாம் வரவேற்கிறோம். முக்கியமாக வீடு அற்றவர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கவேண்டுமென்பதை நான் 10 a.m.
வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். நெல்லையிலே கூட்டுறவு மூலமாக சில சொஸைட்டிகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். கூட்டுறவு இல்லாமலும் சில சங்கங்கள் ஏற்படுத்தி வருகிறார்கள். நெசவாளிகளுக்கென்று சங்கங்களை ஏற்படுத்தி நிலங்களை ஆர்ஜிதம் செய்யக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இவ்வளவு செய்தபோதிலும்கூட, அங்கே இருக்கும் தலைவர், காரியதரிசி போன்றவர்கள் அவரவர்களுக்கு வேண்டியவர்களுக்கு கொடுக்கக்கூடிய மனப்பான்மையை நிறுத்தவேண்டும். ஆகவேதான் வீடு அற்றவர்களுக்கு விடு கட்டிக்கொடுக்கவேண்டுமென்பதை நான் வற்புறுத்துகிறேன். இப்பொழுது ஒருவருக்கு விடு இல்லாமல் இருக்கலாம். இன்னும் ஒரு ஆண்டு காலம் கழித்தால் தாயார்

[Srimathi Rajathi Kunchithapatham] [23rd February 1961

மூலமாகவோ, தகப்பனர் மூலமாகவோ அல்லது வேறு விதத்திலோ வீடு கிடைப்பதற்கு அவருக்கு ஒரு வாய்ப்பு இருக்கலாம். சட்டத்தில் இருக்கிறபடி, தற்சமயம் வீடு இல்லாதவர்களுக்குக் கொடுக்கலாமென்று இருப்பதால், ஒருவரே மேலும் மேலும் பலனடையக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. ஒரு வீடு இருப்பவர்களுக்கே இரண்டு வீடு, மூன்று வீடு என்று சொத்துக்குமேல் சொத்து சேகரிக்க வாய்ப்பு அளிக்காமல், வீடு இல்லாதவர்களுக்கே கொடுக்கவேண்டுமென்று அடிப்படையிலே, இதை அதிகாரிகளாவது பார்த்துச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவதாக இதிலே ரொம்பவும் தாமதம் ஏற்படுகிறது என்று பல அங்கத்தினர்கள் சொன்னார்கள். நெல்லையிலே கூட்டுறவு மூலமாக நகர சுத்தித் தொழிலாளர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தை நிறுவுவதற்கு 1956-ம் வருஷத்திலிருந்தே ஏற்பாடு செய்து வருகிறேன். 1960-ம் வருஷம் போய்விட்டது. 1961-ம் வருஷமும் வந்துவிட்டது. இன்னும் அதை ஆரம்பிக்க முடியாத நிலையில்தான் இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். லோன் அப்ளிகேஷன் கொடுத்தால் அது டெபுடி. ரெஜிஸ்தாரிடமிருந்து சென்னைக்கு வருவதற்கு மூன்று மாத காலம் ஆகிறது என்ற பயங்கரமான செய்தியைத்தான் நாம் கேட்கிறோம். அதிலே இவ்வளவு தாமதம் இருக்கக்கூடாது. சென்னையிலே இருக்கிற மேலதிகாரிகள் ஒத்துழைப்புக் கொடுக்கத் தயாராயிருந்தாலும், மாவட்டத்திலே இருக்கிற அதிகாரிகளும் ஒத்துழைப்பைக் கொடுத்தால்தான் வீண் காலதாமதம் ஏற்படாது. தாமதத்தை தடுக்கவேண்டுமென்று வலியுறுத்து கிறேன். இந்த போர்டிலே முக்கியமான அதிகாரிகள் எல்லாம் இருக்கிறார்கள். லாண்ட் ரெவின்யூ சம்பந்தப்பட்டவரை, நிலம் ஆர்ஜிதம் செய்வதில் ஏற்படக்கூடிய தாமதத்தைத் தவிர்ப்பதற்கு அதிகாரிகளும், கூட்டுறவு ரெஜிஸ்டிரார், ஹரிஜன நல டைரக்டர் போன்ற அதிகாரிகளும் இருக்கிறார்கள். இதுபோன்ற பல அதிகாரிகளை ஒருமைப்பாடு செய்து, இந்த போர்டை அமைத்திருப்பது மிகவும் வரவேற்கத்தக்க அம்சம். நில ஆர்ஜிதம் செய்வதில் ஏற்படும் தாமதத்தைப்பற்றி கனம் அங்கத்தினர்கள் ஸ்ரீனிவாசய்யரும், லாசரும் சொன்னார்கள். ஆர்ஜிதம் செய்வதிலே அதிக தாமதம் ஏற்படுவதைத்தான் நாம் பார்க்கிறோம். சம்பந்தப் பட்ட பேப்பருக்குப் பின்னால் போய் வேலை செய்தாலும்கூட சென்னைக்கு வருவதற்கு ஒரு ஐந்தாண்டுத் திட்டம் முடிந்து இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் வருகிற நிலைமை ஏற்படுகிறது. இந்த தாமதத்தை எவ்வளவு தவிர்க்க முடியுமோ அதற்கான நடவடிக்கைகளை சர்க்கார் எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். "வீட்டைக் கட்டிப் பார், கல்யாணம் பண்ணிப்பார்" என்று சொல்லுவதிலிருந்து, அது எவ்வளவு கஷ்டமான விஷயம் என்று தெரிகிறது. இந்த நிலைமையை சர்க்கார் ஏற்றுக்கொள்வது என்றால், நாட்டிலுள்ள அத்தனை பேருக்கும், அதாவது வீடு இல்லாமல் இருப்பவர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கவேண்டுமென்கிற அமைச்சருடைய நல்லெண்ணம்

23rd February 1961] [Srimathi Rajathi Kunchithapatham]

புலனுகிறது. உண்ண உணவும், இருக்க இடமும் கொடுப்பது அத்தியாவசியத் தேவை என்ற அடிப்படையிலே இந்த போர்டு அமைக்கப்பட்டிருக்கிறது. நான்கு வருஷத்திற்கு முன்பு ஆரம்பிக்கப்பட்ட ஒரு திட்டமாயிருந்தால், இடத்திற்கு அவர்கள் வேல்யுவேஷன் போடும்பொழுது, ஆயிரம் ரூபாயாக இருந்தது, நாலாயிரம், ஐயாயிரம் என்று போகக்கூடிய நிலைமைக்கு வந்து விடுகிறது. இதைத் தவிர்ப்பதற்கு இந்த போர்டு வேலை செய்ய வேண்டும். ஒரு மாதத்திற்கு ஒரு முறை இந்த போர்டு கூடவேண்டும் என்று சொல்லியிருப்பது மிகவும் நல்லது. இரண்டு மாதத்திற்கு ஒரு முறை என்று இருப்பதை மாற்றி "ஒரு மாதம்" என்று போட்டால், இரண்டு மாதத்திற்கு ஒரு முறையாவது இந்த போர்டு கூடுமென்ற நிலைமை ஏற்படுமென்று நமக்குத் தெரியும். மாவட்டத்திலிருக்கிறவர்களுக்கும் பயன் தரத்தக்க முறையில் இந்த மசோதா அமைந்திருக்கிறது குறிப்பிடத்தக்கது. குறிப்பாக ரூபாய் 10 அல்லது 15 என்று வாடகை கொடுக்கும் குடும்பஸ்தர்களுக்கு இந்தத் திட்டம் பயன் படவேண்டும். பெரிய அளவிலே 5 லட்சம், 10 லட்சம் என்று கட்டக்கூடிய அளவிலே அதிகமாகப் பயன் ஏற்படாது. ஜில்லா வாரியாகப் பார்த்தால், இந்த "ஃப்ளாட்ஸ்" (flats) கட்டும் திட்டத்திற்கு மக்களிடம் அதிக ஆதரவு இருக்காது. சிறு சிறு வீடுகளாக 10 அல்லது 15 ரூபாய் வாடகை கொடுக்கக்கூடிய மக்களுக்கு ஏற்றாற்போல் கட்டிக்கொடுக்கவேண்டும். சிலர் 100 அல்லது 200 ரூபாய் வாடகை கொடுப்பதற்குத் தயாராயிருக் கிறார்கள். ஆனால் சிறிய வேலையிலிருப்பவர்கள், அதாவது டிரைவர்கள், கிளார்க்குகள் இவர்களுடைய நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது. ஒரு குடிசை கூட கட்டிக்கொள்ள முடியாத நிலைமையில்தான் இவர்களுடைய நிலைமை ஜில்லாவிலும் இருக்கிறது. சென்னை, திருச்சி, மதுரை போன்ற பெரிய நகரங்களில்தான் வீட்டுக் கஷ்டம் இருக்கிறது என்று சொல்ல முடியாது. திருநெல்வேலி போன்ற மாவட்டங்களிலும் வீட்டுக் கஷ்டம் இருக்கிறது. ஆகவே திருநெல்வேலியிலும், மற்ற ஜில்லாக் களிலும் உள்ள நிலைமையை ஆராய்ந்து பார்த்து சிறு சிறு வருவாய் உள்ளவர்களுக்கு, ரூ. 4,000 அல்லது ரூ. 5,000 என்று முதல் போடக்கூடிய அளவிலே வீடுகள் கட்டிக்கொடுக்கவேண்டும். இது ஒரு நல்ல மசோதா. ஆகவே இதை முழு மனதுடன் ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER: மூன்றாவது ரீடிங்கிலே என்ன சொல்லலாம், என்ன சொல்லக்கூடாது என்று சில அங்கத்தினர்களுக்குத் தெரியவில்லை போலிருக்கிறது. இப்பொழுது மூன்று அங்கத்தினர்கள் பேசினார்கள். ஒரு அங்கத்தினரைத் தவிர பாக்கிப்பேர் பேசினது "அவுட் ஆப் ஆர்டர்" என்றுதான் நினைக்கிறேன். முதல் ரீடிங்கிலே சொன்ன விஷயங்களை எல்லாம் மூன்றாவது ரீடிங்கில் திருப்பிச் சொல்வது தவறு என்பதை ரூலிங்கில் இருந்து எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

"The discussion on a motion that the Bill or the Bill as amended, as the case may be, be passed shall be confined to the submission of arguments either in support of the Bill or for the

rejection of the Bill. In making his speech a member shall not refer to the details of the Bill further than is necessary for the purpose of his arguments which shall be of a general character."

"The Chair has repeatedly drawn attention to the restricted scope of discussion at the third reading stage."

The Speaker of the Lok Sabha has ruled—

"It is of course competent to the House to reject a Bill even at the third reading and therefore to comment on the Bill as a whole. But it is entirely different from going into details and repeating a discussion which has already taken place."

The Speaker of Lok Sabha has also remarked as follows :—

"I am afraid it will be introducing a rather inconvenient precedent in this House if I were to allow a speech of that type at the third reading stage. The hon. Member may make his suggestions to the Hon. Minister and I am sure the Hon. Minister will give his due attention to whatever suggestions are made."

The Deputy Speaker of Lok Sabha has observed as follows :—

"We ought not to go into the clauses as they have been discussed in detail at an earlier stage".

The Deputy Speaker of Lok Sabha has again stated as follows :—

"It is not clause by clause discussion."

Finally the Speaker of the Lok Sabha has observed thus :

"In the third reading, no speeches are allowed ordinarily. Of course, except in extraordinary cases, and the case that members do not come in time cannot be treated as an extraordinary case. The position is that at the third reading the discussion is restricted only to such amendments or changes that have been made during the clause by clause reading stage."

ஆகவே முதல் ரீடிங்கிலே சொன்ன விஷயங்களை இப்பொழுதும் சொல்லுவது பொருத்தமாக இருக்காது. இங்கே செய்யப்பட்ட மாறுதல்களைப் பற்றிச் சொல்லுவதுதான் பொருத்தமாக இருக்கும். இதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு, யாராவது அங்கத்தினர்கள் பேச முன் வந்தால் அவர்களை அனுமதிக்க எனக்கு ஆட்சேபணையில்லை.

(No hon. Member came forward to speak.)

MR. SPEAKER : I am afraid my ruling has restricted speech by hon. Members.

23rd February 1961]

SRI M. KALYANASUNDARAM : Are there no hon. Members to speak?

MR. SPEAKER : I do not know. I am not going to canvass for speakers. If there are no other hon. Members to speak, the hon. Member Sri M. Kalyanasundaram may now speak.

SRI M. KALYANASUNDARAM: கனம் சபாநயகர் அவர்களே, இந்த மசோதா சட்டமாக ஆகவிருக்கிறது. எதிர்க்கட்சியினர் கொடுத்த திருத்தங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. முக்கியமாக, உத்தியோகப் பற்றற்றவர்களின் எண்ணிக்கை அதிக மாக்கப்படவேண்டுமென்பது குறிப்பிடத்தக்கது. இந்த போர்டில் ஏற்கனவே இருந்த அளவுக்குக்கூட உத்தியோகப் பற்றற்றவர்கள் இடம் பெற முடியாமல் இருப்பது வருந்தத்தக்கது. இருப்பினும் மசோதாவின் கொள்கையை வரவேற்கிறேன். இந்த மசோதாவில் கண்டு இருக்கிறபடி ஒரு ஹௌஸிங் போர்டு இருக்கவேண்டு மென்பது அவசியம். வீடு கட்டும் திட்டங்களை எல்லாம் ஒரு முகப்படுத்தி இன்னும் அதிகமாக வீடுகள் கட்டுவதற்கு இந்த மாதிரி ஒரு போர்டை அமைத்திருப்பது உதவிகரமாக இருக்கு மென்று நான் நினைக்கிறேன். இந்த போர்டை நியமித்துவிட்டால் மட்டும் போதுமான அளவுக்கு வீடுகள் வந்துவிடுமென்று சொல்லி விட முடியாது. வீடு கட்ட வேண்டிய நிலம், அதற்கு வேண்டிய பொருள்கள், இவைகள் எல்லாம் தனிப்பட்டவர்கள் கையிலிருக் கிறபொழுது, அதிகமாகப் பணம் கொடுத்தால்தான் மனை கிடைக்கும் என்று இருக்கிற நிலையிலே, வீடுகள் கட்டுவதற்குப் போதுமான மனைகள் கிடைப்பது அவ்வளவு சுலபமல்ல. இதில் ஓரளவுக்குக் கட்டாயம் இருக்கவேண்டியது அவசியம். அந்த அளவுக்கு, அரசாங்கம் ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவுக்கு, நிலத்தை ஆர்ஜிதம் செய்யக்கூடிய சட்டம் திருத்தப்படுமென்று சொன்னதை வரவேற்கிறேன். இன்றைக்கு அந்த மசோதா இங்கே பிரேரேபிக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதைக் கூடிய சீக்கிரம் நிறைவேற்றி அமுலுக்குக் கொண்டு வரவேண்டும் என்றும், அதிலும் வெகு துரிதமாகக் கொண்டு வந்து திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இப் பொழுது கொண்டு வரப்படுகின்ற அபிவிருத்தி திட்டங்கள் எல்லாம் சென்னையிலும் அதன் சுற்றுப்புரத்திலும்தான் கொண்டு வரப்படுகின்றன. சென்னை நகரத்திற்கு அதிகப்படியான அபிவிருத்தித் திட்டங்கள் தேவையாக இருக்கலாம். அத்துடன் இன்னும் முக்கியமான நகரங்களாக இருக்கக்கூடிய திருச்சி, சேலம், கோயம்புத்தூர், மதுரை போன்ற நகரங்களுக்கும் பல அபிவிருத்தி திட்டங்களைக் கொண்டுவந்து நிறைவேற்ற வேண்டியது அவசியமாக இருக்கிறது. மற்ற முக்கிய நகரங் களிலும் சேரிகள் அதிகப்படியாக இருக்கின்றன. சுகாதாரத்திற்கு இடையூறு விளைவிக்கக்கூடிய சேரிகள் அநேகம் அநேக நகரங் களில் இருக்கின்றன. அங்கெல்லாம் பல அபிவிருத்தி

[Sri M. Kalyanasundaram] [23rd February 1961

திட்டங்களைக் கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டியது அவசியமாக இருக்கின்றன. ஆகவே அவைகளையும் இத்துடன் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஆரம்பத்தில் இந்த மசோதாவைக் கொண்டுவந்தபோது அரசாங்கத்திற்கு சில எண்ணம் இருந்ததோ என்னமோ தெரியவில்லை. இதைப்பற்றி பொறுக்குக் கமிட்டியில் பரிசிலனை செய்து பார்த்தபிறகுதான் இப்படிப்பட்ட ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்த திருத்தங்களும் விவாதிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. முக்கியமான நகரங்களிலும் இம்மாதிரி திட்டங்களைக் கொண்டுவருவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவேண்டும். அதற்கு அரசாங்கம் மீண்டும் முயற்சி எடுத்துக்கொண்டு அந்த அளவுக்கு வேண்டிய நிலத்தை வாங்கி—நிலத்தை வாங்க முடியுமோ அல்லது முடியாதோ அதைப்பற்றி தெரியவில்லை—நிலத்தை வாங்கி, அந்த முறையில் திட்டத்தை தயாரித்து அதன்படி செய்வதுதான் சாத்தியமாக இருக்கும். தனிப்பட்ட கூட்டுறவு ஸ்தாபனங்கள் நிலத்தை வாங்க வேண்டுமென்றாலும்கூட அதிலும் கஷ்டம் இருக்கிறது. அதனால் அரசாங்கமே ஒட்டு மொத்தமாக நிலத்தை வாங்கி வீடுகள் கட்டக்கூடிய கூட்டுறவு சொசைட்டிகளுக்கும் மற்ற இண்டஸ்ட்ரியல் சொசைட்டிகளுக்கும் மற்ற ஹௌசிங் சொசைட்டிகளுக்கும் நிலத்தைக் கொடுக்கும்படியாகக் கேட்டுக் கொள்ளுகிறேன். ஆகவே இதற்கு அரசாங்கம் நேரடியாகவே திட்டங்களை அமைத்து நகரங்களுக்கு ஆவன செய்ய வேண்டும் என்று வலியுறுத்த விரும்புகிறேன்.

அதோடுகூட, கமிட்டிகளை நியமிக்கும்போது தாராளமாக உத்யோக பற்றற்றவர்களையும், தொழிற்சங்க அங்கத்தினர்களை முனிசிபல் நிர்வாகத்தில் அனுபவம் உள்ளவர்களையும் போட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அவர்களுக்கு எல்லாம் இந்தக் கமிட்டியில் இடம் அளித்து அவர்களையும் நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதற்கு வேண்டிய ரெகுலேஷன்களை இந்த போர்டுக்கு அரசாங்கம் அமைக்க வேண்டும். இந்த போர்டுக்கு இப்பொழுது எவ்வளவோ பெரிய அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை அவர்கள் உபயோகிக்கும்போது சரியான முறையில் உபயோகிக்கும் அளவில் அரசாங்கம் விதிகளை அமைக்க வேண்டும். அப்படி அரசாங்கம் போடக்கூடிய விதிகளை அனுசரிக்கக்கூடிய அளவில் அந்த போர்டு இயங்க வேண்டும். அதற்கு வேண்டிய விதிகளைப் பிரப்பிக்கவேண்டும் என்பதையும் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதோடுகூட இந்த ஹௌசிங் போர்டின் நடவடிக்கைகள் என்ன என்பதைப்பற்றி முடிவு செய்யக்கூடிய முறையில், அந்த போர்டு ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை அதன் நடவடிக்கைகளைப்பற்றி ஒரு அறிக்கையை சமர்ப்பிக்கவேண்டும் என்ற முறையில் விதிகளைச் செய்யவேண்டும். அவர்கள் அந்த ஆறு மாதங்களில் என்னென்ன வேலைகளைச் செய்திருக்கிறார்கள் எந்த

23rd February 1961] [Sri M. Kalyanasundaram]

முறையில் அது இயங்கி வருகிறது முதலியவைகளைப்பற்றி யெல்லாம் பரிசீலனை செய்யக்கூடிய அளவில் அவர்கள் ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை அறிக்கையை சமர்ப்பிக்க ஏற்பாடு செய்யவேண்டும். இந்த முறையில் என்னுடைய கருத்துக்களைச் சொல்லிக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளு கிறேன்.

MR. SPEAKER : கனம் அங்கத்தினர்கள் யாரும் பேச வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. எந்த முறையில் மூன்றுவது வாசிப்பில் பேசவேண்டும் என்பதைப்பற்றிதான் நான் குறிப்பிட்டேன். ஆகவே ஒருவரையும் பேசக்கூடாது என்று சொல்லவில்லை.

* **SRIMATHI A. S. PONNAMMAL** : கனம் சபாநாயகர் அவர்களே, இப்பொழுது கொண்டுவந்திருக்கிற ஹௌசிங் போர்டு மசோதாவை நான் முழு மனதுடன் ஆதரித்து சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன். இந்த ஹௌசிங் போர்டுக்கு சில மெம்பர்களை எடுக்கப் போகிறார்கள். அப்படி எடுக்கும்போது நல்ல தகுதி வாய்ந்த ஹரிஜன மெம்பர் ஒருவரையும் அதில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளு கிறேன். இன்றைக்கு ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டும் என்ற முறையில் நம் அரசாங்கம் பல லட்சக் கணக்கான ரூபாய்களை செலவு செய்து வருகிறார்கள். இருந்தாலும்கூட இப்பொழுது இருக்கக்கூடிய நிலைமையில் அதிகப்படியான மக்கள், அதிலும் ஹரிஜன மக்கள் வீடுகள் இல்லாமல் நகரப் பகுதிகளிலும், கிராமப் பகுதிகளிலும் இருக்கின்றார்கள். அப்பேர்ப்பட்ட நிலைமையில் இருக்கக்கூடியவர்களுக்கு வெகு விரைவில் மூன்றுவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள் அவர்கள் எல்லோருக்கும் வீடுகள் கட்டிக் கொடுத்து விடவேண்டுமென்ற நிலையில் வெகு துரிதமாக நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதன் பிறகு ஹரிஜனங்களுக்கு வீடுகள் இல்லை என்ற பேச்சிற்கு இடம் இல்லாமல் இருக்கக்கூடிய நிலைமையை உண்டாக்க வேண்டும். அந்த அளவில் இந்த ஹௌசிங் போர்டு இயங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக இப்பொழுது கூட்டுறவு முறையில் வீடுகளைக் கட்டிக்கொண்டு வருகிறார்கள். அப்படிக் கட்டும்போது ஐந்தில் ஒரு பங்கை மக்கள் கொடுக்க வேண்டும் என்று இருக்கின்றது. அதனால் எல்லோராலும் கொடுக்க முடியவில்லை, பணக்காரர்கள் தான் கொடுக்கிறார்கள். அந்த அளவில் எல்லோருக்கும் வீடுகள் இல்லாமல் போய் விடுகிறது. அப்படிப் போவதற்கு இடம் இல்லாமல் கண்டிப்பாக சாதாரண நடுத்தர விவசாயி களுக்கும் வீடு கட்டிக்கொள்வதற்குண்டான வசதியைச் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். பணம் போட்டு வீடுகள் கட்டிக்கொள்ளக்கூடிய நிலையில் இல்லாத

[Srimathi A. S. Ponnammal] [23rd February 1961

நடுத்தர விவசாயிகளுக்கும் வீடுகள் கட்டிக்கொடுக்கக்கூடிய அளவில் இந்த போர்டு வேலை செய்யவேண்டும். அப்படிப் பட்ட நடுத்தர விவசாயிகளுக்கு இந்த போர்டு பணத்தை கடனாகக் கொடுத்து அதை வருஷம் 200 அல்லது 300 ரூபாயாகத் திருப்பிக் கொடுக்கக்கூடிய அளவில் இந்த போர்டு அவர்களுக்கு உதவி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதற்கு வேண்டிய ஸ்கீமையும் தயாரிக்கவேண்டும். வீடுகள் கட்டுவதற்கு என்று நிலங்களை வாங்கும்போது வில்லங்க சர்ட்டிபிகேட்டுகள் வாங்குவதற்கு கால தாமதம் ஆகிறது என்று ஸ்ரீமதி ராஜாத்தி குஞ்சிதபாதம் பேசும்போது குறிப்பிட்டார். டிஸ்டிரிக்ட் ரிஜிஸ்தரார் ஆபீசிலிருந்து வருவதற்கு காலதாமதம் ஆகிறது என்றும் இந்த நிலையில் சர்ட்டிபிகேட் வாங்குவதற்கு மூன்று அல்லது நான்கு வருஷங்கள் ஆகிறது என்றும் குறிப்பிட்டார். அப்படி காலதாமதம் ஆகாமல் இருப்பதற்கு வேண்டிய நடவடிக்கையையும் எடுத்துக்கொள்ளவேண்டும். அதை மாற்றுவதற்கு வேண்டிய ரூல்ஸ் அண்ட் ரெகுலேஷன்களை மாற்றி அமைக்க வேண்டு மென்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். வேண்டிய முறைகளில் நடவடிக்கை எடுத்துக்கொண்டு நடுத்தர விவசாயிகளுக்கும், ஹரிஜனங்களுக்கும், லோ இன்கம் க்ரூப்-களுக்கும், தொழிலாளர் களுக்கும் மற்றுமுள்ளவர்களுக்கும் வீடு கட்டும் திட்டத்தை இந்த ஹௌசிங் போர்டு வகுத்து வேண்டிய நடவடிக்கைகளை நல்ல முறையில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன். மற்றும் கூலி விவசாயிகளுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கவேண்டும். அப்படிச் செய்தால்தான் இந்த போர்டு நல்ல வசதி செய்ததாக ஆகும். கிராமங்களில் ஆயிரம், இரண்டாயிரம் ரூபாய்க்கு இப்பொழுது வீடுகள் கட்டமுடியாது. குறைந்த பட்சம் ஐயாயிரம் ரூபாயாவது வேண்டியதாக இருக்கிறது. அந்த முறையில் கிராமங்களிலுள்ளவர்களுக்கு ஐயாயிரம் ரூபாய் கடனாகவாவது கொடுத்து அவர்களை வீடுகள் கட்டிக் கொடுக்கச் சொல்லிவிட்டு அந்தக் கடனை சுமார் இருபது வருஷ தவணையில் திருப்பிக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன். அந்த முறையில் வருஷத்திற்கு 200 அல்லது 300 ரூபாயை திருப்பிக் கொடுக்கும் அளவில் அவர்களுக்குக் கடன் கொடுத்து உதவ வேண்டும் என்று கூறிக்கொண்டு மறு முறை இந்த மசோதாவை ஆதரித்து இதை தாலூகாக்களுக்கு விஸ்தரித்திருப்பதை வரவேற்று இதை வெகு சீக்கிரத்தில் அமுலுக்குக் கொண்டுவரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

* THE HON. SRI R. VENKATARAMAN : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவை எல்லா அங்கத்தினர்களும் கட்சி பாகுபாடு இன்றி வரவேற்பதைக் கண்டு நான் அவர்களுக்கு நன்றி செலுத்துகிறேன். வீட்டுப் பிரச்னை கட்சிப் பிரச்னை அல்ல. அது எல்லோருக்கும் உள்ள பிரச்னைதான். எல்லோரும் வசதியாக வீடுகளைக் கட்டிக்கொண்டு வசிப்பதற்கு எந்த விதத்திலும்

23rd February 1961] [Sri R. Venkataraman]

கட்சிகளுக்குள் வேற்றுமை இருக்க முடியாது. அந்த முறையில் எல்லா அங்கத்தினர்களும் இதற்கு ஆதரவு கொடுத்ததற்கு மீண்டும் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

வீடுகள் கட்டும் திட்டங்கள் பல இருக்கின்றன. ஆனால் இப்பொழுது கொண்டுவந்திருக்கிற மசோதா இருக்கக்கூடிய எல்லா திட்டங்களையும் இணைக்கக்கூடிய ஒரு மசோதா. நகரத்திற்கு பல திட்டங்கள் இருக்கின்றன. அவைகளை எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து அவைகளை இந்தச் சட்டத்திற்கு உட்படுத்த வேண்டும் என்று சொன்னால் அது சட்டத்திற்கு புறம்பானது என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன். அவைகளை இதன் மூலமாகக் கட்டுப்படுத்த முடியாது. கூட்டுறவு முறை மூலம் வீடுகள் கட்டுவதாக இருந்து அவற்றில் ஏதாவது குறைகள் இருந்தால் அவற்றை இந்த போர்டு நிவர்த்தி செய்யும். அந்தக் குறைகளை கூட்டுறவு இலாகா மானிய கோரிக்கைமீது விவாதம் நடக்கும் போது எடுத்துச் சொன்னால் அதைப்பற்றி கவனிக்கப்படும். அதைப் போலவே ஹரிஜன இலாகா மூலமாக வீடுகள் கட்டிக் கொடுக்கிறார்கள். அவற்றில் ஏதாவது குறைபாடுகள் இருந்தால் ஹரிஜன இலாகா மானிய கோரிக்கைமீது விவாதம் நடக்கும் போது குறிப்பிட்டால் அதைப்பற்றி கவனிக்கப்படும். அப்படி மற்ற துறைகள் மூலமாக ஏதாவது குறைகள் இருந்தால் அவற்றை அந்தந்த இலாகா மானிய கோரிக்கையின்மீது விவாதம் நடக்கும் போது எடுத்துச் சொன்னால் அதை நிவர்த்திக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.

வீடுகள் கட்டுவதற்கு என்று இப்பொழுது பல திட்டங்கள் இருக்கின்றன. அவற்றில் ஏதாவது குறைகள் இருந்தால் அதை நிவர்த்திக்க இந்த போர்டு ஏற்படுத்தப்படுகிறது. அப்படிப்பட்ட திட்டங்களையெல்லாம் இணைக்கக்கூடிய போர்டுதான் இது. இந்த போர்டு என்ன முடிவு செய்கிறதோ அதன்படி எல்லா திட்டங்களும் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். அவைகளுக்கு ஆதரவாகத்தான் இது இருக்கும். மற்ற திட்டங்கள் வீடுகள் கட்டுவதற்கு இந்த போர்டு உதவியாக இருக்கும். ஆரம்பத்தில் சென்னை நகரத்தில் நான்கு இடங்களில் நிலத்தை வாங்கி அங்கு வீடுகளைக் கட்டி விஸ்தரிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அவைகளாவது வியாசர்பாடி ஸ்கீம், கோடம்பாக்கம் ஸ்கீம், ஊரூர் கிராம ஸ்கீம், சென்னை மேற்கு பகுதி ஸ்கீம் அதாவது வெஸ்ட் மெட்ராஸ் ஸ்கீம், ஆக நான்கு ஸ்கீம்களை தயாரித்திருக்கிறோம். இப்படிப்பட்ட இடங்களில் இந்த திட்டத்தை அமுல் நடத்த சர்க்காருடைய நோக்கம். இங்கு 401—500 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டிருக்கிறது. அங்கு எல்லா பகுதிகளிலும் வீடுகளைக் கட்டிக் கொடுத்து வேண்டிய வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டுமென்பது தான் நோக்கம். இப்பொழுது இருக்கக்கூடிய ஹரிஜன ஹௌசிங் ஸ்கீம், இண்டஸ்ட்ரியல் ஹௌசிங் ஸ்கீம், லோ இன்கம் க்ரூப் எல்லாவற்றையும் சேர்த்து ஒரு காம்போஸிட்

ஸ்கிமாகப் போட்டுச் செய்யவேண்டும் என்பதுதான் முக்கியமான நோக்கம். தனித்தனியாக அமுல் நடத்துவதாக இருந்தால் அது முடியவில்லை. பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. செலவும் அதிகமாக ஆகிறது. ஆகவேதான் இப்படிப்பட்ட திட்டம் வகுக்கப்படுகிறது.

குறிப்பிட்ட ஒரு இடத்தில் இப்பொழுது 400 எக்கர் நிலம் வாங்கினால், அதற்குத் தண்ணீர் வசதி, சாக்கடை வசதி முதலியவைகளெல்லாம் ஏற்படுத்துவதற்குத் திட்டம் போடவேண்டும். அத்துடன் ஒவ்வொரு இலாகாவுக்கும் தேவயான இடம் ஒதுக்க வேண்டும். அதாவது, இன்டஸ்ட்ரியல் ஹௌஸிங்குக்கு இத்தனை ஏக்கர் ஹரிஜனங்களுக்கான ஹௌஸிங் ஸ்கிமுக்கு இத்தனை எக்கர், ஸ்லம் க்ளியர்ன்சுக்கு இத்தனை ஏக்கர், லோ இன்கம் க்ரூப் ஹௌஸிங் ஸ்கிமுக்கு இத்தனை எக்கர் என்று ஒதுக்கினால் திட்டம் நன்றாக நடக்கும். அத்துடன் கொஞ்சம் மலிவாகக் கூட வீடு கட்டும் நிலைமை ஏற்படும். இதை ஒழுங்குபடுத்துவதற்குத்தான் சட்டம் கொண்டுவருகிறோம்.

பல காரியங்கள் செய்யவேண்டும் என்பதையெல்லாம் கனம் அங்கத்தினர்கள் சொன்னார்கள். நமக்குத் தேவைக்கான எல்லாக் காரியங்களையும் எல்லா இடங்களிலும் செய்துவிடவும் இல்லை. செய்து விட்டதாகச் சொல்லவும் இல்லை. நமக்கு வேண்டுமென்ற தேவை அளவுக்குத் துணி உற்பத்தி செய்யவில்லை, உணவு உற்பத்தி செய்யவில்லை, தேவை அளவுக்குப் புளி, மிளகாய் உற்பத்தி செய்யவில்லை. தேவை அளவுக்கு வீடுகளும் கட்டப்படவில்லை. அதை யாரும் செய்துவிட்டதாகச் சொல்ல முடியாது. தேவை அளவுக்கு வீடுகள் கட்டவேண்டும் என்பதற்காகத்தான் முயற்சி எடுத்துக் கொள்ளப்படுகிறது. இந்த முயற்சிக்கு எல்லோரும் பேராதரவு கொடுக்கவேண்டுமென்றும் இந்த மசோதாவை அங்கீகரிக்கும் படியும் கேட்டுக்கொள்கின்றேன்.

MR. SPEAKER : The question is—

'That the Madras State Housing Board Bill, 1961 (L.A. Bill No. 31 of 1960) as amended be passed.'

The motion was put and carried and the Bill as amended was passed.

IV.—SITTINGS OF THE HOUSE.

SRI M. KALYANASUNDARAM : சபை கூடும் தினங்களைப் பற்றி அனுப்பியிருக்கும் சுற்றறிக்கையில் பிப்ரவரி 27-ம் தேதியன்று சபை கூடும் என்று கண்டிருக்கிறது. 25-ந் தேதியன்று நிதி அமைச்சர் அவர்கள் பட்ஜெட்டைச் சமர்ப்பிப்பார். 26-ந் தேதி ஞாயிற்றுகிழமையாதலால் அன்று விடுமுறை ஆகிவிடுகிறது. 27-ந் தேதி ஒரு நாள் சபை கூடின பிறகு பிப்ரவரி 28-ம் தேதியும் மார்ச் 1-ந் தேதியும் ஸென்ஸஸ் எடுப்பு காரணமாக விடுமுறை நாட்களாகின்றன. 27-ந் தேதியன்றும் சபையை ஒத்திப்போடுவது

23rd February 1961] [Sri M. Kalyanasundaram]

நலமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். காரணம், மத்திய சர்க்கார் பட்ஜெட் 28-ந் தேதி சமர்ப்பிக்கப்படும். அதையும் படித்து விட்டு, நம் ராஜ்ய சர்க்காருடைய பட்ஜெட்டையும் படித்துவிட்டு, விவாதத்தில் கலந்துகொள்வதற்கு வசதியாக இருக்கும்பொருட்டு, பொது விவாதத்தை மார்ச் 2-ந் தேதியிலிருந்து தொடர்ந்து ஐந்து நாட்கள் வைத்துக்கொள்ளலாம். அதற்குப் பிறகு தொடர்ந்து மான்யங்களை தனித் தனியாக எடுத்துக்கொள்ளலாம். இந்த யோசனையை ஆலோசிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER : அரசாங்க சார்பில் என்ன அபிப்பிராயம் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

* THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, the Government have no objection to the proposal.

MR. SPEAKER : The suggestion put forward by the hon. Member, Sri M. Kalyanasundaram is this. On the 25th February the Hon. Finance Minister will be presenting the Budget. 26th February is a holiday being Sunday. 28th February and 1st March are Census holidays. Originally we decided to sit on the 27th February 1961 also. The hon. Member Sri M. Kalyanasundaram suggests that the Assembly need not meet on that date. If that is the desire of the House, I have no objection and the hon. Member may move a motion.

SRI M. KALYANASUNDARAM : Sir, I move—

'That the House need not sit on Monday, the 27th February 1961.'

The motion was duly seconded.

The motion was put and carried.

MR. SPEAKER : The Assembly will adjourn on the 25th February 1961 and will meet again at 10 a.m. on Thursday, the 2nd March 1961.

III.—GOVERNMENT BILLS—*cont.*

(4) THE MADRAS ESTATES ABOLITION AND CONVERSION INTO RYOTWARI AMENDMENT BILL, 1961 (L.A. BILL NO. 5 OF 1961).

* THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I move—

'That the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1961 (L.A. Bill No. 5 of 1961), be taken into consideration.'

Under section 39 (1) of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948, the Director of Settlements determines the basic annual sum and the total compensation payable in respect of an estate taken over under the Act. He issues a notice under section 39 (2) and furnishes each landholder who has applied for it with a copy of the data on the basis of which the basic annual sum is proposed to be determined, hears the representations

of the landholders or other persons interested and then determines the basic annual sum and the amount of compensation payable. A copy of his order is communicated to every landholder concerned and to every applicant. Section 39 (5) of the Act provides for appeal to the Board on an order issued under section 39 (1) by the Director of Settlements; Section 39 (6), for revision by the Board of Revenue either *suo motu* or on an application by any persons and Section 39 (6-A) for review by the Board of Revenue of any order passed by it under sub-section (5) of sub-section (6), if it is of the opinion that its order is vitiated by an error in the decision on a point of law or by a mistake. The following practical difficulties are encountered in the determination of compensation for estates taken over.

On the introduction of settlement in each estate it is necessary to deposit the final compensation within nine months from the date of handing over of fair accounts. A final compensation has also to be deposited as far as possible before the end of the fasli year to save unnecessary expenditure which will be entailed otherwise on account of interim payment for one additional fasli. With this end in view, the final compensation proposals are at present worked out first on a provisional basis only for three reasons.

Firstly, it has been found generally that finality could not be reached in the Statutory proceedings instituted under the several provisions of the Abolition Act such as sections 11, 12 to 15, 17, 18 (4), 19 19-A and 63 by the time settlement work is completed and fair accounts are written up for any area. They are pending either in revison with the Director of Settlements or with the Board. Appeals and revisions are also pending with the Estates Abolition Tribunals, or in Civil Courts or in the High Court in writs taken up by interested parties. In such cases, fair accounts will necessarily have to be written up treating these cases, as 'held over' and unless a stay by a competent Court of law is in force, the available orders of the highest authority under the Act are being given effect to in the fair accounts with a note that the cases have been taken on appeal, revision or writ petition. When the statutory decisions in appeal, revision or writ petition become available after introduction of settlement, the fair accounts are corrected and final compensation proposals also are revised giving effect to the changes resulting from such decisions.

Secondly, when simultaneous pressure for Fair Area Lists, for duplicate Field Measurement books or for village maps is received from several branch Settlement Offices, the survey parties cannot cope with it. Inevitably for want of Fair Area Lists, Tentative Area Lists are being adopted in writing up the fair accounts and in proposing final compensation. After Fair Area Lists are received from the survey party, the final compensation proposal already submitted is revised.

23rd February 1961] [Sri M. A. Manickavelu]

Thirdly, in actual practice, it is found that the settled accounts from which miscellaneous revenue particulars have to be gathered for working out the compensation, are some times not forthcoming from the Village Officers or the Estate Managers. Subsequently, when due to further search, these accounts are got at, better data become available for determination of the basic annual sum and this again necessitates revision of the final compensation proposal.

The present provisions are so rigid that even clerical or arithmatical errors unwittingly committed by the Director of Settlements in determining the basic annual sum and the total compensation cannot be rectified by the Director of Settlements himself. In all such cases, revised proposals will have to be submitted to the Board under section 39 (6) and the Board will have to invite objections of the landholders and then pass order. With the progressive increase in the number of estates settled in each fasli, due to the above unavoidable practical difficulties, cases will come up for revision or review by the Board of Revenue (Settlement of Estates) in increasingly large number and the volume of work in the Board's office will be unmanageable. The review of final compensation arising out of the circumstances mentioned above can legitimately and easily be undertaken by the Director of Settlement himself. It is therefore proposed to amend section 39 of the Abolition Act so as to empower the Director of Settlements to review his own orders determining the basic annual sum and total compensation under section 39 (1) of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948, if they are vitiated by any clerical or arithmetical mistake or error apparent on the face of the record, or, if, subsequent to the passing of the order, data for the better calculation of the basic annual sum have become available, or, if the order required to be modified in pursuance of the final order of any competent authority or court.

In all these cases only the effect of the orders is being carried out in accounts and the revision of final compensation automatically flows from it and there is no need for the Board to be moved in such cases. The amendment proposed will simplify the procedure and at the same time reduce the workload of the Board. The review order of the Director of Settlements will be subject to appeal to and revision by the Board of Revenue in the same way as his order under section 39 (1).

Provision is made in the Bill that the Director of Settlements should give a reasonable opportunity to every landholder and every applicant concerned of being heard before he modifies his earlier order. It is also provided for in the Bill that the Director of Settlements should communicate to them also a copy of his modified order.

Clause 2 (*a*) of the Bill contains necessary provisions in this regard. The amendments in clause 2 (*b*) and 2 (*c*) are consequential to the amendments provided for in clause 2 (*a*).

In 1953, the Board of Revenue brought to the notice of the Government that the villages Aradaiental and Pooranathanendal were included under the heading "Ramanathapuram" instead of under "Sivaganga" in the Schedule to Madras Act XVII of 1951. Opportunity is being availed of to amend the Schedule to Madras Act XVII of 1951 by clause 3 of the Bill.

The Bill does not involve expenditure from the Consolidated Fund of the State and therefore no Financial Memorandum is necessary under Rule 89 of the Madras Assembly Rules. No Memorandum regarding delegated legislation is necessary under Rule 90 of the said Rules as the Bill does not involve delegation of the legislative powers.

I request the House Sir, that the Bill be taken into considera-
10-30 a.m. tion.

MR. SPEAKER: There has been some mistake. The Hon. Minister has now moved the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Amentment Bill, 1961, instead of the Madras Estates Land (Reduction of Rent) Amendment Bill as per the order in the agenda. The Minister may move a motion accordingly for change in the order of business.

V.—GOVERNMENT MOTION *RE* CHANGE IN THE ORDER OF BUSINESS.

THE HON. SRI M. A. MANICKAVELU: Sir, I move—

"That the item in the agenda relating to the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1961 (L.A. Bill No. 5 of 1961) be taken up first."

The motion was put and carried.

III.—GOVERNMENT BILLS—*cont.*

(4) THE MADRAS ESTATES (ABOLITION AND CONVERSION INTO RYOTWARI) AMENDMENT BILL, 1961 (L.A. BILL NO. 5 OF 1961)—*cont.*

SRI S. M. ANNAMALAI: Sir, I move—

"That the concurrence of the Legislative Council be obtained for setting up a Joint Select Committee of both the Houses consisting of . . . Members (. . . Members of the Legislative Assembly and . . . Members of the Legislative Council) to consider the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1961 (L.A. Bill No. 5 of 1961) and that the following Members of the Legislative Assembly be selected to serve on such a Joint Select Committee (List of names to be furnished later)."

SRI N. K. PALANISAMI: I second the amendment, Sir.

MR. SPEAKER: The motion and the amendment are before the House for discussion.

23rd February 1961]

SRI S. LAZAR: கனம் சபாநாயகர் அவர்களே, வெகு நாட்களாக எதிர்பார்த்துக்கொண்டிருந்த இந்த மசோதா இன்றைய தினமாவது வந்ததே என்று நாங்கள் எல்லோரும் முழு மனதுடன் வரவேற்கிறோம். இதில் ஒருவித கஷ்டம் இருக்கிற தென்பதைப் பற்றி சட்டசபையில் கூட கனம் அங்கத்தினர் ஸ்ரீனிவாச ஐயர் அடிக்கடி சொல்லிக்கொண்டு வந்தார்கள். நடைமுறையில் கேஸ்களை நடத்திக்கொண்டுவரும் வழக்கறிஞர்களுக்கு இவை நன்ருகத் தெரியும். இது மிகவும் தொல்லையாக இருக்கிறது என்ற நியாயம் பட்டபோதிலும் கூட அதிகாரிகளுக்கு எந்தவிதமான காரியமும் செய்ய முடியாத நிலைமை இருந்து வந்தது. அப்பேர்ப்பட்ட சங்கடமான நிலைமையைப் போக்க இந்த மசோதா கொண்டு வந்திருப்பதை முழு மனதுடன் வரவேற்கிறோம். ஆனல் இந்தத் திருத்த மசோதா கொண்டுவந்துவிட்ட காரணத்தினல் ஏற்கனவே இந்தச் சட்டத்தில் இருக்கக்கூடிய குறைகள் எல்லாம் நிவர்த்தியாகிவிடுகின்றன என்று தயவு செய்து அமைச்சர் அவர்கள் எண்ணிவிடக்கூடாது. இன்னும் எத்தனையோ குறைகள் இருக்கின்றன. குறைகளைப் பற்றி அடிக்கடி பலர் எடுத்துச் சொல்லி வந்தார்கள். முக்கியக் குறை இதில் காலதாமதம்தான். இந்தச் சட்டம் 1948-லேயே கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆனல் இருக்கக்கூடிய எஸ்டேட்டுகளை ஒழிப்பதற்கு நடைமுறையில் எவ்வளவு நாட்களாகின்றன என்பது கனம் அமைச்சர் அவர்களுக்கு நன்ருகத் தெரியும். அதோடுகூட அவைகளை எடுத்துவிடுவது பெரிய காரியம் இல்லை. எடுத்துவிட்ட பிறகு ரயத்வாரியாக மாற்றுவதில் ஏற்படக்கூடிய காலதாமதம் கொஞ்சநஞ்சமல்ல. இன்னும் கூட ரயத்வாரி பட்டா அநேகம் பேருக்குக் கொடுக்கப்படவில்லை. அமைச்சர் அவர்கள்கூட பொதுக் குறிப்பில் இதற்கான கஷ்டங்கள் என்ன என்பதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். சர்வே செய்வதில் இருக்கக்கூடிய காலதாமதம், சர்வே செய்த பிறகு பட்டா வழங்குவதில் ஏற்படக்கூடிய காலதாமதம் அதிகமாக இருக்கிறது. திருச்சி ஜில்லாவில் இதுமாதிரி நிலைமை இருக்கிறது. இந்தச் சட்டத்தின் மூலம் நாம் எவ்வளவோ நன்மைகளை பொதுமக்கள் பெறவேண்டுமென்று விரும்பினலும், இப்படிக் காலதாமதமாவதால் இந்த நன்மைகளை மக்கள் அனுபவிக்க முடியவில்லை. ஆகவே இந்த வேலைகளை இன்னும் துரிதமாக முடித்துக் கொடுப்பதற்கான வாய்ப்புகளையும், வசதிகளையும் அமைச்சர் அவர்கள் ஏற்படுத்தித் தரவேண்டும். உதாரணமாக எத்தனையோ கடன் வழங்கும் திட்டங்களை ஏற்படுத்தியிருக்கிறோம். ஆனல் பலர் பட்டா இல்லை என்ற காரணத்தினல் அவ்வசதியைப் பெறமுடியாத நிலைமையில் இருக்கிருர்கள். அதுபோல் வெளியில் கடன் வாங்கவேண்டுமென்று சொன்னலும், நிலத்தை விற்கவேண்டுமென்று சொன்னலும் அவர்களுக்குப் பலவித கஷ்டங்கள் உண்டாகின்றன. இவைகளை எல்லாம் சரிப்படுத்துவதற்கு சட்டத்தையே மாற்றவேண்டுமென்பது இல்லை. அதிகாரிகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தி அவர்களுக்கு

ஊக்கம் அளிக்கவேண்டும். ஏற்கனவே அந்த இலாகாவில் இருந்து சிப்பந்திகளை அதிகப்படுத்தவேண்டுமென்ற கோரிக்கை வந்திருந்தாலும், அமைச்சர் அவர்கள் அதில் எந்த விதமான காலதாமதமும் செய்யாது விரைவில் ஆவன செய்துத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதுவும் இந்த இலாகாவின் சப்ஜக்ட் ஆனதினால் அவர்களுக்குக் கொஞ்சம் ஊதிய லாபத்தையாவது அளித்து உற்சாகமூட்டி இவ்வேலைகள் எல்லாம் துரிதமாக நடைபெற அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். ஆகவே இவ்விஷயங்களை எல்லாம் மனதில்கொண்டு தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்கிற கோரிக்கையோடு இந்த மசோதாவை வரவேற்று என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

Sri N. K. PALANISAMI : Sir on a point of order. The thing is that the provisions of the Act have been stayed and the matter is in the High Court and Supreme Court. When provisions have not been implemented, how can Government move amendment after amendment?

The Hon. Sri M. A. MANICKAVELU : Whatever is pending in the Courts is with regard to other matters; this is purely a technical matter whereby we are empowering the Director of Settlements in regard to particular matters.

* Sri R. SRINIVASA IYER : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவினால் இந்த 12 வருஷத்திற்கு மேற்பட்ட 26 ஆப் 1948 சட்டத்தின் மூலம் ஏற்பட்ட கஷ்டங்கள், பிரச்னைகள் ஓரளவு தீரலாம் என்பதை திரு. லாசர் போல சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இது நஷ்ட ஈடு சம்பந்தப் பட்டது. ஒருவர் சொத்தை எடுத்துக்கொண்டு நஷ்டஈடு கொடுப்பது, இதில் நடைமுறையில் எத்தனை கஷ்டங்கள் இருக்கின்றன என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஒரு எஸ்டேட்டினுடைய பேசிக் வருமானம் எவ்வளவு என்பதை அதை ஆர்ஜிதம் செய்கிறபோது—அந்தக் கணக்குப்பிள்ளை, அல்லது எஸ்டேட் மானேஜரிடம் விவரம் கோரப்படுகிறது. அவர்கள் அந்த எஸ்டேட்டைச் சேர்ந்தவர்களிடம் எதுவும் கேட்காது, தாங்களே ஏதோ இஷ்டம் போல அடிப்படை வருமானம் எவ்வளவு என்று குறித்து அனுப்பிவிடுகிறார்கள்.

“பேஸிக் ஆன்யுவல் சம்” இவ்வளவு என்று தீர்மானிக்கப் பட்டிருக்கிறது என்று மட்டும்தான் நோட்டீஸ் கொடுக்கிறார்கள். செக்ஷன் 54 (எ)-படி அட்வான்ஸ் காம்பன்சேஷன் பாதி காம்பன்சேஷன் தொகை என்று நிர்ணயிக்கப்பட்டு அநேகமாக பட்டுவாடா செய்யப்பட்டு விட்டது. பெரும்பாலோர் பணம் வாங்கியும் விட்டார்கள். அதைத் தவிர அவர்களுக்கு வேறு சொத்து இல்லை. 19,000 ரூபாய் கொடுக்கப்பட்டதில் 18,000 ரூபாய்

23rd February 1961] [Sri R. Srinivasa Iyer]

திருப்பிக் கொடுக்கவேண்டுமென்று இப்பொழுது ஆர்டர் போடு கிறார்கள். ஆனால் அதை எங்கிருந்து வசூல் செய்யப் போகிறார்களோ, அவர்கள் கையில் பணத்தை வைத்துக் கொண்டாயிருக்கிறார்கள்? உத்தரவு ரெஜிஸ்தர் தபாலில் அனுப்ப வேண்டுமென்று இருந்தாலும் ஆர்டர் போட்ட தேதியிலிருந்து 6 மாதத்திற்குள்ளாக நஷ்டயீட்டை க்ளெயிம் செய்யவேண்டுமென்று 42-வது செக்ஷனில் சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் அதை ஆறு மாத காலம் வரை தள்ளிப் போடலாம் என்றும் இருக்கிறது. அநேகமாக 50 சத விகிதம் காலாவதியாகிவிட்டதென்று தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. ஆறு மாத பின் கெடு அவசியமில்லை என்று நான் ஒரு மசோதா கொண்டுவந்தேன். அது பிரசுரமாகியிருக்கிறது. அதை அநேகர் வரவேற்று எனக்கு லெட்டர்களும் எழுதியிருக்கிறார்கள். ஆனால் சர்க்கார், நாங்கள் அதுபற்றி திருத்தங்கள் கொண்டு வரப்போகிறோம், நீங்கள் இந்த மசோதாவை கொண்டுவர வேண்டியதில்லை என்று எனக்கு எழுதியிருக்கிறார்கள். அப்படி ஒரு திருத்த மசோதா கொண்டுவந்தால் அநேகவித இக்கட்டுகள் தீர்ந்து போய் விடும். அந்த சட்டம் வந்த 2 வருடத்திற்குள், இன்னின்ன வித சிக்கல்கள் இதில் இருக்கின்றன என்று நான் ஒரு புத்தகம் போட்டிருந்தேன். கொஞ்சம் கொஞ்சமாக திருத்தங்கள் கொண்டுவருவதில் அநேகவித இடைஞ்சல்கள் ஏற்படுகின்றன. நஷ்டயீடு தீர்மானிக்கும்போது சம்பந்தப்பட்டவரை வைத்துக்கொண்டு தீர்க்காமல் ஒரு கணக்கு போட்டு அதை டெப்பாஸிட் செய்து விடுகிறார்கள். அதுபற்றி அப்பீல் செய்ய வேண்டுமானால், மனு கொடுத்து நகல் வாங்க வேண்டும். இரண்டு பக்கங்களுக்கு பட்டா கொடுக்கிறார்கள். நிலம் எடுக்கும்போது, என்னென்ன நிலம், இனம் நிலமா, நஞ்சை எவ்வளவு, புஞ்சை எவ்வளவு என்றெல்லாம் கணக்கு போட்டு கொடுப்பதில்லை. நகலுக்கு மனு போட்டால் 300, 400 காபி ஸ்டாம்புகள் என்னுகிறது. லான்ட் ஹோல்டரை கூட வைத்துக் கொண்டு கணக்குப் போட்டால் அவர்கள் கணக்கை தெரிந்து கொள்ள முடியும். 11-வது செக்ஷன்படி, ரயத்வாரி பட்டா நிலங்களுக்கு மட்டும் விலக்களிப்பது, 15-வது செக்ஷன்படி தவறுதலாக பட்டா கொடுக்கப்பட்டிருந்தாலும்கூட அதை விலக்குவதா என்ற பிரச்னை எழுந்திருக்கிறது. டைரக்டர் ஆப் செட்டில்மென்ட்-க்கு ஒரு உத்தரவு அனுப்பியாவது "பேஸிக் ஆன்யுவல் சம்" கணக்கு போடும்போது நஷ்டயீடு பெறக்கூடிய லான்ட் ஹோல்டரை வைத்துக்கொண்டு கணக்குப் போட்டால் சௌகரியமாகயிருக்கும். சர்க்காருக்கும் வேலை சற்று குறையும். கணக்குப்பிள்ளையிடம் கேட்டால் எங்களுக்கு விவரம் கொடுக்க அதிகாரமில்லையென்கிறார். அவர்களுக்கு அதிகாரமில்லை, ஆகவே அவர்களைக் கேட்டும் பிரயோஜனமில்லை. ஆக, பல சிக்கல்கள் இருக்கின்றன, அவைகளையெல்லாம் ஒரேயடியாக தீர்க்க வேண்டும். நான் கொண்டு வந்திருக்கும் மசோதா குறித்து டெப்டி செக்ரட்டரியிடம் இருந்து ஒரு லெட்டர் வந்திருக்கிறது. சர்க்காரே அதுபற்றி திருத்தங்கள் கொண்டுவர இருக்கிறார்கள், என்று

[Sri R. Srinivasa Iyer] [23rd February 1961

எனக்கு லெட்டர் வந்திருக்கிறது. ஆகவே, அதுபற்றி திருத்தங்களை சர்க்காரே கொண்டுவரப் போகிறார்கள் என்று இருப்பதால், அதை உடனடியாக கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஒருவருக்கு நஷ்டயீடு கொடுக்கும்போது நஷ்டயீட்டுத் தொகையை எஸ்டேட் அபாலிஷன் ட்ரிப்யூனலிடம் தாக்கல் செய்து விடுகிறார்கள். அந்தப் பணம் அந்த நிலத்தின் சொந்தக்காரருடைய பணமாகும். அதை சர்க்கார் எடுத்துக்கொள்வது நியாயமில்லை. ப்ராமிசரி நோட்டுக்கு 3 வருட காலாவதியிருக்கிறது. பந்தகத்திற்கு 12 வருட காலாவதியிருக்கிறது. அப்படியிருக்க, அதற்கு மட்டும் ஆறு மாத கெடு என்றால்? எக்ஸ்க்யூஸ் செய்து ஒரு ஆறு மாத கெடு. அதற்கு மேல் அப்பணம் கொடுக்கத் தக்கதல்ல என்றால் சொந்தக்காரர்கள் என்ன செய்வது? நஷ்டயீட்டுத் தொகையை சர்க்கார் எடுத்துக்கொள்ளப் போவதில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். மனு போட்டு வாங்க முடியாத நிலையில் அவர்கள் பணத்திற்கு என்ன செய்வது? சிவில் கோர்ட்டில் பணத்தைக் கட்டினால் அதை முதலாளி வாங்காவிட்டால் அது அங்கேயேயிருக்கிறது. அதற்கு காலாவதி கிடையாது. மூன்று வருடம் கழித்து லாப்ஸாகும். பின் அக்கௌண்டண்ட்-ஜெனரலிடம் போய் வாங்கவேண்டும். ஆக, நான் சொல்வது யார் சொத்தை நாம் எடுத்துக் கொள்கிறோமோ அவருக்குத்தான் அந்த நஷ்டயீட்டுத் தொகை. அது அவருடையது. ஆகவே, ஒரு காலாவதி நிர்ணயம் செய்துவிட்டு அதற்குப் பிறகு அதை சர்க்கார் எடுத்துக்கொள்ளக்கூடாது. சேலம் ஜில்லாவில் 50 சத விகிதம் மனு காலாவதியாகிவிட்டது என்று தள்ளுபடியாகியிருக்கிறது என்று லெட்டர் வந்திருக்கிறது. தஞ்சையில், இந்தச் சட்டம் சம்பந்தப்பட்ட வரையில் எனக்கு அனுபவம் இருப்பதால் எனக்கு தெரியும் எவ்வளவு காலாவதியாகிப் போய்விட்டன என்பது. ஆறு மாதங்களுக்கு மேலாகி விட்டது, காலாவதியாகி விட்டது, ஆகவே காம்பன்சேஷன் கொடுக்க அதிகாரமில்லையென்று தள்ளுபடி செய்யப்பட்ட மனுக்கள் அங்கு ஜாஸ்தி. டெப்பாஸிட் செய்தது ஜனவரியில் என்றால் நோட்டீஸ் செல்வது செப்டம்பரில்.

இந்தச் சட்டம் கொண்டுவந்திருப்பது நியாயம்தான். டைரக்டருக்கு இந்த அதிகாரம் இருக்க வேண்டும். யாருடைய நிலத்தை நாம் பொதுக் காரியத்திற்காக, பொது நன்மைக்காக எடுத்துக் கொள்கிறோமோ அவருக்கு அதற்குள்ள காம்பன்சேஷன் உடனடியாகப் போய்ச் சேரவேண்டும். அதை சர்க்கார் எடுத்துக் கொள்ளாமல் சிவில் கோர்ட்டில் டிப்பாஸிட் செய்யவேண்டும். இது குறித்து நான் என் மசோதாவில் விளக்கமாக குறிப்பிட்டிருக்கிறேன். அந்தத் திருத்தங்களை சர்க்காரே கொண்டு வருவதாக சொல்லியிருக்கிறபடியால் அதை சீக்கிரம் கொண்டுவந்து நிறைவேற்றி, காம்பன்சேஷன் உடனடியாக போய் சேருவதற்கு வேண்டியதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

23rd February 1961] [Sri R. Srinivasa Iyer]

பின்னர், இன்னொன்று சொல்ல வேண்டியிருக்கிறது. அதாவது இந்த நோட்டீஸ்கள் எல்லாம் போர்ட் செண்ட் ஜார்ஜ் கெஜெட்டில் வருகிறது. தாலூகா ஆபீஸ் போர்டுகளிலும் போடுகிறார்கள். எஸ்டேட் அபாலிஷன் டிரிப்யூனல் ஆபீஸ் போர்டிலும் போடு கிறார்கள். ஆனால் எவ்வளவு பேர்கள் கெஜெட் வாங்கிப் பார்க்கிறார்கள் என்று ஆலோசிக்கவேண்டும். கந்தர்வ கோட்டையில் 3¾ எக்கர் நிலம் உள்ள ஒருவருக்கு 50 ரூபாய் ஒரு வகையில் காம்பன்சேஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் அங்கு அலைந்து, மனு போட்டு இப்படி பல சிரமங்கள்பட்டு இந்தச் சிறு தொகையை வாங்கப் போகிறார்களா, என்ன? தஞ்சையில் 1,115 இனம் எஸ்டேட்கள் இருக்கின்றன. இவ்வளவு பேர்களும், அங்குள்ள போர்டை போய் பார்த்துக் கொண்டிருக்க முடியுமா அல்லது கெஜெட்டைப் பார்த்துக் கொண்டிருக்க முடியுமா? இவ்வளவு தொகை டெப்பாஸிட் செய்யப்பட்டு விட்டதென்று, யாரிடமிருந்து நிலத்தை எடுத்தோமோ அவருக்கு ரெஜிஸ்டேர்ட் தபாலில் நோட்டீஸ் அனுப்பவேண்டுமென்று ரூலிருக்கிறது. ஆனால் அப்படிச் செய்யப்படுவதில்லை. ஆக, பலவித சிக்கல்கள் இருக்கின்றன. அவைகளையெல்லாம் நன்கு ஆராய்ந்து பார்த்து எல்லாச் சிக்கல்களையும் ஒரேயடியாக தீர்க்க வேண்டும். ஆகவே, நஷ்டயீட்டுத் தொகையை நியாயமான முறையில் வட்டியில்லாம லாவது கூடிய சீக்கிரம் கொடுக்க வேண்டிய வழிவகைகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு நான் இந்த மசோதாவை ஆதரிக்கிறேன்.

Sri J. MATHA GOWDER: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த சட்டம் நிறைவேற்றப்பட்டு 12 வருடங்களுக்கு மேலாகியும் இன்றுதான் இது மீண்டும் இந்த சட்ட மன்றத்தின் முன் வந்திருக் கிறது. 12 ஆண்டுகளுக்கு முன் ஒரு சட்டத்தை ஏற்படுத்தி இப்பொழுது அதற்கு திருத்தம் கொண்டுவரக்கூடிய நிலையில் இருப்பதைப் பார்க்கும்போது பரிதாபகரமாகத்தான் இருக்கிறது.

(Deputy Speaker in the Chair.)

ஒரு சட்டத்தை நாம் ஏற்படுத்திய பிறகு 2, 3 வருடத்திற்குள்ளாக நடைமுறையில் என்னென்ன கஷ்டங்கள் இருக்கின்றன என்று அந்த இலாகா பரிசீலனை செய்து உடனடியாக அதற்கு வேண்டிய திருத்தங்களை கொண்டுவந்திருந்தால் இவ்வளவு காலதாமதம் ஏற்பட்டிருக்காது. இந்த ஆக்ட் 1948-ல் வந்தும் கூட நீலகிரி ஜில்லாவைப் பொறுத்தவரையில் கூடலூர் தாலூகாவில் 12 வருடங்களாகியும் அங்கு ஆரம்ப வேலைகள் கூட இன்னும் செய்யவில்லை. 12 வருட காலத்தில் ஒரு ஆபீசரைக் கூட நியமிக்காமல் அங்கு யாதொரு வேலையும் தொடங்கப்படாமல் இருப்பது குறித்து என்னால் ஒன்றுமே புரிந்துகொள்ள முடிய வில்லை. இந்த சபையில் அமைச்சர் அவர்களிடம் நான் ஒரு கேள்வி

[Sri J. Matha Gowder] [23rd February 1961

போட்டிருந்தேன். அதாவது நீலகிரியில் உள்ள கூடலூர் பகுதியில் ஜன்மி ஒழிப்பு ஏன் செய்யவில்லை, அதற்கு காரணமென்ன, என்று கேட்டபோது அமைச்சர் அவர்கள் ஒரேயடியாக பதில் சொல்லி விட்டார்கள், அந்த ஜில்லாவில் ஜன்மியே கிடையாது என்று. இதனுடைய காரணம் என்னவென்று எனக்குப் புரியவில்லை. நீலகிரி ஜில்லாவை மறந்து விட்டார்களோ என்று நினைக்க தோன்றுகிறது. நான் இதில் ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்பு கிறேன். இம்மாதிரியான எஸ்டேட் அபாலிஷன் சட்டம் ஏற்படுத்திய பின்னும் முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் என்ன பலன் ஏற்பட்டிருக்கிறது என்பதை சர்க்கார் பரிசிலனை செய்து பார்க்கவேண்டும். அதற்கு மேல் இரண்டாவது ஐந்தாண் டுத் திட்டம் முடிவடைந்திருக்கிறது. இந்தக் காலத்திலும் ஜமீன் ஒழிப்புக்காக என்ன வேலை செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் அரசாங்கம் பரிசிலிக்க வேண்டும். இதைப்பற்றி நன்றாக ஆராய்ந்து பார்த்தால் உருப்படியாக எந்த வேலையும் செய்ய முடியவில்லை. பல இடங்களில் விளாக்குகளை அமைத்து அதற்கான ஆபீஸர்களை போட்டிருக்கிறோம். விஸ்தரிப்புத் திட்டம் என்று சொல்லி பல இடங்களை விஸ்தரித்துக்கொண்டே போகிறோம். ஆனால் இவை களில் எந்த விதமான வேலையும் செய்ய முடிவதில்லை. எந்த வேலை செய்ய வேண்டுமென்றாலும் நில சொந்தக்காரர்களிடத்தில் அக்ரிமெண்ட். வாங்கின பின்னால்தான் எந்த வேலையும் செய்ய முடியும் என்ற நிலை இருக்கிறது. எந்த இடத்தை எடுத்துக் கொண்டாலும் அதன் சொந்தக்காரர்கள் அக்ரிமெண்ட் இல்லாமல் அதில் கிணறு வெட்டக்கூடாது, வீடுகள் கட்டக்கூடாது, அதிலுள்ள மரங்களை வெட்டக்கூடாது, பள்ளிக்கூடம் கட்டக் கூடாது, ரோடு போடக் கூடாது, இவ்விதம் ஒரு வேலையும் செய்யக் கூடாது. இவ்விதம் நிலச் சொந்தக்காரர்களின் அக்ரிமெண்ட் இல்லாமல் எந்த வேலையும் செய்யக் கூடாது என்றிருப்பதினால் சமுதாய வளர்ச்சித் திட்டத்தில் எந்த விதமான வேலையும் செய்ய முடியாமல் இருக்கிறது. கூடலூர் வட்டார வளர்ச்சித் திட்டத்தின் கீழ் என்ன வேலை செய்திருக்கிறார்கள் என்று கணக் கெடுத்துப் பார்த்தால் பூஜ்யம்தான் இருக்கும். எந்த விதமான வேலையையும் அங்கு செய்ய முடியவில்லை. இதனால் நான் அங்குள்ள அதிகாரிகளை குறை சொல்லுவதாக யாரும் நினைக்க வேண்டாம். அங்குள்ள நிலை இம்மாதிரி இருக்கிறது. அதைப் பற்றி கனம் அமைச்சர் அவர்களிடத்தில் நேரிடையாகவே சொல்லி யிருக்கிறேன். இந்த நிலையைப் பார்க்கும்போது மக்களுக்காக நாம் என்ன செய்திருக்கிறோம் என்று பார்த்தால் ஒன்றும் இல்லை என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. இவைகளை நிவர்த்தி செய்ய இலாகாக்கள் எல்லாம் துரிதமாக வேலை செய்யவேண்டும். இந்த ஆண்டில் அந்த ஜில்லாவுக்கு ஒரு ஆர்.டி.ஓ. போட்டிருப்ப தாக கேள்விப்படுகிறேன். அதிலும் முதலாவது போட்ட ஆர்.டி.ஓ. அங்கு வரவில்லை என்றும், இப்போது ஒருவரை அதற்கடுத்த படியாக போட்டிருப்பதாகவும் அறிகிறேன். அதிகாரிகள் அங்கு

23rd February 1961] [Sri J. Matha Gowder]

வருவதற்கு இஷ்டமில்லாமல் இருந்தால் அதற்கு காரணம் என்ன என்பதையும் நாம் பார்க்கவேண்டும். அவர்களுக்கு என்ன இடைஞ்சல் இருக்கிறது என்பதையும் நாம் பார்க்கவேண்டும். அவர்களுக்கு கூடலூர் போன்ற பகுதிகளுக்கு வரவேண்டும் என்றால் ஏதாவது ஸ்பெஷல் அலவன்ஸ் கொடுக்கவேண்டு மென்றால் அதையும் கொடுக்கவேண்டும். முன்பு அந்த இடத்தில் வேலை செய்யும் அதிகாரிகளுக்கு மலேரியா அலவன்ஸ் கொடுக்கப்பட்டு வந்தது. இப்போது அங்கு மலேரியா இல்லை என்ற காரணத்திற்காக அந்த அலவன்ஸ் நிறுத்தப்பட்டுவிட்ட தாகவும் தெரிகிறது. ஆகவே அவர்களுக்கு கூடுதல் ஊதியம் ஏதாவது வேண்டுமென்று விரும்பினால் அதை கொடுப்பதற்கும் அரசாங்கம் முன்வரவேண்டும். அவர்கள் அங்கு போய் வேலை செய்வதற்கு என்ன அசௌகரியங்கள் இருக்கின்றன என்பதை அரசாங்கம் பரிசீலனை செய்து பார்த்து அதற்கு தகுந்த ஒரு ஊதியத்தை கொடுக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். இந்த சட்டம் இயற்றி 12 ஆண்டுகள் ஆகியும் கூட இப்போதுதான் ஆரம்ப வேலை நடைபெற ஆரம்பித்து இருக்கிறது என்றால் எங்கள் கூடலூர் பகுதியில் இந்த மூன்றாவது ஐந்தாண்டு திட்ட காலத் திற்குள் என்ன வேலைகள் நடைபெறும் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆகவே இந்த ஐந்தாண்டு திட்டத்தி லாவது அந்தப் பகுதிகளுக்கு என்ன வேலையை ஆரம்பிக்க முடியும் என்பதைப்பற்றி அரசாங்கம் உடனடியாக பரிசிலிக்க வேண்டும். அதற்கு முன்னதாக ஒரு விஷயத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஜமீன் ஒழிப்புக்குப் பிறகு பட்டா செய்வதற்கு வேண்டுமென்றால் கண்டிஷன் ஏற்படுத்தலாம். இதற்கு சர்வே செய்வதற்கும் ஏராளமான அதிகாரிகள் வேண்டும் என்று சொல்லக்கூடும். அதற்கு முன்னதாக சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் மூலமாக வேலைகள் நடைபெறுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். இந்த வேலை களுக்காக எடுக்கப்பட்ட நிலங்களுக்கு என்ன காம்பன்சேஷன் நிர்ணயித்திருக்கிறோமோ அதை கொடுக்கவேண்டும். பல இடங் களில் நஷ்டஈடு கொடுத்துக்கொண்டிருக்கிறோம். இதன் கீழ் வேலை நடைபெறுவதற்கு துரிதமாக ஏதாவது மாற்றி அமைக்கவேண்டுமானால் அதையும் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்போதுள்ள நிலையில் அந்த ஒரு ஜில்லாதான் இப்படி இருந்து கொண்டிருக்கிறது. மற்ற ஜில்லாக்களுக்கு எல்லாம் வருடந்தோறும் நஷ்ட ஈடு கொடுப்பதற் காக மான்யக் கோரிக்கை கொண்டு வரப்படுகிறது. ஆனால் நீலகிரி ஜில்லாவுக்கு மட்டும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்திருப் பதாக தெரியவில்லை. ஆகவே இதை அமைச்சர் அவர்கள் மனதில் கொண்டு தயவுசெய்து உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டு மென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அதோடு எங்கள் பகுதியில் 99 வருட லீஸ் கொடுத்திருப்பது எந்த அடிப்படையில் வரும் என்று தெரியவில்லை. ஆகவே இந்த சட்டம் வரும்போது

[Sri J. Matha Gowder] [23rd February 1961

ரயத்வாரி அனுசரித்து பட்டாக் கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த மசோதாவை ஆதரித்து என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

SRI S. M. ANNAMALAI : **கனம் சட்ட மன்ற உதவித் தலைவர்** அவர்களே, இதன் மீது நான் கொடுத்திருக்கும் திருத்தப் பிரேரணை என்னவென்றால், இந்த மசோதாவை ஜாயின்ட் செலெக்ட் கமிட்டிக்கு அனுப்பவேண்டும் என்பதுதான். இதிலுள்ள பல குறைகளைப்பற்றி கனம் லாசர் அவர்களும், மற்றும் பல அங்கத்தினர்களும் நன்றாக சொன்னார்கள். இந்தச் சட்டம் 1948-ல் நிறைவேற்றப்பட்டு, அதன் பின்னால் இந்தச் சட்டத்தில் பலவித ஊழல்கள் இருக்கின்றன என்று பலராலும் சொல்லப்பட்டது. ஆகவேதான் இதை ஜாயின்ட் செலெக்ட் கமிட்டிக்கு அனுப்ப வேண்டும் என்று சொல்லியிருக்கிறேன். கிராமப்புறங்களில் ஜாகீர் போன்றவைகள் இருக்கின்றன, அவைகளை எல்லாம் நாம் நன்றாக பரிசிலிக்க வேண்டியிருக்கிறது. உதாரணமாக செக்ஷன் 11-ல் பட்டா கொடுப்பதைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. உதாரணமாக ஏரி எதிர்வாய்களில் உள்ள நிலங்களுக்கு பட்டா வழங்குவதற்கு 1939-லிருந்து சுவாதீனம் இருக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. சாதாரணமாக பட்டா ஜாகீர் நிலத்தில் ஒரு ஆளினுடைய பெயரில் இருக்கும். சுவாதீனம் இன்னொரு ஆளினுடைய கையில் இருக்கும். அதோடு ஏரி எதிர்வாயில் 4 எக்கர் நிலம் ஒரு ஆளின் கையில் இருந்தால் 3 எக்கர் 90 சென்டு நிலத்தை விட்டுவிட்டு வெறும் 10 சென்டுக்கு மட்டும் சர்க்கார் பட்டா கொடுக்கிறார்கள். அதோடு இவ்விதம் பட்டா செய்து கொடுக்கும் 10 சென்ட் நிலத்தில் பம்பு செட் இருக்கும். இதற்காக ஆண்டு ஒன்றுக்கு மினிமம் கட்ட வேண்டிய ரூபாய் 250-ம் கட்ட வேண்டும். இப்படி 10 சென்டு நிலத்திற்கு மட்டும் செலவு செய்ய முடியுமா என்பதை நாம் சிந்தித்து பார்க்கவேண்டும். இதை எதிர்த்து பல அப்பீல்கள் ரெவின்யூ போர்டில் இருக்கின்றன. இதைப்பற்றி நேரடியாகவும் அமைச்சர் அவர்களிடத்தில் சொல்லியிருக்கிறேன். இதன் காரணமாக ஆரணி ஜாகீர் வட்டாரத்தில் பல பட்டாதார்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். ஏரி எதிர்வாயில் நிலங்கள் இருக்கின்றன என்ற காரணத்தின் பேரில் பல ஏக்கர் நிலங்கள் இதுவரையும் பட்டா செய்யப்படாமல் இருந்து வருகின்றன. ஏரியுடைய கரை தூர்ந்து போகும் என்று சொல்லி இதை புறம்போக்காக நாங்கள் எடுத்துக்கொள்கிறோம் என்று சொல்லுகிறார்கள். இவ்விதம் கிரயம் கொடுத்து சர்க்கார் 6,000, 7,000 எக்கர்கள் வரையிலும் எடுத்திருக்கிறார்கள். ஒரு விவசாயிக்கு 4 எக்கர் நிலம் இருந்தால் 10 சென்டை மட்டும் பட்டா செய்து கொடுத்துவிட்டு 3 எக்கர் 90 சென்டை விட்டு விடுகிறார்கள். பட்டா செய்து கொடுத்த இடத்தில்தான் கிணறு இருக்கிறது, பம்ப் செட் இருக்கிறது. இதற்காக ஆண்டு ஒன்றுக்கு மினிமம் கட்டணமாக 250 ரூபாய் செலுத்த வேண்டும். அதோடு சர்க்கார்

23rd February 1961] [Sri S. M. Annamalai]

எடுத்துக்கொள்ளும் நிலங்களுக்கு காம்பன்ஸேஷன் சரியாக கிடைப்பதில்லை. எடுத்தவுடன் காலி செய்யவேண்டும் என்று ஆரும் நம்பர் நோட்டீஸ் கொடுக்கிறார்கள். இந்த ஜாகிர் நிலங்கள் தங்கள் கைவசம்தான் இருக்கின்றன என்பதற்கு 1939-லிருந்து தங்களிடத்தில்தான் இருக்கின்றன என்று ரிக்கார்டு காண்பிக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். கிராமப்புறங்களிலுள்ளவர்கள் இதற்கு எவ்வாறு ரிக்கார்டு கொடுக்க முடியும் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். வேண்டுமென்றால் கிராமத்தில், சுற்றுப்புறத்திலுள்ளவர்கள்தான் இதைப்பற்றி சொல்ல முடியும். உண்மையாகவே நிலைமை என்னவென்றால் ஜாகிர் நிலங்களில் ரயத் ஒருவனிடத்தில் இருக்கும். சுவாதீனம் இன்னொருவனிடத்தில் இருக்கும். இவ்விதம் இருப்பதால் இதற்கு சரியான ரிக்கார்டு அவர்களால் காண்பிக்க முடிவதில்லை. இந்தக் காரணத்தை ஒட்டி ஆரணி ஜாகிர் பகுதியில் பல ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் புறம் போக்காக ஆக்கப்பட்டிருக்கின்றன. இதன் காரணமாக சிறு சிறு ஏழைகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

அதேபோலவேதான் சர்வே செய்வது. ரயத்துவாரியாக மாற்றும்போது சர்வே அண்ட் செட்டில்மெண்ட் பார்ட்டி அவர்கள் 11 a.m.
செய்திருக்கக்கூடிய அக்கிரமத்தை என்னால் கூட சொல்ல முடியாது. அந்த அளவுக்கு அக்கிரமம் செய்திருக்கிறார்கள். அவரவர்கள் அந்த பார்ட்டியை எப்படி எப்படி பயன்படுத்திக் கொண்டார்களோ அந்த முறையில் அவர்கள் செய்திருக்கிறார்கள். ஒருவனுக்கு 2 ஏக்கர் 10 சென்ட் இருந்தால் அவனுக்கு 2 ஏக்கர் 50 சென்ட்க்கு பட்டா வழங்கி விட்டிருக்கிறார்கள். ஒருவனுக்கு 4 ஏக்கர் இருந்து வந்த அதிகாரியை சரிவர கவனிக்கவில்லையென்றால் அவனுக்கு 3 ஏக்கர் 50 சென்ட் என்று குறைத்து பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. வரப்பு ஒரு புறம் இருக்கிறது, வேறு ஒரு புறத்தில் சர்வே கல்லைப் போட்டிருக்கிறார்கள். அவர்களைக் கேட்டால் நாங்கள் செய்ததுதான் சரி என்று சொல்லிவிட்டுப் போயிருக்கிறார்கள். நிலச் சொந்தக்காரர்கள் கிராம மக்களாக இருப்பதால் எந்தக் காலத்தில் அப்பீல் செய்யவேண்டுமென்று தெரியாமல் அப்படியே விட்டுவிட்டிருக்கிறார்கள். இப்போது அப்பீல் செய்யவேண்டுமென்று நினைத்தால் காலம் போய்விட்டது, ஆகையால் உங்களுடைய அப்பீலைத் தள்ளுபடி செய்கிறோம் என்று ரெவின்யூ போர்டிலிருந்து உத்திரவு வருகிறது. இதையெல்லாம் ஆராய்ந்து பார்க்கவேண்டியிருக்கிறது. அத்துடன் ஏரி எதிர் வாய் நிலங்களை மறு பரிசீலனை செய்யவேண்டியிருக்கிறது. இதைப்போலவே பல செக்ஷன்கள் இருக்கின்றன. அவைகளையும் நல்ல முறையில் பரிசீலனை செய்யவேண்டுமென்றுதான் இந்த மசோதாவை ஒரு கூட்டு பொறுக்குக் குழுவுக்கு அனுப்பவேண்டுமென்று திருத்தம் கொடுத்திருக்கிறேன். காலதாமதம் ஆகாமல் இந்த மாதத்திலேயே கூட முடித்து விடலாம். கூட்டுப் பொறுக்கு குழுவிற்கு அனுப்பினால் சட்ட மன்ற உறுப்பினர்களை நேரடியாகக்

கலந்து இதிலுள்ள கஷ்ட நஷ்டங்களை ஆராய முடியும். ஆகவே இதை அமைச்சர் ஏற்றுக்கொண்டு இதை கூட்டு பொறுக்குக் குழுவிற்கு அனுப்பவேண்டுமென்று மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

* THE HON. SRI M. A. MANICKAVELU : கனம் உதவி சபா நாயகர் அவர்களே, இதற்கு முன்பு இருந்த சட்டம் எஸ்டேட் லாண்ட் ஆக்ட் என்று பெயர். அதை ஒழிக்கக்கூடிய சட்டம்—அபாலிஷன் ஆக்ட் உலகத்திலேயே மிகச் சிக்கலான சட்டம் என்று நீதி மன்றத்திலேயே சொல்லியிருக்கிறார்கள். அந்தச் சட்டத்தை ஒழிக்கக்கூடிய இந்தச் சட்டமும் அதே பாரம்பரையில் இதுவும் சிக்கலாக இருக்கிறது. அப்போதைக்கப்போது சிக்கல்கள் ஏற்படு கின்றன. எவ்வப்போது சிக்கல்கள் வருகின்றனவோ அவ்வப் போது திருத்த மசோதாவைக் கொண்டுவந்து நிறைவேற்று கிறோம். இந்த மசோதா ஒரே ஒரு விஷயத்தைப்பற்றித்தான். அதாவது டைரக்டர் ஆப் செட்டில்மெண்ட் ஒரு முடிவுக்கு வந்தால் அதை இப்போது அவரே திருத்த முடியாது. அது போர்டுக்குப் போய் சம்பிரதாயத்தோடு செய்யவேண்டும். அப்படிக்கில்லாமல் சில காரணங்களுக்காக திருத்தம் வேண்டு மென்று நினைத்தால் டைரக்டர் ஆப் செட்டில்மெண்ட் அவர்களே செய்யலாம் என்று அவருக்கு அதிகாரம் கொடுப்பதற்காகக் கொண்டுவரப்பட்டிருக்கிறது இந்த மசோதா. அப்படி அவர் முடிவு செய்வதற்கும், அப்பீல் செய்வதற்கும் இடம் இருக்கிறது. பிரச்னை இதுதான். ஆனால் இதிலிருந்து என்னென்னமோ கிளம்பி விட்டது. அதுவும் கனம் நீலகிரி அங்கத்தினர் என்னவோ பேசினார். அவர் பேசியதற்கும் இந்த பில்லுக்கும் சம்பந்தமில்லை. அங்கு மலபார் டெனன்ஸி ஆக்ட் இருக்கிறது. ஜன்மி, குடியிருப்பு இந்தமாதிரி மலையாளத்தில் என்னென்னமோ இருக்கின்றன. ஒன்று அல்லது ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பு நீலகிரிக்குப் போயிருந்தபோது இதைப்பற்றி பிரஸ்தாபம் செய்யப்பட்டது. அதற்காக கலெக்டர் போன்றவர்களைச் சேர்த்து ஒரு கமிட்டி மாதிரி போட்டு விசாரணை செய்யச் சொன்னோம். இருக்கக்கூடிய சிக்கலைத் தீர்க்க உத்தியோகஸ்தர்களை நியமித்தோம். நியமிக்கப் பட்ட உத்தியோகஸ்தர்கள் போகவில்லை என்று சொன்னார்கள். அது துரதிர்ஷ்டம்தான். உத்தியோகஸ்தர்கள் போகவில்லை யென்றால் அவர்கள் காய்ச்சல் முதலிய காரணங்களினால் போகாமல் இருந்திருக்கலாம். அதற்கு வேறு உத்தியோகஸ் தர்களைப் போட்டு இந்தப் பிரச்னை தீர்க்கப்படும். அந்தப் பிரச்னைக்கும் இந்தப் பிரச்னைக்கும் சம்பந்தமில்லை.

இன்னொரு கனம் அங்கத்தினர்—அண்ணாமலை அவர்கள்—பொறுக்குக் கமிட்டி வேண்டுமென்று சொன்னார்கள். இப்போது திருத்தப்படவேண்டியது ஒன்றே ஒன்றுதான். டைரக்டர் ஆப் செட்டில்மெண்ட்தான் செய்தது தப்பாக இருந்தால் அவரே அதைத் திருத்தலாம் என்று அதிகாரம் கொடுக்கப்போகிறோம்.

இதில் பொறுக்குக் கமிட்டி என்ன செய்யப்போகிறது என்று தெரியவில்லை. ஆகையால் இந்தப் பிரச்னைக்கு அது வேண்டிய தில்லை. இன்னொன்று ஏரி எதிர்வாய் நிலங்களில் பட்டா கொடுத்தும் அப்புறப்படுத்தப்படுகிறார்கள் என்று சொன்னார்கள். ஜமீன்தார்கள், ஜாகீர்தார்கள் நிர்வாகம் சர்க்கார் நிர்வாகம் மாதிரி நடப்பதில்லை. அது ஒரு தனிப்பட்ட நிர்வாகம். ஏதோ நடக்கும். பட்டா கிடைக்கக்கூடாதவர்களுக்குக் கொடுப் பார்கள்—கொடுக்கக்கூடாத இடத்திற்குக் கொடுப்பார்கள். அதை வாங்கி அனுபவித்திருக்கலாம். சர்வே செய்த போது பார்த்தால் ஏரி எதிர்வாய் நிலங்களுக்குக் கூட பட்டா வழங்கியிருக்கிறார்கள். 10 அல்லது 15 வருஷமாக அனுபவித்துக்கொண்டிருக்கலாம். ஏரி எதிர்வாயில் சாகுபடி செய்தால் ஏரி ஆயக்கட்டு நிலங்களை அது பாதிக்கும். ஆகையால் ஏரி எதிர்வாயில் சாகுபடி செய்யக்கூடாது. அதைக்கூட தளர்த்தியிருக்கிறோம். நீர்ப்பிடிப்பு இருக்கும் காலத்தில் மாத்திரம்—குறைந்த அளவு ஒரு மாதம்—கூடாது என்றுதான் சொல்லுகிறோம். மற்ற நிலங்களில் சாகுபடி செய்யக்கூட அனுமதித்து வருகிறோம். இதெல்லாம் இந்த மசோதாவிற்குச் சம்பந்தமில்லை. ஏதோ சொன்னாரே என்றுதான் நானும் பதில் சொன்னேன்.

இது விஷயமாக "அப்ரோப்ரியேட்"-ஆகப் பேசியவர்கள் வக்கீல்கள்தான். வக்கீல்களுக்கு எப்போதுமே சப்ஜெக்டைக் குறித்துப் பேசும் பழக்கம் ஏற்பட்டு விடுகிறது. அதனால்தான் அவர்கள் பேசினார்கள். கனம் சீனிவாச அய்யர் அவர்கள் சில விஷயங்களைப்பற்றிப் பேசினார்கள். ஒரு சங்கடத்தைத் தீர்க்கத் தான் இந்த மசோதா கொண்டுவரப்பட்டுள்ளது. இன்னும் சில விஷயங்களைச் சேர்த்து ஒரு மசோதா கொண்டுவரவேண்டுமென்ற உத்தேசம் இருக்கிறது. காம்பென்ஸேஷன் டைம் லிமிட்டைக் குறைத்ததால் 50 சத விகிதம் மனுக்கள் தள்ளுபடியாகிவிட்டன என்று சொன்னார்கள். நோட்டிபை செய்து விடுகிறோம், தனியாக நோட்டீஸ் கொடுக்கவேண்டுமென்றிருக்கிறது. ஆகையால், ஸீரியேட்டிமாக கனம் அங்கத்தினர் எழுதிக் கொடுத்தால் எல்லா வற்றையும் பரிசீலனை செய்து நாங்கள் ஒரு மசோதா கொண்டு வரலாம்.

கனம் லாஸர் அவர்கள் பேசும்போது இந்தமாதிரியான சிக்கல்கள் இருக்கின்றன என்று சொல்லி இப்போதாவது மசோதா வந்ததைப்பற்றி பாராட்டினார். ஆக, நான் முன் சொன்னதுபோல இது ஒரு சிக்கலான சட்டம். சிக்கலான பிரச்னைகள் அடிக்கடி வருகின்றன. சில சமயத்தில் திடீரென்று வருகின்றன—முதலில் தெரிவதில்லை. ஒரு சட்டத்தில் நிறைய திருத்தங்கள் இருக்கின்றன என்றால் அது இந்தச் சட்டத்திற்குத் தான்—வேறு எந்தச் சட்டத்திற்குமில்லை. நியாயஸ்தலங்களே சொல்லி இருக்கின்றன. அத்தோடு ப்ரிவி கவுன்சில் வரையில்

[Sri M. A. Manickavelu] [23rd February 1961]

போயிருக்கின்றது. தாய் சட்டத்தில் இந்த மாதிரி இருந்தால் பரவாயில்லை. ஆனால் அதை ஒழிக்கும் சட்டத்திலும் வந்து கொண்டுதான் இருக்கின்றன. இதையெல்லாம் தீர்க்க பிரயத்தினம் எடுத்துக்கொள்ளலாம். எஸ்டேட்டுகளெல்லாம் சர்வேயாகி விட்டன—மலைப் பிரதேசம் தவிர எல்லாம் ஆகிவிட்டன. செட்டில் மெண்ட்டும் சீக்கிரம் முடிந்துவிடும் என்று எதிர்பார்க்கிறோம். காம்பென்ஸேஷன் விஷயத்திலே கூட இந்தியாவிலேயே ரொம்ப தாராளமாக நியாயமான முறையில் இந்த மாகாணத்தில்தான் வழங்கப்பட்டது. கூடுமான வரையில் ஹ்யூமன் கெபாஸிட்டியில் எந்த அளவு முடியுமோ அந்த அளவுக்கு நாம் செய்துகொண்டு தான் இருக்கிறோம். சிறிய ஒரு விஷயத்தைப்பற்றி மட்டும் இருப்பதால் இன்னும் நிறைய பிரசங்கம் இல்லாமல் இத்துடன் இதை நிறைவேற்றினால் நான் ரொம்பவும் நன்றியுள்ளவனாக இருப்பேன்.

The amendment was put and lost.

DEPUTY SPEAKER : The question is—

"That the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1961 (L.A. Bill No. 5 of 1961) be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2.

DEPUTY SPEAKER : The motion is—

'That clause 2 do stand part of the Bill.'

SRI R. SRINIVASA IYER : Sir, I move the following amendment :

In the proposed amendment to clause 39, Madras Act XXVI of 1948, *for* item (*a*) (4-*a*) (ii) *substitute* the following :—

"A copy of every order under sub-section (1) or under this sub-section shall be communicated to the Board of Revenue and also to every landholder concerned and every applicant under sub-section (2) or this sub-section by Registered Post Acknowledgment due."

The amendment was duly seconded.

SRI R. SRINIVASA IYER : Sir, I move the following amendment :—

"In the proposed amendment to clause 39, Madras Act XXVI of 1948, in item (*a*) (4-*a*) (ii), *add* at the end the words " by Registered Post Acknowledgment due ".

The amendment was duly seconded.

DEPUTY SPEAKER : The clause and the amendments are before the House for discussion

23rd February 1961]

SRI R. SRINIVASA IYER: என்னுடைய மூன்றாவது திருத்த மானது இந்தத் திருத்தத்திலே இருந்து ஏற்பட்டது. இந்த இரண்டாவது கிளாசிலே "ஏ" என்கிற, சப்-கிளாசிலே 2 (i) என்பதிலே கீழ்க்கண்டவாறு இருக்கிறது :—

"A copy of every order passed under this sub-section shall be communicated to the Board of Revenue, and also to every land-holder concerned, and every applicant under this sub-section and sub-section (2)."

"கம்யூனிகேட்" என்று இருக்கிறது. சாதாரணத் தபாலிலே அனுப்பலாம் என்ற அர்த்தம்பட இருக்கிறது. சாதாரணமாக ஒரு தாசில்தார் ஆபீசிலுள்ள பியூன் ஒரு தபாலை எடுத்துக்கொண்டு போய், உரிய நபர் இல்லை என்று வந்து சொல்லி விடுவதற்கும் இதில் இடமிருக்கிறது. ஆகவே, இதை "பை ரிஜிஸ்டர்ட் போஸ்ட், அக்னாலெஜ்மெண்ட் டியூ" என்று போட்டால் கொஞ்சம் சவுகரியமாக இருக்குமென்பதுதான் என்னுடைய திருத்தம். ஒருவருடைய நிலத்தை எடுத்துக்கொண்டு, அதற்கான பேசிக் சம் நிர்ணயிக்கப்பட்டு, கையெழுத்துப் போட்டுக் கொடுக் கப்படுகின்ற ஒரு கடிதத்தை "பை ரிஜிஸ்டர்ட் போஸ்ட், அக்னா லெஜ்மெண்ட் டியூ" என்று போட்டு, அனுப்புவது மிகவும் நல்லது என்று நான் நினைக்கிறேன். எனக்கு வந்துள்ள அறிவிப் பிலிருந்து, இதற்கு அதிகச் செலவாகும் என்று சொல்லப்படுகிறது. இது ஒரு பெரிய செலவு அல்ல. செலவாகவும் கருதக்கூடாது. அப்படி ரிஜிஸ்தர் மூலம் அனுப்பாவிட்டால், நேராகச் சென்று தபாலைக் கொடுத்து, கையெழுத்து வாங்கிக் கொண்டு வருவதும் சாத்தியமில்லை. ஆகையால் இப்படிப் போட்டால்தான், தபாலுக் குரிய நபர் இல்லாவிட்டாலும், "ரெபியூஸ்ட்" என்று போட்டுத் திரும்பி வந்தால் பின்னால் எடுத்துச் சொல்வதற்கும் வசதியாக இருக்கும். இது நில ஆர்ஜிதம் சம்பந்தமானது. ஒருவருடைய சொத்தை ஆர்ஜிதம் செய்து, காம்பென்சேஷன் கணக்குப் போட்டு, பேசிக் அன்னியூவல் சம் கணக்குப் போட்டு, ஒருவருக்கு கடிதம் அனுப்பும்போது அதை ரிஜிஸ்தர் தபாலில் அனுப்புவதுதான் நல்லது. இது சப்-கிளாஸ் 4-ல் இருக்கிறது. அமைச்சர் அவர்கள் கொண்டுவரும் சட்டத்தில் இப்போது விவாதிக்கப்படுவது 39-வது செக்ஷன். இதில் "கம்யூனிகேட்" என்றுதான் போட்டிருக்கிறது. அதாவது சாதாரணத் தபாலில் அனுப்பலாம் என்றிருக்கிறது. என்னுடைய ஒரு திருத்தம், இதை மாற்றி ரிஜிஸ்தர் தபாலில் அனுப்ப வேண்டுமென்பது. ஐந்தாவது ஷரத்தினுலே கீழ்க் கண்டவாறு சொல்லப்பட்டிருக்கிறது.

"In the proposed amendment to clause 39, Madras Act XXVI of 1948, in item (*a*) (4-*a*) (ii), *add* at the end the words "by Registered Post Acknowledgment due".

இரண்டும் ஒரே திருத்தம்தான். முதல் திருத்தத்தை ஒப்புக் கொண்டால், அதற்குள்ள திருத்தத்தை இரண்டாவது திருத்தத் திலே போட்டால் போதுமானது. ஆகவே ஒருவருடைய

சொத்தை அல்லது எஸ்டேட்டை எடுத்துக்கொண்டு, அன்னியூவல் பேசிக் சம் நிர்ணயிப்பதில் ரிவியூ செய்யும்போது, எந்தெந்த நிலத்தை, எந்தெந்த முறையிலே எடுத்துக் கொண்டோம் என்பதை அவர்களுக்கு அனுப்பி, அதை அவர்கள் ஆட்சேபித்து டிரிபியூனலுக்குப் போகும்போது சொல்லப்படுகின்ற புகார்களைத் தவிர்ப்பதற்காக, அவர்களுக்கு அனுப்பப்படும் தபால்களை "ரிஜிஸ்தர் போஸ்ட் அக்நலெஜ்மெண்ட் டியூ" மூலம் அனுப்புவது தான் நல்லது என்பதைக் கவனிக்க வேண்டும். அந்த முறையில் என்னுடைய திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

SRI S. LAZAR : ஸார், கனம் சீனிவாச அய்யர் அவர்கள் கொண்டு வந்த திருத்தங்களின் கருத்தை சர்க்கார் ஏற்றுக் கொண்ட போதிலுங்கூட, இந்தத் திருத்தங்களை ஏற்றுக் கொள்வதற்கில்லை. காரணம், இக்கருத்து பல சமயங்களில் விவாதிக்கப்பட்டு, ஏற்கெனவே விதிகளிலே ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறது. அப்படி இருக்கும்போது, இதைச் சட்டத் திலேயும் செய்ய வேண்டுமென்பதில்லை.

The Director of Settlements shall communicate every order passed under sub-section (2) and every other sub-section to the landlord concerned and also every applicant under sub-section (2) in the manner specified in the Bill by sending the orders, free of cost, by registered post acknowledgment due or by getting it served by a messenger.

என்று "ரிஜிஸ்தர் போஸ்ட் அக்நலெட்ஜ்மெண்ட் டியூ" என்று விதிகளிலே ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதால், இதைச் சட்டத் திலும் செய்யவேண்டிய அவசியமில்லையாகையால், நான் இந்தத் திருத்தத்தை ஆதரிக்க விரும்பவில்லை.

SRI T. SAMPATH : It will be all right if there is provision in the Rules.

THE HON. SRI M. A. MANICKAVELU : நான் சொல்ல வேண்டிய பதிலையே ஒருவகையாக ஸ்ரீ லாசர் அவர்கள் சொல்லி விட்டதால், இந்தத் திருத்தம் அவசியமில்லை என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

SRI R. SRINIVASA IYER : ஸ்ரீ லாஸர் அவர்கள் வாசித்த ரூல் செக்ஷன் 39-ல் மட்டும்தான் வருகிறது. 4 (2) (i)-ல் வரவில்லை. ஆகவே இந்தத் திருத்தத்தை அந்த ரூலிலே செய்துவிட்டால் போதும்.

*THE HON. SRI M. A. MANICKAVELU : These things should be provided for in the Rules. It will be rather clumsy to put it in the Act. So if it is not specifically there in the sub-section, we will provide in the rules.

The amendments were by leave, withdrawn.

Clause 2 was put and carried.

Clauses 3 and 1 were put and carried.

Preamble.

DEPUTY SPEAKER : The motion is—

'That the preamble do stand part of the Bill.'

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I move the following amendment :—

"In the preamble *for* the words 'eleventh year' *substitute* the words 'twelfth year'."

This Bill was originally proposed in 1960. But now we are in February 1961. So this amendment is brought forward.

DEPUTY SPEAKER : The question is—

"In the preamble, *for* the words 'eleventh year' *substitute* the words 'twelfth year'."

The amendment was put and carried.

The preamble, as amended, was put and carried.

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I move—

"That the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1961 (L.A. Bill No. 5 of 1961) as amended be passed."

DEPUTY SPEAKER : Motion moved—

"That the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1961 (L.A. Bill No. 5 of 1961) as amended be passed."

SRI T. SAMPATH : உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மசோதா சட்டமாகும் தருணத்திலே ஓரிரண்டு கருத்துக்களைச் சொல்ல நான் விரும்புகிறேன். கனம் அமைச்சர் அவர்கள் இந்தச் சட்டம் மிகச் சிக்கலானது என்று குறிப்பிட்டார்கள். இது உண்மையிலேயே ஒரு சிக்கலான சட்டம்தான். 1948-ம் வருஷத்திலே 26-வது சட்டமாக இயற்றப்பட்டது. அதற்குப் பிறகு தொடர்ந்தாற்போல் பல சட்டங்கள் ஏற்பட்டதை. பொது விவாதத்திலே கலந்துகொண்ட நண்பர்கள் ஸ்ரீ லாசர், ஸ்ரீ சீனிவாச அய்யர் ஆகியோர் குறிப்பிட்டார்கள். கனம் அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்போது, இந்தக் கஷ்டங்களை நிவர்த்திக்கக் கூடிய வகையிலே திருத்த மசோதா கொண்டு வருவதாகக் குறிப்பிட்டார்கள். அதைக் குறித்து நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். அதிலே ஓரிரண்டு கஷ்டங்களைக் குறிப்பிட விரும்புகிறேன். ஒருசில கஷ்டங்களை நண்பர் ஸ்ரீ சீனிவாச அய்யர்

[Sri T. Sampath] [23rd February 1961

அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். அதாவது அட்வான்ஸ் நஷ்ட ஈடு கொடுப்பது. பின்னால் அவர்களிடமிருந்து அந்த அட்வான்ஸ் பங்கு முறையை கணக்குப் பார்த்து வாங்கிக் கொள்ளுவது என்பது. இதிலே பல கஷ்டங்கள் ஏற்படுகிறது.

DEPUTY SPEAKER : I think the Hon. Minister has already replied to that point. How is it relevant now?

SRI T. SAMPATH : The Hon. Minister may consider those points.

இரண்டாவது, இந்த எஸ்டேட்டுகளை எடுத்துக்கொண்டு, அதற்குப் பதில் அவர்களுக்கு காம்பன்சேஷன் பணம் கொடுப்பதில் சிக்கல்கள் ஏற்படுகிறது. பட்டாதார் யார் என்று கண்டு பிடிப்பதிலே பல என்கொயரிகள் மூலம் காலதாமதம் ஏற்படுகிறது. தவிர, இந்த நஷ்ட ஈட்டை முடிவு செய்வதிலே, குறிப்பிட்ட ஒரு பட்டாதாருக்கு கொடுத்த நஷ்ட ஈட்டை வைத்துக்கொண்டு இந்த நஷ்ட ஈடுகளையும் கணக்கிட்டால் சவுகரியமாக இருக்கும். ஆகவே இவைகளையெல்லாம் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : இதையெல்லாம் எதிர் பார்த்து முன்னாலேயே பதில் சொல்லிவிட்டேன். இதைப்பற்றி நான் அங்கத்தினர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுவது என்னவென்றால், அவர்களுக்கு இந்த சட்டம் நன்றாகத் தெரிந்திருப்பதினால், அந்த விஷயங்களையெல்லாம் எழுதி அனுப்பினால் அதையெல்லாம் சேர்த்து ஒரு விதமாக ஒரு திருத்த மசோதா கொண்டு வரலாம்.

DEPUTY SPEAKER : The question is—

"That the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1961 (L.A. Bill No. 5 of 1961) as amended be passed."

The motion was put and carried and the Bill, as amended, was passed.

(5) THE MADRAS ESTATES LAND (REDUCTION OF RENT) AMENDMENT BILL, 1961 (L.A. BILL NO. 2 OF 1961).

* THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I beg to move—

'That the Madras Estates Land (Reduction of Rent) Amendment Bill, 1961 (L.A. Bill No. 2 of 1961) be taken into consideration'.

Mr. Speaker, Sir it has become necessary to amend the Madras Estates Land (Reduction of Rent) Act, 1947, in the following circumstances :—

23rd February 1961] [Sri M. A. Manickavelu]

Under section 1 (2) of the Madras Estates Land (Reduction of Rent Act, 1947, the Act applies to all estates as defined in section 3, clause (2) of the Madras Estates Land Act, 1908, i.e., also to whole inam villages which became estates by virtue of the Madras Estates Land (Third Amendment) Act, 1936, to which the Abolition Act does not apply. The Madras Estates Land Act continues to apply to these whole inam villages and there can even now be conversions of private lands into ryoti lands under section 181 of that Act in those whole inam villages, while in the other estates to which the Abolition Act applies, there could have been or can be conversions of private lands into ryoti lands up to the date on which they were taken over or are taken over, under the Abolition Act, as the case may be. According to section 2 (2) (*a*) of the Rent Reduction Act, the Special Officer for Rent Reduction in Estates has first to determine the average rate of cash rent per acre prevailing at the commencement of the Act for each class of ryoti land in the principle village and under section 3 (3) of the Act, and order under section 3 (2) shall take effect from the commencement of fasli 1357. Thus the Rent Reduction Act would appear to apply only to the ryoti lands in an estate to which it applies, which were in existence at the commencement of the Act, i.e., which were in existence on 7th January 1948 and not to the ryoti lands which came into existence on or after that date. A doubt arose whether the Act should not be held to apply to all lands in an estate which were already ryoti lands at the commencement of the Act on 7th January 1948 or became ryoti lands up to the date of publication of the notification under section 3 (2) of the Act. But the wording of the proviso to section 3 (2) of the Act and the wording of section 2 (2) (a) of the Act do not seem to permit such an interpretation. It would be anomalous if in an estate village, for the ryoti lands in which reduced rates of rent are fixed under the Reduction of Rent Act, the landholder converts private lands into ryoti lands on or after 7th January 1948 and begins to levy any rent he likes in respect of such lands and the ryots are denied the benefit of rent reduction. This will be opposed to the scheme and intention of the Reduction of Rent Act. It was therefore suggested that the reduction of rent Act should be amended so as to make it applicable to ryoti lands in estates, to which the Act applies, which came into existence on or after 7th January 1948 and that the rates on such lands should be reduced under the Act with effect from the fasli year in which the lands were converted into ryoti lands. This suggestion ensures parity of treatment in regard to lands which became ryoti prior to 7th January 1948 or thereafter and also places the matter beyond doubt. The present Bill seeks to remove the anomalous position mentioned above by making the provisions of the Rent Reduction Act, applicable to ryoti lands in estates (to which the Act applies) which came into existence on or after 7th January 1948. The Bill does not involve expenditure from the Consolidated Fund of the State and therefore no financial memorandum is necessary under rule 89 of the Madras Assembly Rules. No memo-

randum regarding delegated legislation is necessary under rule 90 of the said rules as the Bill does not involve delegation of the legislative power.

Sir, to put in a nutshell the Rent Reduction Act applies to the lands which are ryoti on 7th January 1948, but for the lands which have been subsequently converted into ryoti lands the Act does not apply. So we are taking power to apply rent reduction even to lands which might have subsequently become ryoti lands. It is beneficial to ryots. There must be some parity. Simply because they became ryoti subsequently, why should they be denied the advantage of rent reduction? That is the object of the Bill. I request the House, Sir, that the Bill be taken into consideration.

DEPUTY SPEAKER : Motion moved—

'That the Madras Estates Land (Reduction of Rent) Amendment Bill, 1961 (L.A. Bill No. 2 of 1961) be taken into consideration.'

SRI N. K. PALANISAMI : Sir, I move that the Bill be referred to a Select Committee.

SRI S. M. ANNAMALAI : I second the amendment.

DEPUTY SPEAKER : The motion and the amendment are before the House for discussion.

SRI N. K. PALANISAMI : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, 1948-ம் வருஷத்திற்கு பின்னால் ஏற்பட்ட ரயத்துக்களுக்கும் இந்த ரெண்டு ரிடக்ஷன் ஆக்ட் பொருந்தும் என்ற முறையில் இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்த முறையை நான் வரவேற்றாலும், இந்த மசோதா ஒரு 'காம்ப்ரெஹென்ஸிவ்' மசோதாவாக இல்லை. 1908-ம் ஆண்டில் முதல் முதலாக இந்த சட்டம் கொண்டுவரப்பட்டு விவசாயிகளுக்கு இந்த உரிமை வழங்கப்பட்டது. ஆனால் இதை எதிர்த்து ஹைகோர்ட்டு, பிரிவி கவுன்சில் இவைகளில் ஸ்டே போடப்பட்டது. அதன் பின்னாலே 1936, 1937, 1948, 1956 போன்ற வருஷங்களிலே இதற்குத் தகுந்த திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன. இருந்த போதிலும், 1908-ம் வருஷத்திய சட்டத்தில் இருக்கக்கூடிய 'லாண்டு ஹோல்டர்', ரயத்துகளைப்பற்றிய ஷரத்துகளில் மாற்றம் ஏற்படாததன் காரணத்தினால் இன்னும் கோர்ட்டுகளில் விவசாயிகளுக்கு பலவித கஷ்டங்கள் ஏற்படுகின்றன. உதாரணமாக 1948-ம் வருஷத்திய எஸ்டேட் ஒழிப்பு சட்டத்தை எடுத்துக் கொண்டால் அந்த சட்டத்தில் சர்க்கார் ரெண்டு ரிடக்ஷன் மூலமாக வரி வசூல் செய்த பின்னாலும் கூட, இந்த கிராமங்கள் பூராவும் தனிப்பட்டவர்கள் கிராமங்களாக இருக்கின்றன. அந்த இனாம் பெயர் இன்னும் ஒழிக்கப்படவில்லை. அதனால் என்ன கஷ்டம் ஏற்படுகிறது என்றால். . . .

23rd February 1961]

DEPUTY SPEAKER : The hon. Member cannot take up the time of the House unnecessarily. These are all irrelevant points. This is a simple amending Bill and he cannot speak about some other Act. I am not going to allow him to speak on irrelevant points. I want him to confine himself to the Bill that is before the House. I want him to read the Statement of Objects and Reasons in the Bill. Without going into it the hon. Member cannot discuss irrelevant points and other Acts unnecessarily.

SRI N. K. PALANISAMI : ஆகவே, இப்படிப்பட்ட குறைபாடுகள் இருப்பதன் காரணமாக 'காம்ப்ரெஹென்ஸிவ்' பில் கொண்டு வரவேண்டும். கனம் மந்திரி அவர்கள் அம்மாதிரி ஒரு விரிவான மசோதா கொண்டுவருவதாக இரண்டு, மூன்று வருஷங்களாகச் சொல்லியும், அதற்குத் தகுந்த முறையிலே கொண்டுவரப் படவில்லை. 1956-ம் வருஷத்தில் இருந்து, ரயத்தாக புதிதாக வரக்கூடியவர்களுக்கு, இந்த வரி வசூலுக்கு ரெண்டு ரிடக்ஷன் ஆக்ட் அப்ளை செய்யப்படப்போகிறது. இதன் மூலம் 1956-ம் ஆண்டு முதல் நான்கு வருஷங்களுக்கான வரி வசூல் செய்யப்படும். அது மொத்தமாக வசூல் செய்யப்படும் என்று இருக்கிறது. அப்படி மொத்தமாக வசூல் செய்யும்பொழுது மிகவும் இடைஞ்சல் ஏற்படும். மூதலாவதாக வரி வசூல் பிரகாரம் வெள்ளைக் காகிதம் கொடுத்து, அதன் மூலம் பூரா பாக்கியையும் வட்டியுடன் வசூல் செய்வது, கொடுக்காவிட்டால் கலப்பை, மாடுகள் போன்ற பொருள்களை ஜப்தி செய்வது என்ற நிலைமை ஏற்பட்டு ராமனாதபுரம் போன்ற பல இடங்களில் பெரிய கஷ்டமாக இருக்கிறது.

DEPUTY SPEAKER : The hon. Member Sri N. K. Palanisami will please resume his seat. I am not going to allow him to speak on irrelevant points which are not before the House.

SRI N. K. PALANISAMI : Here it is clearly prescribed. . .

DEPUTY SPEAKER : His points are not clear to me.

SRI N. K. PALANISAMI : It is only to collect the rent. Please go through the Bill.

DEPUTY SPEAKER : I have gone through the Bill. If he wants to speak he can speak only on the points in the Bill.

SRI N. K. PALANISAMI : அவர்கள் ரயத்தா அல்லது ரயத்து இல்லையா என்பதைப்பற்றி கலெக்டர் முன்னால் டிக்லரேஷன் செய்ய வேண்டும். அதை ஏற்கெனவே செய்தாகிவிட்டது. அப்படி செய்யக்கூடிய சமயத்தில் அதை ஒரு குறிப்பிட்ட டயத்தில் செய்யவேண்டும் என்று இருக்கிறது ஆனால், குறிப்பிட்ட டைம் என்ன என்பது விவசாயிக்குத் தெரியாது. ஆகவே, ரயத்தா, இல்லையா என்ற பிரச்னையை 'ரீஓபன்' செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

11-30 a.m. * **SRI R. SRINIVASA IYER:** இந்த ஒரு சின்ன மசோதா பொறுக்குக் கமிட்டிக்குப் போகவேண்டிய அவசியமில்லை. சாஸ்வதக் குடிக்காணியாட்சி பாத்தியமுள்ள குடிகளுக்கு சௌகரியம் பண்ணிக்கொடுக்கவேண்டுமென்ற அடிப்படையில் கொண்டுவரப்பட்ட மசோதா இது. இப்பொழுதே 10, 12 வருஷங்கள் கழித்து இந்த மசோதாவைக் கொண்டுவந்திருக்கிறோம். இன்னும் கொஞ்சம் காலதாமதம் செய்யலாமென்று எதிர்கட்சிகள் சொல்லுவது விந்தையாக இருக்கிறது. குடிக்காணியாட்சி பாத்தியம் ஏற்கெனவே இருந்தால் அதற்கு சட்டம் வந்துவிட்டது, விதிகளும் போட்டாய்விட்டது. அதன்படி நடந்து வருகிறது. 1947-ம் வருஷத்துச் சட்டத்திற்குப் பிறகு ஏற்பட்ட குடிக்காணியாட்சி பாத்தியமுள்ளவர்களுக்காக இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதிலே ஒருசில விஷயங்களை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

ஒரு எஸ்டேட் என்று சொன்னால் இரண்டுவித அடிப்படையில் இருக்கலாம். எஸ்டேட் லாண்டு ஆக்டின்படி எஸ்டேட் ஆக இருக்கலாம் அல்லது 1936-ம் வருஷத்துச் சட்டப்படி எஸ்டேட்டாக இருக்கலாம். எஸ்டேட் இல்லாததற்கு இது பொருந்தாது. எஸ்டேட் இல்லாததற்கும் புதிதாக ஒரு சட்டம் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எஸ்டேட்டாக இருந்தால் என்றைக்கு எஸ்டேட் ஆனதோ அன்றைக்கே குடிக்காணியாட்சி பாத்தியமும் ஏற்பட்டுவிட்டது. ரயத்வாரி நிலம் ஏற்படுவதானால், எஸ்டேட் ஆக்ட் 181-வது செக்ஷன் பிரகாரம் பிரைவேட் லாண்டு ஹோல்டர் குடிக்காணியாட்சி "கார்வ் அவுட்" பண்ணிக் கொடுத்தால்தான் வரமுடியுமென்று இருக்கிறது. அந்த வகையிலே 1947-ம் வருஷச் சட்டத்திற்குப் பிறகு வருமென்று தோன்றவில்லை. ஒரே ஒரு தீர்ப்பு ஹைகோர்ட்டிலே வந்ததாக ஞாபகம் இருக்கிறது. அது அந்தச் சட்டத்திற்குப் பிறகு வந்ததாகத் தெரிகிறது. அதற்கு இந்த ரெண்ட் ரிடக்ஷன் சட்டம் பொருந்தாது என்று இருக்கிறது. இதுமாதிரி கேஸ்கள் அபூர்வமாக இருந்தாலும்கூட குடிக்காணியாட்சி பாத்தியம் உள்ளவர்களுக்கு ஒரு நன்மை செய்யவேண்டுமென்று சொல்லும்பொழுது as a matter of abundant caution ஒரு பவர் வேண்டியதாயிருக்கிறது. "ரயட்டி" நிலம் என்றால் என்ன என்று 1908-ம் வருஷத்துச் சட்டத்திலே செக்ஷன் 3 (16)-ல் சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு லாண்டுஹோல்டருக்கு ரெண்ட் கொடுத்து, குடிக்காணி பாத்தியம் ஒரு ரயத்துக்கு வந்தால் அது ரயட்டி லாண்ட் ஆகும். It will relate back to the original date when the estate was formed. ஒன்று 1908-ம் வருஷத்துச் சட்டப்படி எஸ்டேட் ஆக இருக்க வேண்டும் அல்லது 1936-ம் வருஷச் சட்டப்படி இருக்கவேண்டும். குடிகளுக்குச் சௌகரியத்தைக் கொடுக்கக்கூடிய இந்த மசோதாவிற்கு ஆட்சேபணை இருக்கத் தேவையில்லை. ஆகவே

23rd February 1961] [Sri R. Srinivasa Iyer]

இந்த மசோதா பொறுக்குக் கமிட்டிக்குப் போகவேண்டிய அவசியமில்லை என்று சொல்லிக்கொண்டு இந்த மசோதாவை ஆதரிக்கிறேன்.

SRIMATHI T. N. ANANDANAYAKI : உதவி சபாநாயகர் அவர்களே, எனக்கு முன்பு பேசிய கனம் பட்டுக்கோட்டை அங்கத்தினர் சொன்னமாதிரி இந்த நல்ல மசோதாவை, ரயத்துகளுக்காகவே ஒரு கட்சி வைத்திருக்கிறோம் என்று சொல்லக் கூடிய ஒரு கட்சி "இந்த மசோதாவைப் பொறுக்குக் கமிட்டிக்கு விடுங்கள், கொஞ்சம் காலதாமதம் ஆகட்டும்" என்று சொல்லுவது விந்தையாக இருக்கிறது. பொது மக்களுடைய அபிப்பிராயத்திற்கு இதை விடுங்கள் என்று சொல்லாமல், பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்புங்கள் என்று சொன்னதைப் பற்றி மகிழ்ச்சியடைகிறேன். 1947-ம் வருஷத்திற்குப் பிறகு எஸ்டேட்டுகளில் கன்வெர்ஷன் இருந்தால் அவைகளுக்கு இந்த சட்டம் செல்லாது என்று நீதி மன்றம் தீர்ப்பு அளித்தவுடனேயே இதைக் கொண்டுவந்திருக்க வேண்டும். 12 ஆண்டு காலமாக நமது அரசாங்கம் தூங்கி விட்டதே என்று நினைத்து வருத்தப்படவேண்டியிருக்கிறது. இந்த நேரத்திலே, ரயத்துகளுக்கு நன்மையைச் செய்ய முன் வந்திருக்கும்பொழுது, அரசாங்கம் எதைச் செய்தாலும் அது நன்மையா, தீமையா என்று ஆராய்ந்து பார்க்காமல், எதிர்க் கட்சியினர் எதற்கும் முட்டுக்கட்டை போடுகிறார்கள் என்று புரிந்து கொள்ளுவதற்கு இப்பொழுது ஒரு வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இந்த மசோதாவை மனப்பூர்வமாக ஆதரித்து, இப்பொழுதாவது, நீதி மன்றத்தினுடைய தீர்ப்பை வைத்துக் கொண்டு மாற்றவேண்டுமென்று யோசித்தார்களே, அதைப்பற்றி மகிழ்ச்சி தெரிவித்துக்கொண்டு அதைத் துரிதமாகக் கொண்டு வருவதற்கு என்ன வழி இருக்குமோ அதைச் செய்தால் ரயத்துகளுக்கு நன்மை ஏற்படும் என்று சொல்லிக்கொள்கிறேன். இது ஒரு சிக்கலான சட்டம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நடைமுறையில் சிக்கல்களைத் தீர்த்துக்கொள்ள முடியும். சிக்கல்களை நீதிமன்றம் எடுத்துக்காட்டியிருக்கிறது. இவ்வளவு நாட்கள் காலதாமதம் செய்ததே தவறு. இந்த நேரத்திலாவது கொண்டு வந்திருப்பதை வரவேற்கிறேன். மேலும் காலதாமதம் செய்வது ரயத்துக்களுக்கும் நல்லதல்ல, ரயத்துகளுக்காக வாழ்கிறோம் என்று சொல்லும் கட்சிக்கும் நல்லதல்ல. ஆகவே பொறுக்குக் கமிட்டிக்கு விடவேண்டுமென்ற திருத்தத்தை கண்யமாக வாபஸ் பெற்றுக்கொண்டால் ரயத்துகளுடைய மனதில் நல்லெண்ணம் ஏற்படும் என்று சொல்லிக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்தச் சட்டத்திலே கொஞ்சம் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இரண்டு சட்டங்கள் இருக்கின்றன என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். ஒன்று 1947-ம் வருஷத்து ரென்ட் ரிடக்ஷன் சட்டம். இன்னொன்று 1948-ம் வருஷத்து ஜமீன் ஒழிப்புச் சட்டம். 1948-ம் வருஷத்துச்

[Sri M. A. Manickavelu] [23rd February 1961

சட்டப் பிரகாரம் இந்த ஜமீன்களை ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு முன்னே அதிகமாக வரி இருப்பதைக் குறைப்பதற்காக இந்தச் சட்டத்தை அமலுக்குக் கொண்டுவந்தார்கள். அது 1947-லே. இந்த ஒழிப்புத் திட்டத்திலே சில எஸ்டேட்டுகள்தான் வரும். சில எஸ்டேட்டுகள் எஸ்டேட் என்று பெயர் இருந்தாலும் கூட இந்த ஒழிப்புத் திட்டத்திலே வரவில்லை. அதைத்தான் 1936-ம் வருஷத்து இனும் என்று சொல்லுவது. அது வேறு விஷயம். இந்த ஒழிப்புச் சட்டம் அமலாவதற்கு முன்பே அதிகமாக இருக்கிற வரியை ஒழிக்க 1947-ம் வருஷத்துச் சட்டம் கொண்டுவந்தார்கள். அந்தச் சட்டம் பிரகாரம் ஏற்கெனவே ரயத்துவாரி நிலமாக இருந்தால் அதற்கு இந்தச் சட்டம் பொருந்தும். ஆனால் அந்தத் தேதிக்குப் பிறகு, அதாவது 1—7—1948-க்குப் பிறகு நிலம் பிரைவேட்டாக இருந்து ரயத்துவாரி ஆகலாம். அப்படி ரயத்துவாரியானால் இந்தச் சட்டம் பொருந்துமா என்ற சந்தேகம் எழுந்தது. ஒருக்கால் இரண்டிற்கும் பொருந்தும் என்று நினைத்திருக்கலாம். பொருந்துமா, பொருந்தாதா என்ற சந்தேகம் ஏற்பட்டதினாலே, பிரைவேட்டாக இருந்து ரயத்துவாரியான நிலத்திற்கு இந்த ரென்ட் ரிடக்ஷன் சட்டத்தைப் பிரயோகிக்கவேண்டுமென்ற தாத்பர்யத்தில் இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. இம்மாதிரி எஸ்டேட்டுகள் ஒன்றிரண்டு இருக்கலாம். அவைகளுக்கும் இந்த அனுகூலம் கிடைக்கவேண்டுமென்பதுதான் நோக்கம். இந்த மசோதாவைப் பொறுக்குக் கமிட்டிக்கு விடவேண்டிய அவசியமில்லை. இது ஒரு சின்ன விஷயம். இப்படியே சட்டத்தை நிறைவேற்றலாமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

The amendment was, by leave, withdrawn.

DEPUTY SPEAKER : The question is—

"The Madras Estates Land (Reduction of Rent) Amendment Bill, 1961 (L.A. Bill No. 2 of 1961) be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2 was put and carried.

Clause 3 :

DEPUTY SPEAKER : The motion is—

"That clause 3 do stand part of the Bill."

SRI N. K. PALANISAMI : Sir, I move—

"In the proposed amendment to section 3, Madras Act XXX of 1947, in item (iv) (a), insert the following as provisos :

'Provided that such arrears of rent shall be recovered in 6 annual instalments;

23rd February 1961] [Sri N. K. Palanisami]

Provided further that the Collector may in his discretion allow any remission thereof in respect of any lean agricultural year'."

The amendment was duly seconded.

SRI R. SRINIVASA IYER : Sir, this amendment is not within the scope of the Bill. அர்ரியர்ஸ் பற்றி பழைய ஆக்டிலேயே இருக்கிறது.

DEPUTY SPEAKER : The hon. Member wants to add a proviso. But the hon. Member Sri Palanisami should know that there is a provision in the main Act and therefore there is no need for the amendment. If he has got the original Act he may go through it or he may get a copy from the Secretary.

SRI N. K. PALANISAMI : Sir, I have seen it.

SRI S. LAZAR : Sir, let Mr. Palanisami read his amendment.

DEPUTY SPEAKER : All right. Let him speak now.

SRI N. K. PALANISAMI : கனம் சபாநாயகர் அவர்களே, இப்பொழுது சர்க்கார் கொண்டு வந்திருக்கக்கூடிய மசோதா பிரகாரம் ரயத்தி லாண்டுகளுக்கு வரி விதிக்கும்போது 1337-ம் பசலியிலிருந்து அதாவது 1956-ம் வருஷத்திலிருந்து இது வரையிலும் வரி வசூல் செய்வதாகச் சொல்லப்படுகிறது. அப்படியென்றால் கிட்டத்தட்ட நான்கு வருஷ வரி பூராவும் ஒரே தடவையில் வசூல் பண்ணுவதாக இருக்கும். அப்படி இருக்கக் கூடாது. முதலில் அந்த முறை இல்லாமல் அந்த பாக்கியை எல்லாம் ரத்து செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அல்லது அந்த பாக்கியை ஆறு வருஷ தவணையிலாவது வசூல் செய்வதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளும் அளவில் திருத்தம் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அது மட்டுமல்ல பல வருஷ வரியை வசூல் செய்யும்போது, பல வருஷங்களாக போதுமான மழை இல்லாமல் பயிர்கள் எல்லாம் கெட்டிருக்கின்றன. அதைப்பற்றி கலெக்டருக்கு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அவைகளுக்கு எல்லாம் ரெமிஷன் கொடுக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். அவைகளை வற்புறுத்துவதற்குத்தான் நான் இந்த திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். ஆகவே என்னுடைய திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, the main object of the Bill is to apply the rent reduction to the lands converted into ryoti lands later on. As for the payment of rent, there is what is called 'kistbandi', that is, the rent normally due is paid in so many instalments in January, February, March. etc. But there is no provision for the arrears of rent to be paid in instalments. What the hon. Member wants is that even the arrears should be paid in instalments and there is no scope for that, but,

for ordinary normal rent there is the 'kistbandi'. After all, we are reducing the rent and even for that he wants all these privileges and that is not within the scope of the Bill. So, I cannot accept his amendment.

The amendment was put and lost.

Clause 3 was put and carried.

Clauses 4, 5 and 1 were put and carried.

The Preamble.

DEPUTY SPEAKER: The motion is—

'That the Preamble do stand part of the Bill.'

THE HON. SRI M. A. MANICKAVELU: Sir, I move the following amendment :—

'In the Preamble, for the words "Eleventh Year", substitute the words "Twelfth Year".'

DEPUTY SPEAKER: The question is—

'In the Preamble, for the words "Eleventh Year", substitute the words "Twelfth Year".

The amendment was put and carried.

The Preamble as amended was put and carried.

THE HON. SRI M. A. MANICKAVELU: Sir, I move—

'That the Madras Estates Land (Reduction of Rent) Amendment Bill, 1961 (L.A. Bill No. 2 of 1961) as amended be passed.'

DEPUTY SPEAKER: The question is—

'That the Madras Estates Land (Reduction of Rent) Amendment Bill, 1961 (L.A. Bill No. 2 of 1961) as amended be passed'.

The motion was put and carried and the Bill as amended was passed.

(6) THE TRAVANCORE–COCHIN AGRICULTURAL INCOME-TAX (MADRAS AMENDMENT BILL, 1961 (L.A. BILL NO. 3 OF 1961)

THE HON. SRI M. A. MANICKAVELU: Sir, I move :—

"That the Travancore-Cochin Agricultural Income-tax (Madras Amendment) Bill, 1961 (L.A. Bill No. 3 of 1961), be taken into consideration".

The Travancore-Cochin Agricultural Income-tax Act, 1950 (Travancore–Cochin Act XXII of 1950) is in force in the Kanyakumari district and the Shencottah Taluk of the Tirunelveli district. There is no provision in the Travancore–Cochin Act for the collection of the admitted tax in a summary manner in advance of

ஸ்கீமாகப் போட்டுச் செய்யவேண்டும் என்பதுதான் முக்கியமான நோக்கம். தனித்தனியாக அமுல் நடத்துவதாக இருந்தால் அது முடியவில்லை. பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. செலவும் அதிகமாக ஆகிறது. ஆகவேதான் இப்படிப்பட்ட திட்டம் வகுக்கப்படுகிறது.

குறிப்பிட்ட ஒரு இடத்தில் இப்பொழுது 400 எக்கர் நிலம் வாங்கினால், அதற்குத் தண்ணீர் வசதி, சாக்கடை வசதி முதலியவைகளெல்லாம் ஏற்படுத்துவதற்குத் திட்டம் போடவேண்டும். அத்துடன் ஒவ்வொரு இலாகாவுக்கும் தேவயான இடம் ஒதுக்க வேண்டும். அதாவது, இன்டஸ்ட்ரியல் ஹௌஸிங்குக்கு இத்தனை எக்கர் ஹரிஜனங்களுக்கான ஹௌஸிங் ஸ்கீமுக்கு இத்தனை எக்கர், ஸ்லம் க்ளியர்ன்சுக்கு இத்தனை எக்கர், லோ இன்கம் க்ரூப் ஹௌஸிங் ஸ்கீமுக்கு இத்தனை எக்கர் என்று ஒதுக்கினால் திட்டம் நன்றாக நடக்கும். அத்துடன் கொஞ்சம் மலிவாகக் கூட வீடு கட்டும் நிலைமை ஏற்படும். இதை ஒழுங்குபடுத்துவதற்குத்தான் சட்டம் கொண்டுவருகிறோம்.

பல காரியங்கள் செய்யவேண்டும் என்பதையெல்லாம் கனம் அங்கத்தினர்கள் சொன்னார்கள். நமக்குத் தேவைக்கான எல்லாக் காரியங்களையும் எல்லா இடங்களிலும் செய்துவிடவும் இல்லை. செய்து விட்டதாகச் சொல்லவும் இல்லை. நமக்கு வேண்டுமென்ற தேவை அளவுக்குத் துணி உற்பத்தி செய்யவில்லை, உணவு உற்பத்தி செய்யவில்லை, தேவை அளவுக்குப் புளி, மிளகாய் உற்பத்தி செய்யவில்லை. தேவை அளவுக்கு வீடுகளும் கட்டப்படவில்லை. அதை யாரும் செய்துவிட்டதாகச் சொல்ல முடியாது. தேவை அளவுக்கு வீடுகள் கட்டவேண்டும் என்பதற்காகத்தான் முயற்சி எடுத்துக் கொள்ளப்படுகிறது. இந்த முயற்சிக்கு எல்லோரும் பேராதரவு கொடுக்கவேண்டுமென்றும் இந்த மசோதாவை அங்கீகரிக்கும் படியும் கேட்டுக்கொள்கின்றேன்.

Mr. SPEAKER : The question is—

'That the Madras State Housing Board Bill, 1961 (L.A. Bill No. 31 of 1960) as amended be passed.'

The motion was put and carried and the Bill as amended was passed.

IV.—SITTINGS OF THE HOUSE.

Sri M. KALYANASUNDARAM : சபை கூடும் தினங்களைப் பற்றி அனுப்பியிருக்கும் சுற்றறிக்கையில் பிப்ரவரி 27-ம் தேதியன்று சபை கூடும் என்று கண்டிருக்கிறது. 25-ந் தேதியன்று நிதி அமைச்சர் அவர்கள் பட்ஜெட்டைச் சமர்ப்பிப்பார். 26-ந் தேதி ஞாயிற்றுக்கிழமையாதலால் அன்று விடுமுறை ஆகிவிடுகிறது. 27-ந் தேதி ஒரு நாள் சபை கூடின பிறகு பிப்ரவரி 28-ம் தேதியும் மார்ச் 1-ந் தேதியும் ஸென்ஸஸ் எடுப்பு காரணமாக விடுமுறை நாட்களாகின்றன. 27-ந் தேதியன்றும் சபையை ஒத்திப்போடுவது

23rd February 1961] [Sri M. Kalyanasundaram]

நலமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். காரணம், மத்திய சர்க்கார் பட்ஜெட் 28-ந் தேதி சமர்ப்பிக்கப்படும். அதையும் படித்து விட்டு, நம் ராஜ்ய சர்க்காருடைய பட்ஜெட்டையும் படித்துவிட்டு, விவாதத்தில் கலந்துகொள்வதற்கு வசதியாக இருக்கும்பொருட்டு, பொது விவாதத்தை மார்ச் 2-ந் தேதியிலிருந்து தொடர்ந்து ஐந்து நாட்கள் வைத்துக்கொள்ளலாம். அதற்குப் பிறகு தொடர்ந்து மான்யங்களை தனித் தனியாக எடுத்துக்கொள்ளலாம். இந்த யோசனையை ஆலோசிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER : அரசாங்க சார்பில் என்ன அபிப்பிராயம் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

* THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, the Government have no objection to the proposal.

MR. SPEAKER : The suggestion put forward by the hon. Member, Sri M. Kalyanasundaram is this. On the 25th February the Hon. Finance Minister will be presenting the Budget. 26th February is a holiday being Sunday. 28th February and 1st March are Census holidays. Originally we decided to sit on the 27th February 1961 also. The hon. Member Sri M. Kalyanasundaram suggests that the Assembly need not meet on that date. If that is the desire of the House, I have no objection and the hon. Member may move a motion.

SRI M. KALYANASUNDARAM : Sir, I move—

'That the House need not sit on Monday, the 27th February 1961.'

The motion was duly seconded.

The motion was put and carried.

MR. SPEAKER : The Assembly will adjourn on the 25th February 1961 and will meet again at 10 a.m. on Thursday, the 2nd March 1961.

III.—GOVERNMENT BILLS—*cont.*

(4) THE MADRAS ESTATES ABOLITION AND CONVERSION INTO RYOTWARI AMENDMENT BILL, 1961 (L.A. BILL NO. 5 OF 1961).

* THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I move—

'That the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1961 (L.A. Bill No. 5 of 1961), be taken into consideration.'

Under section 39 (1) of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948, the Director of Settlements determines the basic annual sum and the total compensation payable in respect of an estate taken over under the Act. He issues a notice under section 39 (2) and furnishes each landholder who has applied for it with a copy of the data on the basis of which the basic annual sum is proposed to be determined, hears the representations

VI.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A.—Statutory Rules and Orders.

Nil

B.—Reports, Notifications and other papers.

58. *Amendment to Rule* 41 *of the Madras Borstal Schools Rules, issued in G.O. Ms. No.* 4162, *Home, dated* 15*th December* 1960, *under the Madras Borstal Schools Act,* 1925 (*Madras Act V of* 1926).

59. *Short Review of the activiities of the office of the Registrar of Firms and the Labour Department for the first half year* 1960.

60. *Notification issued with G.O. Ms. No.* 4931, *I.L.C.* (*Co-operation*), *dated* 26*th October* 1960 *under the Madras Co-operative Societies Act,* 1932 (*Madras Act VI of* 1932).

61. *Amendment to Rule* 17 *of the Management of the Child Welfare Home for Destitutes and Vagrant Children in the city of Madras Rules,* 1958 *issued in G.O. Ms. No.* 3921, *Home, dated* 30*th November* 1960 *under the Madras Children Act,* 1920 (*Madras Act IV of* 1920).

Appendix I.

[Vide answer to the starred question No. 389 asked by Sri V. K. Kothandaraman at the meeting of the Legislative Assembly held on 23rd February 1961, page 308 supra.]

Statement showing the districtwise figures of area under arecanut, tea, coffee and rubber in the Madras State for the year 1958–59.

District.	Area under.							
	Arecanut (betelnut).		Tea.		Coffee.		Rubber.	
	Acres.	Hectares.	Acres.	Hectares.	Acres.	Hectares.	Acres.	Hectares.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)
Chingleput	..	..	..	..	..	..	..	..
South Arcot	1	..	..	..	..	..	..	..
North Arcot	3	1	..	..	..	..	..	..
Salem	1,135	460	1	..	10,708	4,333	52	21
Coimbatore	1,715	694	25,252	10,219	3,245	1,313	144	58
Tiruchirappalli ..	3	1	..	..	..	..	..	..
Thanjavur	35	14	..	..	..	..	18	7
Madurai	499	202	2,544	1,030	16,896	6,878	409	166
Ramanathapuram ..	..	..	..	..	..	..	..	..
Tirunelveli	56	23	21	8	336	136	76	31
The Nilgiris	..	..	43,752	17,706	21,992	8,900	791	320
Kanyakumari ..	1,416	573	1,104	447	127	52	8,754	3,543
State ..	4,863	1,968	72,674	29,410	53,404	21,612	10,244	4,146

NOTE.—Figures of area shown in the statement above are according to the Season and Crop Report for 1958–59 now under compilation.

[23rd February 1961

APPENDIX II.

[Vide answer to the starred question No. 421 asked by Sri A. Vedarathanam at the meeting of the Legislative Assembly held on 23rd February 1961, page 319 supra.]

Serial number and name of hospital.	*Number of beds.*
(1)	(2)
1 Government Thiruvotteeswarar Tuberculosis Hospital, Otteri, Madras.	78
2 Government Tuberculosis Sanatorium, Tambaram, Chingleput district.	548
3 Government Tuberculosis Hospital, Nagercoil, Kanyakumari district.	325
4 Government Tuberculosis Sanatorium, Austinpatti, Madurai district.	100
5 Rajaji Tuberculosis Sanatorium, Tiruchirappalli ..	168
6 Mahatma Gandhi Memorial Tuberculosis Sanatorium, Sengipatti, Sanatorium Post, Thanjavur district.	200
7 Coimbatore Tuberculosis Sanatorium Peelamedu, Coimbatore district.	46
8 Ramalingam Tuberculosis Sanatorium, Perundurai, Coimbatore district.	321
9 Somanathapuram Sanatorium, Devakottai Road Post, Ramanathapuram district.	81
10 Santhosham Memorial Tuberculosis Sanatorium, Chromepet, Chingleput district.	60
11 Tuberculosis Sanatorium, Caper Hills, South Arcot district.	75